Registered with the Registrar of Newspaper for India under RNI No: TNTAM/2010/32978






# இந்துமதி

# கண் சிமிட்டும் மின்மினிகள்!





1

"ராதீ"

பதில் வரவில்லை.

"ஏ ராதீ"

அதற்கும் பதிலில்லை.

இத்தனைக்கும் ராதி என்கிற ராதிகா கூடத்துத் தரையில் உட்கார்ந்து முதுகை வளைத்துக் கீழே குனிந்து ரிகார்டு நோட்டுப் புத்தகத்தில் எதையோ வரைந்து கொண்டிருந்தாள். அம்மா கூப்பிட்டது காதில் விழுந்தும்



வேண்டுமென்றே பேசாமல் இருந்தாள். அம்மா எதற்குக் கூப்பிடப் போகிறாள். ஏதாவது வேலைக்காகத்தான் இருக்கும் என்கிற அலட்சியம் அவளது மௌனத்தில் தொனிக்க..

சற்றுத் தள்ளிச் சுவரில் சரிந்து உட்கார்ந்து 'She wandered lonely as a cloud' (ஷீ வான்டர்ட் லொன்லி அஸ் எ க்ளவ்ட்) மனப்பாடம் பண்ணிக் கொண்டிருந்த பாலு எரிச்சலுடன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"ஏய் ராதிகா, அம்மா கூப்பிடறாங்களே, காதில் விழலை?"

"ப்ச்சூ!" என்று இன்னும் அலட்சியமாகத் தலையை உயர்த்தின ராதிகா, "கூப்பிட்டால் நீ போயேண்டா" என்றாள்.

"அம்மா என்னைக் கூப்பிடவில்லை. உன்னைத்தான் கூப்பிடறாங்க."

"இந்த அம்மாவுக்கு வேற வேலை இல்லை. காலேஜுக்குக் கிளம்புகிற வரை சும்மா தொணதொணவென்று கூப்பிட்டுக்கிட்டே இருப்பாங்க. நான் டயக்ராம் வரையறேன். இப்போ என்னால் எழுந்து போக முடியாது."

"அம்மா கூப்பிடுவதை விட டயக்ராம் உனக்கு முக்கியமாய்ப் போய்விட்டதா?"

"அவ்வளவு அக்கறை இருக்கிறவனாக இருந்தால் நீதான் எழுந்து போயேன். அம்மா ரசத்திற்குப் புளி கரைத்துத் தரச் சொல்லுவாள், கரைத்துக் கொடு. இல்லையென்றால் அம்மியில் எதையாவது அரைத்துக் கொட்டி, தேங்காய்ச் சில்லுடன் அரைக்கச் சொல்லுவாள், அரைத்துக் கொடுத்து விட்டு வா."

"நான் போய் இதையெல்லாம் செய்து தருகிறேன், நீ ஜம்மென்று மகாராணி மாதிரி வந்து உட்கார்ந்து சாப்பிடு".

"ரொம்ப தாங்க்ஸ்டா. காலையிலேயிருந்து இன்னும் காப்பிகூடக் குடிக்கலை. நிறைய வரைய வேண்டியிருக்கிறது, அதனாலே உட்கார்ந்துட்டேன். இப்போது ரொம்பப் பசிக்கிறது. அப்படியே என் தட்டையும் எடுத்து அலம்பிப் போடு. இதோ குளித்துவிட்டு வந்துவிடுகிறேன்."

அந்தத் திமிரும், அகங்காரமும் கலந்த பதிலால் பாலு என்கிற பாலகோபால் முகம் சிவக்க உள்ளே உரத்த குரலில் கத்தினான்.

"இப்போ எழுந்து வந்தால் ரெக்கார்ட் புத்தகமெல்லாம் காற்றாடியாகப் பறக்கும், ஜாக்கிரதை!"

"ஆமாம், உன் கை என் நோட்டைக் காற்றாடியாகப் பறக்க விடுகிற வரைக்கும் என் கை என்ன பூப் பறிச்சிட்டு இருக்கும்னா நினைக்கறே?"

"பூ பறிக்குமோ, காய் பறிக்குமோ தெரியாது. இன்னிக்கு சாயந்திரத்திற்குள் உன் ரெக்கார்ட் நோட்டுப் புத்தகம் காற்றிலே பறக்கப் போறது மட்டும் நிச்சயம்."

"என் ரெக்கார்ட் நோட்டைத் தொடு, அப்புறம் சொல்கிறேன்."

"என்ன செய்வே?"

"என்னவோ செய்வேன். தைரியம் இருந்தால் முதலில் என் நோட்டுப் புத்தகத்திடம் வாடா பார்க்கலாம்."

"என்ன சண்டை அங்கே" என்று கேட்டுக் கொண்டு, கை வேலையை விட்டுவிட்டு நாகம்மாள் கூடத்திற்கு வர, சட்டென்று இரண்டு பேருமே அடங்கிப் போனார்கள். பாலு மீண்டும் 'When all at once i saw a crowd' (வென் ஆல் அட் ஒன்ஸ் ஐ ஸா எ க்ரௌட்) என்று ஆரம்பிக்க நாகம்மா ராதிகாவைப் பார்த்தாள்.

"என்னடி அமர்க்களம் இங்கே?"

"ஒண்ணுமில்லேம்மா, பாலு ஏதோ சந்தேகம் கேட்டான். பதில் சொன்னேன். ஆமாம், நீ எதற்குக் கூப்பிட்டாய்?"

"காலையில் எழுந்து நேராக நோட்டும், பென்சிலுமாக வந்து உட்கார்ந்து விடு, எனக்கு ஒத்தாசையாக ஒரு வேலை செய்வதில்லை. ஒழுங்காக, நேரத்துக்கு காப்பியையாவது குடிச்சிட்டுப் போகக் கூடாதா?"

"இதோ பெயர்களை மட்டும் குறிச்சிட்டு வந்துடறேம்மா."

அழகாக அம்புக் குறி இழுத்துப் பெயர்களை எழுதி நோட்டுப் புத்தகத்தை மூடி, சுவரிலிருந்த கதவற்ற அலமாரிக்குள் வைத்துவிட்டுத் தற்காலிகமாகப் பாலகோபாலை மறந்து போனவளாகச் சமையலறைக்குள் நுழைந்தாள்.

மேடை மீது கடைசியாய், தனியாக நின்று கொண்டிருக்கும் காப்பி டம்ளரைக் கையில் எடுத்ததும், முகம் சற்று சிணுங்கக் கேட்டாள்.

"காப்பி ஏம்மா இவ்வளவு கறுப்பாக இருக்கிறது.. ரகுராமின் முகம் மாதிரி?"

"என்ன.. என்ன?" நாகம்மாள் கீரை ஆய்வதை நிறுத்தி விட்டு அவளை நிமிர்ந்து பார்த்தாள். பார்வையில் லேசாக வீசின அனலைப் புரிந்து கொண்ட ராதிகா, "ஒண்ணுமில்லை, காப்பி ஏன் இவ்வளவு கறுப்பாக இருக்கிறது என்று தான் கேட்டேன்."

"அதற்கு ஏதோ உதாரணம் வந்ததே?"



"ஒரு உதாரணமும் வரவில்லையே?"

"யார் முகமோ மாதிரி இருக்கு என்று சொன்னதாக காதில் விழுந்ததே?"

சட்டென்று பயம் அடங்கிப் போயிற்று ராதிகாவிற்கு! பழைய விறைப்பு தலை தூக்க அம்மாவை நேர்ப் பார்வையாகப் பார்த்துச் சொன்னாள்.



**அழிப்பான் கதைகள் 1**

**இரவு பகல் விழித்திருக்கும். எப்போதும் ஒலித்திருக்கும். அது என்ன?**

**விடை 96ம் பக்கம்**

"ரகுராமின் முகம் மாதிரி இருக்கு என்று சொன்னேன். அது ஏன் உன்னை இவ்வளவு கோபப்படுத்துகிறது, நிஜத்தை கூடச் சொல்லக் கூடாதா?"

"எந்த நிஜத்தைச் சொல்ல அரிச்சந்திர அவதாரம் எடுத்திருக்கே நீ?"

"உன் தம்பி மகன் அட்டைக் கரி. தொட்டால் ஒட்டிக் கொள்கிற கறுப்பு என்கிற நிஜத்தைத்தான்."

"ஏண்டி, காலையில் எழுந்து யாரையாவது வம்பிற்கு இழுத்துக் கொண்டே இருக்கணுமா உனக்கு? என் தம்பி பையனுக்கு வெளித் தோல்தான் கறுப்பு. உள் மனசு பால் வெள்ளை. சில பேர் மாதிரி பார்க்கச் செக்கச் செவேலென்று இருந்து கொண்டு மனதிற்குள் அமாவாசை இருட்டை அவன் அடைத்து வைத்திருக்க மாட்டான்."

"நீ சொல்ற 'சில பேர்' யார் என்று புரிகிறது. ஏம்மா, பெற்ற பெண்ணை விட உனக்கு உன் தம்பி பிள்ளை பெரிதாகப் போய்விட்டான்! இல்லை?"

"வெறும் தம்பி பிள்ளையாக மட்டும் நின்றிருந்தால் நானும் இப்போ இப்படிப் பரிந்து கொண்டு வரப் போவதில்லை. உங்கப்பா திடீரென்று மாரடைப்பில் செத்துப் போனபோது நம் ஒத்தாசைக்கு ஓடி வந்தது யார்? இந்த மளிகைக் கடையை அதே மாதிரி திறமையாக நிர்வாகம் பண்ண ஒப்புக் கொண்டது? ரகு மட்டும் இல்லை என்றால் இப்போது இப்படி நிம்மதியாக உட்கார்ந்து சாப்பிட முடியாது. நீ காலேஜ் வாசலை மிதித்திருக்க முடியாது. பாலு இவ்வளவு நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்ந்திருக்கவே முடியாது.

அதையெல்லாம் நினைத்துப் பார்க்காமல் நன்றி கெட்டத்தனமாகப் பேசாதே. அதுவும் இல்லாமல் நீ அவனை இப்படிப் பேசினால் கேட்பதற்கு என்னைத் தவிர வேறு யாரும் இல்லை. வாழ்க்கையில் ஒரு சுகத்தையும் அனுபவிக்காத பிள்ளை அது. சதா காலமும் குடித்துவிட்டு வந்து அடிக்கிற அப்பா, அந்த இம்சை தாங்காமல் தூக்கில் தொங்கின அம்மா, அந்தக் கண்றாவியைப்

பார்த்துவிட்டு அம்மா காரியம் முடிந்த கையோடு என்னோடு வந்தவன் அவன். இந்த நாள் வரை அதிர்ந்து ஒரு வார்த்தை பேசினதில்லை. நீயாவது என்னை எதிர்த்து ஆயிரம் வாயாடுகிறாய். அவன் உன்னைவிடப் பத்து வயது பெரியவன். ஆனாலும் என் பேச்சுக்கு மறு பேச்சு வராது. அப்படிப்பட்ட நல்ல பிள்ளையை வாய்க்கு வந்த மாதிரி துச்சமாக எதுவும் பேசாதே."

"நான் யாரையும் எதுவும் சொல்லலை. அதே மாதிரி யாரும் என் விஷயத்தில் தலையிட வேண்டாம். அவன் 'உள்ளதைச் சொல்வேன், சொன்னதைச் செய்வேன் வேறொன்றும் தெரியாது' என்று உன்னிடம் வந்து பாடட்டும், நீ கேட்டுக் கொள். யார் எப்படி இருந்தால் எனக்கென்ன? நான் குளித்துக் காலேஜ் போகிற வழியைப் பார்க்கிறேன்."

"இதோ பார் ராதிகா. மரியாதைக் குறைவாக ரகுராமனை அவன் இவன்னு பேசினால் எனக்கு ரொம்பக் கோவம் வரும், ஜாக்கிரதை."

"ஆமாம், அவன்னு சொல்லாமல் உன் தம்பிப் பையனை அவர்னு சொன்னால் இன்னமும் என்னிடம் வந்து குழைவான். ஏதோ தாலி கட்டின பெண்டாட்டியைக் கூப்பிடுவதாகக் கற்பனை பண்ணிக் கொள்வான், பாவம்!"

உரத்துச் சொல்கிற தைரியமற்று மெதுவாக முணுமுணுத்துக் கொண்டே கொடியில் மடித்துப் போடப்பட்டிருந்த பாவாடை, தாவணியை நீளமான மூங்கில் கம்பால் தள்ளி எடுத்துக் கொண்டபோது, தினமும் படருகிற வெறுப்பு அன்றும் பரவிற்று. லேசாய்ச் சாயம் போகத் தொடங்கியிருந்த பூப் போட்ட பாம்பே டையிங் பாவாடை, பார்க்கப் பிடிக்காமல் போயிற்று.

திரும்பத் திரும்பப் பாவாடை தாவணிதான். புடவை கட்டிக் கொள்கிறேன் என்றால் கூட அம்மா வேண்டா மென்கிறாள். பதினெட்டு வயது – புடவையில் இருபது. இருபத்திரெண்டு மாதிரிக் காட்டி அவளைப் பயமுறுத்துகிறதாம்.

"இன்னும் கொஞ்ச நாளைக்கு இதே மாதிரி சின்னப் பொண்ணாகவே இரு" என்றாள். சரி, புடவை வேண்டாம், மற்ற கல்லூரி சிநேகிதிகளைப் போல் ஸல்வார் கம்மீஸ், சுடிதார், மாக்ஸி, மிடி எதையாவது போட்டுக் கொள்ள விடுகிறாளா? ஒரே ஒரு ஸல்வார் கம்மீசிற்கு ஆசைப்பட்டு ஒரு வாரம் அம்மாவிடம் கெஞ்சியாயிற்று.. அழுதுகூடப் பார்த்தாயிற்று. எதுவும் நடக்கவில்லை. ரகுராமன் கூட வழக்கம்போல் சிபாரிசிற்கு வந்தான்.

"என்ன அத்தை நீங்க. இந்தக் காலத்திலே எல்லா காலேஜ் பெண்களும்தான் போட்டுக் கொள்கிறார்கள். பாவம் அத்தை, ராதிகா. ஒரே ஒரு டிரெஸ்ஸிற்குத்தானே ஆசைப்படுகிறாள். போட்டுக் கொள்ளட்டுமே."

ஆனால் அவனுக்குக்கூட நாகம்மாள் தீர்க்கமாக உறுதியான குரலில் மறுப்புச் சொல்லிவிட்டாள்.



"இதோ பார் ரகு. அவள் இஷ்டப்படி எல்லாம் வளைந்து கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. ஏற்கெனவே சிவப்பாக இருக்கிறோம். அழகாக இருக்கிறோம் என்கிற கர்வத்தில் அவள் யாரையும் மதிப்பதில்லை. இன்னும் இதையெல்லாம் அனுமதித்தால் நம்மை தூசிக்குச் சமமாக நினைப்பாள். என்னிடம் இருக்கிறவரை ஒழுங்காகப் பாவாடை தாவணியோடு இருக்கட்டும். அப்புறம் கல்யாணமானால் அவள் இஷ்டப்படி ஆடட்டும். நானா வேண்டாம் என்று சொல்லப் போகிறேன்?"

"ஆமாம். கல்யாணம் பண்ணிக் கொண்டதற்கு அப்புறம்தான் ஸல்வார் கம்மீஸ் போட்டுக்கணும் என்றால் அதற்குள் எனக்கு ஆசையே போய்விடும்."

"அந்த ஆசையும் போகக் கூடாது. ஸல்வார் கம்மீஸும் போட்டுக்கணும் என்றால் நான் ஒரு வழி சொல்கிறேன்.. கேட்கிறாயா?"

"என்ன?"

"ரகுதான் உன் இஷ்டத்திற்கெல்லாம் ஆமாம் போடறானே? அதனால் அவனைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதம் தெரிவிச்சிட்டு, அதற்கப்புறம் ஸல்வார் கம்மீஸாவது போட்டுக்க.. கவுனாவது மாட்டிக்க."

அம்மா தூண்டிலின் நுனியில் ஸல்வார் கம்மீஸ் ஆசையைச் செருகி, தன்னைப் பிடிக்க நினைப்பது புரிய.. ராதிகா மௌனமானாள். 'வாயைத் திறக்கிற மீன்தான் தூண்டிலில் அகப்பட்டுக் கொள்ளும்' என்கிற பழமொழி ஞாபகத்திற்கு வந்தது. ஒரு ஸல்வார் கம்மீஸிற்காக ரகுவை கல்யாணம் பண்ணிக் கொள்வது இயலாது என்கிற காரணத்தினால் அந்த ஆசையைத் தற்காலிகமாகக் கைவிட்டாள்.

ஆனால், தன் வாழ்க்கையில் விதம் விதமாக உடையணிகிற காலம் ஒன்று வரப்போகிறது என்பதை மட்டும் அவள் உறுதியாக நம்பினாள்.

தன்னுடைய இத்தனை அழகும் வெறும் சாதாரண வாழ்க்கையில் முடிந்து விடப் போவதில்லை. இப்போது இருக்கிற மாதிரி ஒரு சமையலறை, கூடம், ஒரே ஒரு படுக்கை அறை என்றிருக்கப் போவதில்லை..

அவள் போகிற இடம் வசதியானது. நீளமான போர்ட்டிகோவில் இரண்டு மூன்று கார்கள் நிற்பது.. முழு வீடும் குளிர்சாதன வசதியும் பொருத்தப்பட்டது.. தரையில் கால் அழுந்தாமல் ரத்தினக் கம்பளம் விரிக்கப் பட்டது.. சமயற்காரரைக் கூப்பிடக் கூட இவள் எழுந்து போக வேண்டாம்.. இண்டர்காமில் சொன்னால், வெள்ளை யூனிஃபார்ம் அணிந்த பட்லர், அறைக்குக் காப்பி கொண்டு வருவான்!

இவை அனைத்துக்கும் அடிப்படை இந்த ஐந்தடி, மூன்றங்குல உயரம். மலையாள மண்ணின் மினுமினுப்புக் கலந்த நிறம். துருதுருவென்று அலைகிற

பார்வை. செதுக்கின நாசி, பிடிவாதத்தைக் காட்டுகிற குமிழிட்ட முகவாய்.

சாதாரண அழகில்லை. பார்த்து பார்த்துச் செதுக்கின மிக அபூர்வமான சிற்பம் மாதிரி ஒரு அழகு. தன் அத்தனை அழகும் ஒரு மத்திய தர வர்க்கத்துக்குக் குடும்பத்தில் ஆரம்பித்தது. மீண்டும் மத்திய தர வர்க்கத்தில் தொடர்ந்து அதிலேயே முடிந்து விடுவதில் அவளுக்குச் சிறிதும் உடன்பாடில்லை. வாழ்க்கையை அனுபவிக்க நினைத்தாள் அவள். இவ்வளவு அழகை அள்ளிக் கொடுத்திருக்கும் ஆண்டவன் வசதியையும் கொடுப்பான் என்று காத்திருந்தாள்.

ஏ.சி. அறை, கார் சவாரி, விதம்விதமான உடைகள், செலவு செய்யக் கை நிறையப் பணம்..

''இன்று நம் எல்லோருக்கும் ராதிகா கான்டீனில் காப்பி வாங்கித் தரப் போகிறாள்.''

அதைக் கேட்டு சடாரென்று தன் முகத்தை மலர வைத்துக் கொள்வாள் அவள்.

''ஓ எஸ்! வித் ப்ளெஷர் வெறும் காப்பி போதுமா, இல்லை ஏதாவது டிபனும் சாப்பிடலாமா?''

''உன்கிட்டே பணம் இருந்தால் டிபன் சாப்பிடலாம்?''

''ஏன் இல்லை? இன்று காலையில்தானே இந்த வாரச் செலவிற்கு அம்மா ஐம்பது ரூபாய் கொடுத்தாள்.''

சொல்லிக் கொண்டே பர்ஸுக்காகத் தோள் பையில் கை விட்டு, புத்தகங்களுக்கிடையில் அளைந்து, சுற்றி நின்ற இடத்தில் தேடி, ஜாக்கெட்டிற்குள் செருகிக் கொண்ட ஞாபகத்தில் கைவிட்டுப் பார்த்து,

''என்ன ராதி தேடறே?''

''என் பர்ஸைக் காணோம்ப்பா. காலையில்தான் அம்மாகிட்டேயிருந்து ஐம்பது ரூபாய் வாங்கிப் போட்டுக் கொண்டு வந்தேன்.''

''எங்கே போயிருக்கும்? இங்கேதான் எங்கேயாவது விழுந்திருக்கும்.''

எல்லோரையும் சிறிது நேரம் தேட வைத்துப் பின்..

''போனால் போகட்டும்ப்பா. இந்த வாரம் யாராவது வாங்கித் தாருங்கள். நான் அடுத்த வாரம் வாங்கித் தருகிறேன்.''

நடிப்பு, போலியாக ஏற்படுத்திக் கொள்கிற பெருமை. இந்த ஒரு சந்தர்ப்பத்தில்





மட்டுமா? இதுபோல் எத்தனை தரம் நடித்தாகிவிட்டது.

இப்படிப் பொய் சொல்லி ஏமாற்றாமல் நிஜமாகவே தன் சினேகிதிகளை சோழா ஓட்டலுக்கும், தாஜ்கொரமாண்டலுக்கும் அழைத்துப் போகிற ஒரு காலம் வரத்தான் போகிறது. தன் அழகிற்கு ஆசைப்பட்டு, பணமும், சர்வ லட்சணங்களும் பொருந்திய ஒரு வாலிபன், எங்கிருந்ததோ ப்ருத்விராஜன் மாதிரி குதிரை மீது வந்து இந்த சம்யுக்தையைக் தூக்கிக் கொண்டு..

''ஏய், இன்னுமா குளிக்கிறாய். சீக்கிரம் வெளியில் வாடி. பாலுவிற்கு ஸ்கூலுக்கு நேரமாகிறது பார். ஒரு நாளைக்குப் போல் பாத்ரூமிற்குள் போனால் ஒரு மணி நேரமாகிறது.''

''இதோ வந்துட்டேன்'' தன் கனவுகளிலிருந்து மீண்டும் உடம்பைத் துடைத்து, அவசர அவசரமாக உடையை அணிந்து கொண்டு வெளியில் வந்தாள்.

பின்னர் நிதானமாய்க் கண்ணாடி எதிரில் நின்று அரை மணி நேரத்திற்கு மேல் அலங்கரித்துக் கொள்வதில் செலவிட்டாள்.

அதன் பின்னர், ''அம்மா நேரமாகி விட்டதும்மா, சீக்கிரம் சாப்பாடு போடு'' என்று ஆர்ப்பரித்து, நிமிடமாய்ச் சாப்பிட்டு நாசூக்காக வாயைத் துடைத்துக் கொண்டு இரண்டு மூன்று புத்தகங்களையும், காலையில் வரைந்த ரெக்கார்ட் நோட்டுப் புத்தகங்களையும் அடுக்கி, மார்பில் இதமாய் சரித்து இடது கையால் அணைத்துக் கொண்டு..

''அம்மா, போய்ட்டு வரேன்!''

வாசற்படி இறங்கித் தெருவைக் கடந்து மெயின் ரோடிற்கு வந்ததும்..

அதுவரை அவளுக்காகவே சாலை ஓரத்தில் வெள்ளை பியட்டில் காத்துக் கொண்டிருந்த அவன் சொன்னான்..

''நான் சொன்னது இந்தப் பெண்ணைத்தான்டா கௌரீஷ்''

கௌரீஷ் என்கிற கௌரிசங்கர் அவளை அந்த வெளிநாட்டுக் காரின் ரிவர்ஸ் மிரரில் பார்த்தவாறு சொன்னான்.

''நன்றாகத்தான் இருக்கிறாள். ஃபாலோ பண்ணு. கிட்டே போய்ப் பார்க்கலாம்.''

கார் சத்தமில்லாமல் புறப்பட்டு மெல்ல ராதிகாவைப் பின் தொடர்ந்தது.

2

சந்தடியற்ற தனி இடத்தில் சற்றே ஒதுங்கியிருந்தது அந்த கான்வென்ட். நகரத்தின் பணக்காரச் சிறுவர்களுக்கென்றே கட்டப்பட்டது. பணம் என்றால் சாதாரணப் பணமில்லை. ''ஹேய், டுடே ஆல்ஸோ யூ ஆர் கமிங் இன் தி ஸேம் கார்?'' என்று கேட்கிற வர்க்கங்களுக்காக ஒதுக்கப்பட்டது.

எல்.கே.ஜி.க்குள் வந்த உட்காருகிறபோதே, ரத்தத்திற்குப் பதிலாக உடம்பில் திமிரும் சுகங்களும் ஓடுகிற வர்க்கம். முதல் நாள் டொயட்டோ என்றால் மறுநாள் மெர்ஸிடிஸ் பென்ஸில் வருகிற வர்க்கம். பியட்டிலும் அம்பாஸடரிலும் வருகிறவர்களை ஏளனமாகப் பார்க்கிற இனம். ஒவ்வொரு விடுமுறைக்கும் அமெரிக்காவும், லண்டனும் அழைத்துப் போகிற.. மலேஷியா, சிங்கப்பூரைத் தங்கள் வீட்டுத் தோட்ட வாசலாக நினைக்கிற.. மிகப் பெரிய மனிதர்களின் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் படிக்கிற பள்ளிக்கூடம்.

அது அப்போது அங்கு சந்தடியற்றுக் கிடக்க, எட்டு வயது கௌரிஷங்கர்



மட்டும் மிகத் தனியாக, சறுக்கு மரத்தில் ஏறி, சறுக்கிக் கொண்டிருந்தான். சற்றுத் தள்ளி மரத்தடியில் அவனது அலுமினியப் பெட்டியும், வெளிநாட்டுத் தண்ணீர்ப் பையும் அவனைப் போலவே துணையற்றுக் கிடந்தன. துணை இல்லாததற்காக கௌரிஷங்கர் கவலைப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் யாராவது உடன் விளையாட வந்தால்தான் சங்கடப்படுவான் என்று தோன்றிற்று. அந்த அளவிற்குத் தனிமை அவனுக்குப் பழகிப் போயிருந்தது.

ஏழாவது முறையாகப் படிகளில் ஏறி சறுக்கிக் கீழே மணலுக்கு வந்ததும், அதுவரை பொறுமையாய்க் காத்திருந்த ருத்ரைய்யா அதற்கு மேல் தாங்க இயலாதனவனாக அந்தப் பிஞ்சுக் கையைச் சிவக்கும்படி அழுத்திப் பிடித்தான்.

''வா, கௌரிஷ். வீட்டுக்குப் போகலாம்'' என்று முறைக்க, சிறுவன் அந்த முறைப்பைச் சிறிதும் லட்சியம் பண்ணாமல் சொன்னான்.

''ம்ஹூம்! நான் வர மாட்டேன் போ''

''அம்மா அவுட்டோரிலிருந்து இத்தனை நேரம் திரும்பி வந்திருப்பாங்க கௌரீஷ். நீ வீட்டில் இல்லையானால் சத்தம் போடுவாங்க.''

சிறுவனின் கண்களில் பெரிதாய் ஒரு மலர்ச்சி தோன்றிற்று. ''நிஜமாவா சொல்றே? அம்மா வந்திருப்பாங்களா?''

''வந்திருப்பாங்க கௌரீஷ்''

''நீ பொய் சொல்றே. என்னைச் சீக்கிரம் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகணும்னு சொல்றே?''

''இல்லை கௌரீஷ். நிஜமா வந்திருப்பாங்க''

''ப்ராமிஸா''

''ப்ராமிஸா''

கௌரிஷங்கர் பத்து நாட்களுக்குப் பின் அம்மாவைப் பார்க்கிற சந்தோஷத்தோடு குதித்துக் கொண்டு ஓடினான். போகிறபோதே, ''அந்த ஸ்கூல் பாக்சையும், வாட்டர் பாக்சையும் கொண்டு வா ருத்ரைய்யா'' என்று கத்தினான்.

கார் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்தபோது, ருத்ரைய்யா பொய் சொல்லவில்லை. நிஜமாக அம்மா வந்திருப்பாள் என்று தோன்றிற்று.

பத்து நாட்களுக்கு முன் அம்மா 'ஹாங்காங்கில் அவுட்டோர் ஷூட்டிங்'

என்று புறப்பட்டுப் போனது ஞாபகத்திற்கு வந்தது. போகிற போதுகூட அவனிடம் பேச அம்மாவிற்கு நேரமில்லை. கடைசி நிமிடம் வரை ஏதோ முடியப் போகிற படத்தில் நடித்துவிட்டு, வீட்டிற்கு ஃபோன் பண்ணி மானேஜரைத் தன் பெட்டியோடு நேராக விமான நிலையத்திற்கு வந்துவிடச் சொன்னாள். மறக்காமல் ஆயாவோடு அவனையும் அழைத்துக் கொண்டு வரச் சொன்னதால் அவனால் போக முடிந்தது.

அங்கும் அம்மாவால் வழக்கம்போல அவனிடம் பேச முடியவில்லை. ஆட்டோகிராஃப் கேட்டவர்களையும், நான் உங்க ரசிகன் என்றவர்களையும் சிரித்து, கைகுவித்து அனுப்பி விட்டு, கடைசியாக அவனிடம் வந்து கன்னத்தில் ஒரே ஒரு முத்தம்.

"ஆயா, கௌரீஷை ஜாக்கிரதையாகப் பார்த்துக்க.." சினிமாவில் கையாட்டுகிற மாதிரியே அழகாய்க் கையாட்டி விட்டு உள்ளே ஓடினாள்.

அந்த அம்மா இப்போது வந்திருக்கிறாள். அவனுக்காக ஹாங்காங்கில் இருந்து நிறைய பொம்மைகள் வாங்கிக் கொண்டு வந்திருப்பாள். விக்ரம் வைத்துக் கொண்டிருக்கிற மாதிரி ரிமோட் கன்ட்ரோல் கார் கேட்டிருந்தான். வாயிலிருந்து ரப்பரை எடுத்தால் அழுகிற பொம்மை.. சின்னச் சின்ன வண்டிகள்.. அம்மா எல்லாம் வாங்கிக் கொண்டு வந்திருப்பாள்..

"சீக்கிரம் போ ருத்ரைய்யா"

பத்தாவது நிமிடத்தில் கார் மாம்பலத்தின் அந்தப் பிரம்மாண்டமான பங்களாவிற்குள் நுழைய, போர்ட்டிகோவில் அம்மாவின் வெள்ளை டொயாட்டோ நிற்பதைப் பார்த்த கௌரீஷ், கார் நிற்கிறவரை காத்திராமல் அவசரப்பட்டுக் கொண்டு கீழே இறங்கி மாடிக்கு ஓடினான்.

"அம்மா.. மம்மீ.."

சித்ரலேகாவின் அறைக் கதவைத் தட்ட, கீழேயிருந்து ஓடி வந்த ஆயா பதறிப் போய்க் கௌரீஷின் கைகளைப் பிடித்துக் கொண்டு சொன்னாள்.

அன்றைய தினத்திற்குப் பின்னர் அவன் ஆயாவைப் பார்க்கவில்லை. ஆயாவிற்கு பதிலாக இளவயதுப் பெண் ஒன்று அவனைக் கவனித்துக் கொண்டது.

"என்னை ஆயான்னு கூப்பிடாதே. புஷ்பான்னு கூப்பிடு என்றது. கறுப்பாக இருந்தாலும் களையாக இருந்தது. ஆனாலும் இவன் ஆயாவின் பாசம் மிகுந்த அரவணைப்பிற்கு ஏக்கப்பட்டுக் கேட்டான்.

"ஆயா எங்கே புஷ்பா?"






**சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும். அது என்ன?**

**விடை 96ம் பக்கம்**

"ஆயா வேலையை விட்டு நின்னுடுச்சு."

"ஏன்?"

"உன்னைப் பார்த்தால் அதுக்குப் பாவமாக இருக்காம்."

"பாவம் என்றால் என்ன புஷ்பா?"

"பாவம்னால்.. பாவம்னால்.. செய்யும்போது சந்தோஷமாகத் தெரியும். செய்தப்புறம் கஷ்டப்படுத்தும்."

"அப்படின்னா?"

"பின்னால் செய்யப் போறப்போ நீயே தெரிஞ்சுப்பே. இப்போ பேசாமல் படு."

ஆயா போனது முதல் அடி! இரண்டாவது அடி அடுத்த பதின்மூன்றாவது வயதில் விழுந்தது.

"ஏய், நேற்று நான் கௌரீஷ் அம்மா நடிச்ச சினிமா பார்த்தேன்டா. ச்சீ, சட்டை போட்டுக்காமல் குளிக்கறாங்கடா!"

"நான் பார்த்த படத்துலே இன்னும் அசிங்கமா யாரோ ஒருத்தனைக் கட்டிக்கிறாங்கப்பா."

"ஏண்டா கௌரீஷுக்கு அப்பா இல்லையா?"

"நமக்கு ஒரு அப்பான்னா கௌரீஷுக்கு நிறைய அப்பாடா."

"நீ பார்த்தியா?"

"ம்ஹூம், எங்க அம்மாதான் சொன்னாங்க."

அன்று முழுவதும் கௌரீஷ் எதுவும் சாப்பிடவில்லை. யாருக்கும் தெரியாமல் கண்களை அடிக்கடி துடைத்துக் கொண்டான். கடைசி வகுப்பு முடிந்ததும் விக்ரமிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டான்.

அதற்குப் பின்னரே அவன் நிறையக் கெட்டுப் போனான். அன்பும் கவனிப்பும் அற்ற எல்லாப் பணக்காரப் பிள்ளைகளையும் மாதிரி இவனும் ஆனான்.

அவனை இன்னமும் கெடுப்பதற்காகவே, ராணி அவன் வேலைகளை கவனிக்க அமர்த்தப்பட்டாள். புஷ்பா கல்யாணமாகிப் போன பின்னர் இந்த ராணி வந்து சேர்ந்தாள். புஷ்பா மாதிரி இல்லாமல் இவள் வித்தியாசமானவளாக

இருந்தாள். அதீதமாக டிரெஸ் பண்ணிக்கொண்டாள். வேண்டுமென்று தாவணியை விலக்கி விட்டுக் கொண்டாள். அவளைப் பார்க்கிற போதெல்லாம் இவனுக்குள் ஏதோ குறுகுறுக்கும் என்ன என்று புரியாத உணர்வும் தோன்றும்.

இவனுடைய பதினான்காவது பிறந்த நாளுக்கு வந்திருந்த விக்ரம், மறுநாள் பள்ளிக்கூடத்தில் அவனிடம் ரகசியமாகக் கேட்டான். ''உங்க வீட்டிலே நேற்று ஒரு பொண்ணு இருந்தாளே, அவ யாருடா?''

''ராணி. என்னைக் கவனிச்சுக்கிறவள்.''

''அவளைப் பார்த்தால் அப்படியே கட்டிக்கணும் போல இருக்குடா.''

தனக்குள் குறுகுறுக்கிற எண்ணமும் அதுதானோ என்கிற சந்தேகம் வர, அன்று மாலை வீட்டிற்கு வந்ததும் கௌரீஷ் ராணியைத் தேடினான். ஹாலில் சமையலறையில், பின் பக்கத்தில், வேலைக்காரர்களுக்கு ஒதுக்கியிருந்த குவார்ட்டர்ஸில், தன் அறையில்.. கடைசியாக மாடிக்குத் தேடிக் கொண்டு போய் அம்மாவின் படுக்கையறைக் கதவை மெதுவாகத் தள்ளினால்..

அம்மாவின் படுக்கையில் ராணியும், தோட்டக்கார முத்துவும்.. இவன் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டு நிற்க.. முத்து ராணியை விட்டு விலகி எழுந்து கொண்டபோது இவன் சத்தப்படுத்தாமல் கதவை மூடிவிட்டுக் கீழே இறங்கி வந்து விட்டான். தான் பார்த்ததை யாரிடமாவது சொல்லிப் பகிர்ந்து கொள்ளத் தவித்தான்.

யாரிடம் சொல்வது?

சமையற்காரர் இவனிடம் பேச மாட்டார். பார்க்கிற போதே அதட்டுவார். வேலைக்காரி வீட்டில் இல்லை. கூர்க்காவோடு பேசுகிற அளவில் இவனது இந்தி வளரவில்லை.

கடைசியில் அன்றிரவு சாப்பிடக் கூப்பிடுவதற்காக அறைக்குள் வந்த ராணியிடமே மெதுவாகக் கேட்டான்.

''இன்னிக்குச் சாயந்தரம் நீயும் முத்துவும் மம்மி ரூமிலே என்ன பண்ணினீங்க ராணி?''

அவள் ஒரு வினாடி அதிர்ந்து போய் நின்று இவனைப் பார்த்தாள்.

''சாயந்தரம் நீ மேலே வந்தியா?''

இவன் தலையாட்டினான்.

''என்னையும் முத்துவையும் பார்த்தியா?''

அதற்கும் தலையாட்டினான்.



''யார்கிட்டேயாவது சொன்னியா?''

'இல்லை'யெனத் தலையாட்ட, ராணி அவனை இன்னமும் நெருங்கி, மிக நெருக்கமாக வந்து சடாரென்று அவன் முகத்தைத் தன் மார்போடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டு வித்தியாசமான குரலில் சொன்னாள்..



**அழிப்பான் கதைகள் 3**

**எரியும் ஆனால் குளிரும். அது என்ன?**

**விடை 96ம் பக்கம்**

''இனிமேல் இதையெல்லாம் பார்த்தா யார்கிட்டேயும் சொல்லக் கூடாது.. என்ன?''

மெத்தென்ற அந்த இதமான ஸ்பரிசத்தில் முகத்தை இன்னமும் அழுத்திக் கொண்டு, விக்ரமின் ஞாபகம் வர மெலிதான குரலில் கேட்டான்.

''ஏன் சொல்லக் கூடாது?''

ராணி அவன் தலையைச் செல்லமாக வருடி கொஞ்சலாகப் பேசினாள்.

''யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன்னு சத்தியம் பண்ணினால் சொல்றேன்.''

''நிஜம்மாவா?''

''சத்தியமா!''

''அப்படின்னா ப்ராமிஸா நான் யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன் ராணி.''

3

முதலில் பயந்து பயந்துதான் அவளைத் தொட்டான் கௌரிஷங்கர். இதயத் துடிப்பு அதிகமாகி உடம்பு வியர்த்துப் போயிருந்தது. வார்த்தைகள் நகங்கி வெளியில் வந்தன..

''எனக்குப் பய..ம்ம்ம்..மா.. இருக்கு ராணி..''

''என்ன பயம்?'' கொஞ்சலாகக் கேட்டாள் அவள்.

''என்னவோ பயமாக இருக்கு!''

ராணி சிரித்துக் கொண்டே ஏளனமாகப் பார்த்தாள். பின் குரூரமாகச் சொன்னாள்.

''அந்த அம்மாவுக்குப் பொறந்த புள்ளையா நீ? இப்படி பயந்து சாவுற..

உங்கம்மா எதற்காவது பயப்படறாங்களா பார்.. உன்னை வச்சுக்கிட்டே எத்தனை பேரை வீட்டுக்குக் கூட்டியாராங்க?''

அவன் உடம்பில் புதிதாய் ரத்தம் பாய்ந்த மிருகமாய் வெறி ஏறிற்று. கண்கள் சிவந்து பளபளக்க ஆரம்பித்தன. ராணியின் விஷமச் சிரிப்பும், பார்வையில் எட்டிப் பார்த்த ஏளனமும், வெளிவந்த வார்த்தைகளின் குரூரமும்.. 'உங்கம்மா எதற்காவது பயப்படறாங்களா பார்.. உன்னை வச்சுக்கிட்டே எத்தனை பேரை வீட்டுக்குக் கூட்டியாராங்க..?'

ஸ்டீரியோஃபோனிக் சத்தமாய்த் திரும்பத் திரும்ப அந்த வார்த்தைகள் எதிரொலிக்க..

இவன் மனதிற்குள் முடிவு செய்து கொண்டான். அதே மாதிரி நானும் அத்தனை பேரையும் வீட்டிற்குக் கூட்டி வருவேன். படுக்கை அறைக்குள் உட்கார வைப்பேன். வெளியிலிருந்து கதவைத் தட்டுகிற அம்மாவுக்கு, கதவைத் திறந்து எரிச்சலும், சிடுசிடுப்புமாகச் சொல்வேன். ''ஏ.. ஆயா! அம்மாவை என் ரூமுக்கு அனுப்பாதேன்னு எத்தனை தரம் சொல்றது? இதுதான் நீ பார்த்துக் கொள்கிற லட்சணமா..?''

''இல்லே தம்பி.. வந்து..''

''ஷட் அப்! முதல்ல நீ கீழே இறங்கிப் போம்மா. அப்புறமாக வந்து நான் உன்கிட்டப் பேசறேன்!''

''என்ன கௌரீஷ் இது?''

''பேசாதே.. முதல்ல கீழே போ..ம்..''

கதவை அம்மாவின் முகத்தில் அறைந்து மூடி, தன் இதயத்தில் விழுந்த அடிகள் அவள் இதயத்திலும் விழ..

ம்ஹூம், போதாது. அவளை இன்னும் பலமாய் அடிக்க வேண்டும். தனக்கு அவள் செய்ததற்கு இன்னமும் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். வெறும் கையடி மட்டும் போதாது. சாட்டையால் விசிற வேண்டும். கட்டையால் அடித்து இரும்புத் தடி கொண்டு பிளந்து.. இன்னும்.. இன்னும்..

"போதும் கௌரீஷ்.. ஐயோ.. போதும்.."

ராணி அவனின் அந்தப் பாய்ச்சலையும், வேகத்தையும் எதிர்பார்க்கவில்லை. பதறிப் போய் எழுந்திருந்து கேட்டாள்.

"உனக்கு திடீர்னு என்ன ஆச்சு கௌரீஷ்? உன்னை நான் ஒன்றுமே தெரியாத சின்னப் பிள்ளைன்னு நினைச்சிட்டிருந்தால் இப்படி உலுக்கி எடுத்திட்ட?"



"நான் அந்த அம்மாவிற்கு எந்த விதத்திலும் சளைத்தவன் இல்லை"

ராணி இன்னமும் பயம் நீங்காமல் அவனைப் பார்த்துக் கொண்டு நிற்க, அவன் சொன்னான்..

"தினமும் நான் எப்போ கூப்பிடறேனோ அப்போ நீ மேலே வரணும்"

"ஐயோ, வேணாம் கௌரீஷ்! என்னால முடியாது. அம்மாவுக்குத் தெரிஞ்சா வேலையை விட்டே அனுப்பிடுவாங்க."

''அம்மாவுக்குத் தெரியணும். அவ மேலே வந்து கதவைத் தட்டணும். நீ உள்ளே பெட்ல உக்காந்திருக்க, நான் கதவைத் திறந்து அவளைப் பார்த்து சத்தம் போடணும்."

''ஐயையோ! அதற்கெல்லாம் நான் ஆளில்லை கௌரீஷ். என்னால முடியாது."

"முடியாதுனு சொன்னால் உன்னை கவனிச்சிக்கிற விதம் எனக்குத் தெரியும்."

பதினான்கு வயதுச் சிறுவன் பேசுகிற பேச்சாக இல்லாமல் ஏதோ ஒரு ரௌடியின் குரலாய்.. இதையே தொழிலாகக் கொண்டவனின் வார்த்தைகளாய்த் தெரிய.. மறுநாளிலிருந்து வேலைக்கு வராமல் நின்று கொண்டாள் ராணி.

அவள் நின்று போனதும் இவன் என்ன செய்வதென்று தெரியாமல் உள்ளுக்குள் மிகவும் தவித்து, சில நாட்களுக்குப் பின்னர் அந்தரங்கமாக விக்ரமிடம் பகிர்ந்து கொண்டான்.

"டேய் ராணி வேலையை விட்டு நின்னுட்டாடா"

விக்ரம் ஒரு வினாடி ஒன்றும் புரியாதவனாய் நெற்றியை சுருக்கினான்.

"எந்த ராணிடா?"

''எங்க வீட்டிலே வேலை செஞ்சிட்டிருந்தாளே, அந்த ராணி."

"ஓஹோ! கறுப்பா, நல்லா அழகா சிலுக்கு மாதிரி இருந்தாளே.. அவளா? ஏண்டா நின்னுட்டா?"

இவன் தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொல்ல விக்ரம் மிகுந்த ஆர்வத்தினால் உந்தப்பட்டு மேலும் தூண்டித் தூண்டிக் கேட்டான். பார்வையில் ஓநாய்கள் எட்டிப் பார்க்கக் கேட்டான்..

"பார்த்தியா.. என்கிட்ட சொல்லாமல் நீ மட்டும்தானே அனுபவிச்சிருக்கே..

இனிமேல் எதுவானாலும் எனக்குப் பங்கு தரணும்."

கௌரீஷ் தலையாட்டினான். "ஆனால் அந்த ராணி வேலையை விட்டு நின்னுட்டாளே.." என்றான் மிக வருத்தமாக.

"என்னடா.. இதுக்குப் போய் முகத்தைத் தொங்கப் போட்டுட்டு இருக்கே? அந்த ராணி போனால் இன்னொரு இளவரசி. நானே ஏற்பாடு பண்றேன். எங்கே வச்சுக்கலாம்? ஓட்டலில் ரூம் புக் பண்ணிடலாமா?"

"ம்ஹூம்! எங்க அம்மாவிற்குத் தெரிகிறவரை வீடுதான். அதுவும் என் ரூம்தான்."

"அம்மாவுக்குத் தெரியறதா? என்னடா இது? இந்தக் காரியமெல்லாம் யாருக்கும் தெரியக் கூடாதுடா?"

"இல்லை. என் காரியமெல்லாம் எங்கம்மாவிற்குத் தெரியணும். அவள் அனுபவிக்கணும். ஒவ்வொரு தடவையும் துடியாய்த் துடிக்கணும். அப்போதுதான் அவளுக்கு நான் துடிச்ச துடிப்பு தெரியும். என் வேதனை புரியும்."

அதைக் கேட்டுப் பதறிப் போனான் விக்ரம். ''வேண்டாம்டா'' என்று கெஞ்சினான். ''நீ இப்படியெல்லாம் செய்யறதுக்கு ஒரு மோட்டிவ் இருக்கு. நீ வேற ஏதோ டிராக்கிலே போற கௌரீஷ்''.

''நான் இப்படியெல்லாம் நடந்துக்கிறதுக்கு எங்கம்மாதான் காரணம் விக்கி. எனக்குள் ஒரு நெருப்பு கணகணனு கொழுந்து விட்டு எரிஞ்சுக்கிட்டிருக்கிறதை உன்னால புரிஞ்சுக்க முடியாது. நான் போற வழியில் வர்றதானால் நீயும் வா. இல்லைன்னால் விடு.''


''அத்தனை சுலபமாக உன்னைத் தனியாக விட்டுட முடியுமாடா? அப்படி விடறதுக்கா ஒண்ணாங் கிளாசிலேர்ந்து ஒண்ணாப் படிச்சது? இணை பிரியாமல் பழகினது? சரி, இன்னிக்கு சாயந்திரமே ஒரு இளவரசியோட வீட்டுக்கு வரேன். தயாராக இரு! என்ன?''

இவன் தலையாட்டினான்.

அன்று விக்ரம் அழைத்துக் கொண்டு வந்த இளவரசிக்குப் பின்னர் அது மாதிரி நிறைய இளவரசிகள்.

சில வருஷங்களுக்குப் பின்னரே சித்ரலேகாவிற்கு விஷயம் தெரிய வந்தது. அவள் கொதித்துப்போய், கௌரீஷின் அறைக் கதவைத் தட்டியபோது, அவன் உள்ளேயிருந்த பெண்ணைக் கட்டிலில் உட்கார வைத்து விட்டு, கதவைத் திறந்து, அறை வாசலில் இரு கைகளையும் இடுப்பில் ஊன்றி நின்று கத்தினான்.





"உனக்கு எத்தனை தரம் சொல்றது ஆயா? இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அம்மாவை மேலே அனுப்பாதேன்னு. இதுதான் நீ பார்த்துக்கற லட்சணமா?"

"டேய் கௌரீஷ், என்னடா இது?"

"ஷட் அப்!" என்று குறுக்கிட்டு அம்மாவை அடக்கினான் அவன்.

"நீ கீழே போய் முதல்ல குளிச்சிட்டு சாப்பிடு. ஷூட்டிங்கிலிருந்து வந்ததும்

இப்படி என்னைத் தேடி ஓடி வரக் கூடாது. ம்.. போ.. நானே கீழே வரேன். அப்போ பேசிக்கலாம்."

சித்ரலேகா அதிர்ச்சியில் வார்த்தைகள் வராமல் நிற்க அவன் இன்னமும் கோபமாய் இரைந்து கத்தினான்.

"ம்.. போ.. முதல்ல கீழே போ. என் கண் முன்னால் நிற்காமல் போயிடு."

அவனது கண்களின் வெறியையும், கோபத்தையும் பார்த்துப் பயந்து போன சித்ரலேகா பதட்டத்துடன் படிகளில் இறங்கிக் கீழே போக..

இவன் உள்ளே வந்து உடம்பு நடுங்கக் கட்டிலில் உட்கார்ந்திருந்த பெண்ணின் கழுத்தில் கை வைத்து வெளியில் தள்ளிக் கதவை அறைந்து சாத்திக் கொண்டு, தரையில் உட்கார்ந்து ஓவென்று அழத் தொடங்கினபோது..

அதுவரை சித்ரலேகாவின் கண்ணில் படாமல் மறைந்து கொண்டிருந்த விக்ரம், வெளியில் வந்து கௌரிஷங்கரை நெருங்கி அவன் தோளில் கை வைத்துப் பதறிப் போய்க் கேட்டான்.

"டேய் கௌரீஷ். என்னடா இது? என்ன ஆச்சு? எதுக்காக இப்படி அழறே?"

"லீவ் மீ.. லீவ் மீ.. அலோன்.. இதெல்லாம் உனக்குப் புரியாது. புரிஞ்சுக்க முடியாது. அன்பான நல்ல அம்மா உனக்கு இருக்காங்க. சினிமாவில் நடிக்காத அம்மா.. வீட்டுக்கு யார் யாரையோ கூட்டிட்டு வராத அம்மா.. அந்த மாதிரி அம்மா எனக்கிருந்தால் நான் உன்னைப் போல் நடந்துக்க மாட்டேன். ஐ வில் பி எ குட் ஸன் டு மை மதர்."

சடாரென்று தலையைக் குனிந்து கொண்டான் விக்ரம். கண்களில் கரகரவென்று நீர் துளித்தது. இத்தனை நாட்கள் பார்த்த விக்ரம் இவன் இல்லை என்கிற மாதிரி மிகவும் வித்தியாசமாய் மாறி குரல் உடையப் பேச ஆரம்பித்தான்.

"நீ என்ன நினைச்சு இப்படிப் பேசற கௌரீஷ்? என்னுடைய நிஜமான நிலைமை உனக்குத் தெரியாதுடா. உனக்கு அம்மா அப்படி.. எனக்கு அப்பா அப்படிடா. தினமும் குடிச்சிட்டு ஒவ்வொரு பெண்ணாக வீட்டுக்குக் கூட்டிட்டு வந்து, அவள் எதிரிலேயே எங்கம்மாவைப் போட்டு அடிச்சு.. யு நோ ஐ ஹேட் ஹிம். ஹி இஸ் எ ஸாடிஸ்ட் அண்ட் வாட் நாட்? மனசார எங்கப்பாவை நான் வெறுக்கிறேன். அந்த வெறுப்பில் என்னிக்காவது ஒரு நாள் அவரைக் கொலை பண்ணிடப் போறேனோன்னு உள்ளுக்குள் பயமாக்கூட இருக்குடா. நீ உங்கம்மாவைப் பழி வாங்கற மாதிரி எனக்கும் எங்கப்பாவைப் பழி வாங்கணும்னு ஆசையா இருக்கு. ஆனால் தைரியமில்லை."



அவன் சொன்னதைக் கேட்டுத் தன் அழுகையை நிறுத்தி விட்டு, சில நிமிடங்கள் அவனை துக்கமாகவும், பின் சந்தோஷமாகவும் பார்த்தான் கௌரிஷங்கர். தன்னைப் போலவே அலைகிற இன்னொரு பிறவி என்பதில் துக்கமும், தன்னுடன் வந்து அவன் சேர்ந்ததில் சந்தோஷமும் ஏற்பட்டது. எப்போதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவனைக் கைவிடக் கூடாது என்று தோன்றிற்று. இவன் பக்கத்தில் இருக்க வேண்டும். கூட இவன் இருப்பதே ஆறுதல். ஓர் உறுதுணை, பகிர்தல், எல்லாவற்றையும் இவனுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். தன்னைப் போலவே தைரியமாக்க வேண்டும். நான் அம்மாவை எதிர்க்கிற மாதிரி இவன் தன் அப்பாவை எதிர்க்க வேண்டும். அதற்குத் தான் உதவி செய்ய வேண்டும். எப்படிப்பட்ட உதவியானாலும் சரி..



அழிப்பான் கதைகள் 4

எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் இவன் வயிறு நிரம்பாது. அது என்ன?

விடை 96ம் பக்கம்

அந்த முடிவிற்குப் பின்னர் குரலை மென்மையாக்கிக் கொண்டு கேட்டான் கௌரிஷங்கர்.

"நீ நிஜமாகத்தான் சொல்றியா விக்ரம்?"

"நிஜமாத்தாண்டா, வேணும்னால் எங்க வீட்டு டிரைவரைக் கேட்டுப் பாரு. தோட்டக்காரன், கூர்க்கா யாரை வேணும்னாலும் கேளு. அப்பாவைப் பற்றிக் கதை கதையாகச் சொல்லுவாங்க."

"ஓ.கே. நீ கவலைப்படாதே. இதே மாதிரி உங்கப்பாவை நீ ஒரு நாள் கேட்கணும். அதற்குத் தைரியம் வரணும். முதல்ல ஒரு பெரிய ஃபைவ் ஸ்டார் ஓட்டல்ல ஒரு ரூம் புக் பண்ணு. இப்போ கூட்டி வந்த மாதிரி இல்லாமல் நல்ல பெரிய இடத்துக் கேஸா கூட்டிட்டு வா. நான் வீட்டிலிருந்து விஸ்கி கொண்டு வரேன். நல்லா குடி, நாம் இந்த டிகிரி முடிப்பதற்குள் கிட்டத்தட்ட நூறு பெண்களையாவது கலைக்கிறோம்.. என்ன?"

புதிதாய் ஏற்பட்ட பலத்தில், கௌரிஷ் கொடுத்த தைரியத்தில் அவனைப் பார்த்து பலமாகத் தலையாட்டினான் விக்ரம்.

4

"டேய் கௌரீஷ், உன் லிஸ்ட்படி இது எத்தனாவது?"

விக்ரமின் கேள்விக்கு கௌரிஷங்கரிடமிருந்து பதில் வரவில்லை.

"கிட்டத்தட்ட இது ஐம்பதாவது கேஸா இருக்குமா?"

அதற்கும் பதில் சொல்லாமல் ஏதோ யோசனையில் சற்றுத் தூரத்தில் நடந்துபோய்க் கொண்டிருந்த ராதிகாவையே பார்த்தான் கௌரிஷங்கர்.

லேசாய்ச் சாயம் போன சிட்டிப் பாவாடை தாவணியிலிருந்த அவளின் அழகு, அவனை மருட்டிற்று. வெள்ளை வெளேரென்ற பாதங்கள் கறுப்பு ஸ்ட்ராப் போட்ட செருப்பினுள் குட்டி முயல்களாகத் துள்ளின. மினுமினுவென்று முகம் அந்த மழைக்கால வானத்தின் மக்கல் சூரியனுக்கே பளபளத்தது. நல்ல உயரம், பெரிய பெரிய கண்கள், குழைவாய் அழுந்தின முகவாய்.. கொஞ்சம் பிடிவாதக்காரியாய் தோற்றமளிக்க வைத்தது. அந்தப் பிடிவாதமும் அவளுக்கு அழகாய்த்தான் இருக்கும் என்று நினைத்துக் கொண்டான் அவன். சிவப்புப் பாவாடை தாவணியில் பெரிதாய்ப் பூத்த குரோட்டன்ஸ் ஒன்று தங்கத்தில் கை கால் முளைத்து நடந்து போவதாகத் தெரிய, தன்னை முற்றிலும் மறந்து போனவனாகக் காரினுள் உட்கார்ந்திருந்தான்.

இரண்டு தாம் அதே கேள்வியைக் கேட்டும் பதில் வராமல் போகவே, காரை ஓரம் நிறுத்தி கௌரிஷங்கரின் தோளைத் தொட்டு உலுக்கிய விக்ரம், ''என்னடா யோசனை?'' என்று முன் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு கேட்க, கௌரிஷங்கர் இன்னமும் அந்த லயிப்பு மாறாதவனாகச் சொன்னான்..

''இந்த மாதிரி ஒரு அழகை இதுவரை நான் பார்த்ததே இல்லைடா விக்ரம்''.

விக்ரம் சிரித்தான்.

"பார்க்கணும்னுதானே இப்போ கூட்டிட்டு வந்திருக்கேன்."

"இந்தச் சிவப்பு டிரெஸ்சில் இவளைப் பார்க்கிறபோது எப்போதோ படிச்ச ஒரு கவிதை ஞாபகத்துக்கு வர்றது."

"கவிதையா, அட, அந்தப் பக்கமெல்லாம் கூட திரும்பிப் பார்க்கிறதுண்டா?"

"இல்லைடா. நம்ம ராமசுப்பிரமணியம் ஒருநாள் ஏதோ ஒரு தமிழ்ப் பத்திரிகையைக் காலேஜுக்குக் கொண்டு வந்தான். நான் வாங்கிப் பிரிச்சுப் பார்த்தால் நமக்குப் புரியாத இலக்கிய பாஷை. ஆனாலும் அதுல படிச்ச அந்த இரண்டு வரி மனசில் ஆழமாய்ப் பதிந்து போச்சு!"

"என்ன வரி அது?"

"கொத்திக் கொண்டு போவாண்டி ஆப்பிள் சிவப்பு உன் பேத்தி.."



"நல்ல வரி. அதனாலதான் உன் மனசை விட்டு நகர மாட்டேங்குது. ஆமாம், இப்போ இந்த ஆப்பிளை நாம் கொத்திக்கிட்டுப் போகலாம்னு சொல்றியா?"

"அதான் யோசிக்கிறேன். இவள் வந்த வீட்டையும் தெருவையும் இந்தச் சாயம் போன சிட்டிப் பாவாடையையும் பார்க்கிறபோது மிடில் கிளாஸ் போலத் தோணுது."

"தோணுது என்ன? அதேதான். சாதாரண நடுத்தர வர்க்கத்துக் குடும்பம். அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். ஒரே ஒரு தம்பி. மாமா பிள்ளையோ, அத்தை பையனோ ஒருத்தன் வீட்டிலே இவளுக்காகக் காத்திட்டு இருக்கான். மளிகைக் கடை வச்சிருக்கான். நல்லா கரிக் கறுப்பா, தலையைப் படிய வாரி வெள்ளை வேட்டியும், சட்டையும் போட்டிருப்பான். கறுப்பானாலும் முகம் லட்சணம்தான். அவனுக்கு இவளைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு கொள்ளை ஆசை. ஆனால் இந்தப் பொண்ணுக்கு அதில் இஷ்டமில்லை மாதிரி தெரியுது. அவன் இவளைச் சுற்றிச் சுற்றி வந்து காவல் காக்கிறான். முட்டையைக் கோழி அடை காக்கிற மாதிரி காத்துக்கிட்டிருக்கான். அந்தக் கோழியை ஏமாற்றி விட்டுத்தான் இந்த முட்டையைத் தூக்கிட்டு வரணும்."

"ஆமாம். இத்தனை விவரங்களையும் எப்படி சேகரிச்சே?"

"எனக்கு வேற வேலை என்ன சொல்லு? எந்த வீட்டிலே அழகான பொண்ணு இருக்கு.. எங்கே படிக்குது, யார் யார் கூட இருக்காங்க.. பூர்வோத்திரம் என்ன.. இதையெல்லாம் கண்டுபிடிக்கிறதை விட வேற என்ன வேலை?"

"இத்தனை கண்டுபிடிச்சு என்ன லாபம்? எனக்கு இது படியும் என்கிற நம்பிக்கை இல்லை."

"படியும்னு இப்போ யாரு சொன்னா? பக்கா மிடில் கிளாஸ்ப்பா. பணத்தைக் கொடுத்து எதையும் சாதிக்க இயலாத நிலையில் இருப்பதால் இன்னமும் பழி பாவங்களுக்கு அஞ்சுகிற ஜென்மங்கள். சாயந்திரம் ஆறு மணிக்கு விளக்கு வைத்து விட்டால் வெளியில் வராத ஜென்மங்கள். கற்பு தங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் வைர நெக்லஸ் என்ற எண்ணத்தில் பத்திரமாய்ப் பூட்டிப் பாதுகாக்கின்ற ஜென்மங்கள். அவ்வளவு சுலபமாக உள்ளே நுழைந்து திருடவோ, தூக்கிக் கொண்டு வந்து விடவோ முடியாது."

"ஆமாம், இவள் பேரு என்ன சொன்னே?"

"இன்னும் நான் பெயரைச் சொல்லவே இல்லையடா.."

"சொல்லலைன்னா இப்போ சொல்லித் தொலையேன்."

''அவ்வளவு சுலபமாகச் சொல்லி விடுவேனா? என்னவாக இருக்கும்னு

கொஞ்சம் நீயே யோசியேன்?''

''ஆமாம், பெரிய புதிர். இதுக்கு யோசனை வேற பண்ணனும். இப்போ நீ பெயரைச் சொல்லலை, பல்லு கில்லெல்லாம் உதிர்ந்து போகும்.''

"பல்லு உதிரும், அதென்னப்பா கில்லு? அது எப்படி உதிரும்?"

"டேய்!"

"சரி, முறைக்காதே, சொல்லிடறேன். பேரு ராதிகா."

"என்ன, என்ன?"

"ராதிகா.. கூப்பிடறது ராதி."

"ஒரு மிடில்கிளாசுக்கு இவ்வளவு அழகு தாங்குமாடா?"

"தாங்காது. தாங்கக் கூடாதுன்னுதானே நம் கண்ணில் பட்டிருக்கு."

"இப்போ அவள் கண்ணை விட்டு மறைஞ்சிடப் போறா. வண்டியைக் கிளப்புடா. மெதுவா ஃபாலோ பண்ணிக்கிட்டே போ. பேசிட்டே பின்தொடரலாம்."

வண்டி கிளம்பிற்று. ராதிகா வி.எம். தெருவிலிருந்து எலியட்ஸ் ரோடு திரும்பினதும் அவள் அறியாமல் பின் தொடர்ந்தது.

மீண்டும் அவளைப் பார்த்த கௌரிஷங்கர் யோசனையுடன் கேட்டான்.. "எப்படிடா அவளைப் படிய வைக்கிறது?"

"அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது."

"என்ன?"

"இந்த மாதிரி கட்டுக்கோப்பில் வளருகிற மிடில் கிளாஸ் டீன் ஏஜ் அழகெல்லாம் ஒரு இடத்தில் தடாலென்று விழுந்து விடும். அது எந்த இடம் சொல்லு பார்க்கலாம்."

"நீ சொல்லு."

"எல்லாத்தையும், நானே சொல்லிடறேன். அப்புறம் நீ எப்போதான் யோசிக்கிறது?"

"யோசிக்கறதுக்கும் வழி சொல்றதுக்கும்தானே சகுனி மாதிரி உன்னைக் கூடவே வச்சுட்டிருக்கேன்."

"சரி, துரியோதனா. எனக்கத் தெரிந்த ஒரே வழி நீ அவளைக் காதலிப்பதுதான்."

"காதலிக்கிறதா!" கௌரிஷங்கர் அதிர்ந்து போய் விக்ரமைப் பார்க்க, அவன்



சிரித்துக் கொண்டே பேசினான்.

'"ஆமாண்டா. இன்னிலேருந்து நீ அவளைக் காதலிக்கப் போறே."

"ரப்பீஷ்!" என்று முகம் சிவந்தான்.

''காதலாவது கத்ரிக்காயாவது! நத்திங் டுயிங். ஐ ஹேட் விமன். நீ உங்கப்பாவை வெறுக்கிற மாதிரி நான் பெண் இனத்தையே வெறுக்கிறேன். எனக்கு மட்டும் சக்தியிருந்தால் இந்த உலகத்தில் பெண் இனமே இருக்கக் கூடாது. கூண்டோடு அழியணும்னு சாபம் கொடுத்திருப்பேன்''.



## அறிப்பான் கதைகள் 5

**பூட்டுச் சாவி இல்லாத பெட்டி. காசு கொடுத்து வாங்கும் பெட்டி. அது என்ன?**

**விடை 96ம் பக்கம்**

"இப்போ மட்டும் என்ன செய்யறியாம். சாபம் எதுவும் கொடுக்காமல் அழிச்சிட்டேதானே வரே? போகட்டும். காதலிக்கணும் என்றால் நிஜக் காதல் இல்லைடா முண்டம். வெறும் நடிப்புதான். காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற பாவனையை ஏற்படுத்தினால்தான் இதெல்லாம் நம் வலையில் சுலபமாக விழும். இந்த மிடில் கிளாஸ் பெண்களிடம் ஒரு சைக்காலஜி ரொம்ப நன்றாக ஒர்க் பண்ணும். அதுவும் காலேஜில் படிக்கிற அழகான பெண்களிடம் இன்னமும் சுலபமாக ஒர்க் பண்ணும்.

தங்களின் அழகிற்கு ஏதோ தேவலோகத்திலிருந்து தேவகுமாரன் ஒருத்தன் வந்து சம்யுக்தையைத் தூக்கிக் கொண்டு போன பிருத்விராஜன் மாதிரி தங்களைத் தூக்கிக் கொண்டு போகப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கும். அந்தக் கனவிலேயே வாழ்ந்துக் கொண்டிருக்கும். அதனால் ஒரு பணக்கார வாலிபன், அழகானவன், தன் அழகில் மயங்கிக் காதலிப்பதாகச் சொன்னதும் அப்படியே உச்சி குளிர்ந்து போகும். அதுவும் அடிக்கடி கல்யாணம் என்கிற எலிப் பொறியை நீ வைத்தால் போதும், சடாரென்று மாட்டிக் கொண்டு தன்னையே தியாகம் செய்யச் சித்தமாக இருக்கும். நமக்கு வேண்டியது இப்போது அந்தத் தியாகம்தான். அது மட்டும்தான். அதற்காகக் கொஞ்சம் நடித்தாக வேண்டியிருக்கிறது. அவ்வளவு பெரிய நடிகையின் மகன்.. உனக்கு நடிக்கச் சொல்லித் தர வேண்டுமா?"

"டேய்.." என்று ஆக்ரோஷமாக முறைத்தான் கௌரிஷங்கர். ''அம்மாவை ஞாபகப்படுத்தாதே''.

"இல்லேடா. தப்பு.. தப்பு.. வேணும்னால் நான் கன்னத்தில் போட்டுக்கறேன். அதற்காக நீ இப்போ டிராகுலாவாக மாறி விடாதே. ஆமாம், அந்தப் பெண்ணை இந்த நிமிடத்திலிருந்து காதலிக்க ஆரம்பிக்கலாமா?"

''ஆரம்பிக்கலாம். ஆனால் அது நம்புமா?"

"நம்பும்படி நடிப்பது உன் சாமர்த்தியத்தைப் பொறுத்தது."

"ஒருவேளை அந்தக் கறுப்பன் பெயர் என்ன சொன்னாய்?"

"யாருடா?"

"அதாண்டா, அவளுடைய மாமா பையனோ, அத்தைப் பையனோ அடைகாப்பதாகச் சொன்னாயே?"

"அவன் பெயரா.. ரகுராமன்டா."

"அவனை இவள் காதலிப்பதாக இருந்தால்.."

"அவனையா, இவளா..? நெவர், அப்படி ஒண்ணும் அடங்கிக் கழுத்தை நீட்டுகிற பெண்ணில்லை. கொஞ்சம் திமிர் பிடிச்ச பொண்ணுதான்."

"திமிர் பிடிச்ச பொண்ணுன்னால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்."

"எனக்கும்தான்."

"டேய்..!"

"என்னப்பா முறைக்கிறே? வழக்கப்படி ஷேர் கொடுக்கணும். அப்போதான் மேலே திட்டம் வகுத்துத் தரப்படும்."

"சரி சரி. அடுத்து என்ன? இதோ, அவ காலேஜுக்குள் நுழைந்து விடப் போகிறாள்."

"அவ்வளவு சுலபமாக நுழைய விட்டு விடுவேனா? இதோ பார்த்துக் கொண்டே இரு."

காரின் வேகம் அதிகரித்தது. ராதிகாவை நெருங்கிற்று. பக்கத்தில் தேங்கிக் கிடந்த மழை நீரில் சர்ரிட்டபோது மழைத் தண்ணீரும், சேறும் அவள் மீது வாரியிறைத்தன. தன் உடை முழுவதும் நனைந்துபோன கோபத்தோடு நிமிர்ந்த ராதிகாவின் பக்கத்தை ரிவர்ஸில் நெருங்கி வந்ததும், விக்ரம் சொல்லிக் கொடுத்தபடி, அழகாய்ப் புன்சிரிப்பாய்ச் சிரித்தவாறு, "ஐயம் ஸாரி.. வெரி ஸாரி.." சொல்லிக் கொண்டே காரை விட்டுக் கீழே இறங்கினான் கௌரிஷங்கர்.

5

அன்று, ராதிகாவிற்கு மிகப் பிரியமான எழுத்தாளர் சுஜாதாவின் நேருக்கு நேர் நிகழ்ச்சி இருந்தது. பிற்பகல் இரண்டு மணிக்கு கல்லூரி ஆடிட்டோரியத்திலேயே ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. இதற்காகவே சுஜாதா



பெங்களூரிலிருந்து வந்திருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். அவருடைய
வாசகியான அவள் கேட்பதற்கு நிறையக் கேள்விகளை மனதிலேயே எழுதிக்
கொண்டு வந்திருந்தாள். தான் கேட்கிற கேள்விகளில் அவர் அசந்து போய்விட
வேண்டும் என்று நினைத்தாள். ஆனால் 'கேள்வி கேட்டுத்தான் அசர அடிக்க
வேண்டுமா..' என்கிற எண்ணமும் கூடவே தோன்றியது. எழுந்து நின்றாலே
போதாதா? எதிரில் இருப்பவர்கள் அசர மாட்டார்களா? அதிலும் இவ்வளவு
கவர்ச்சியாகக் கதை எழுதுகிறவர் நிச்சயம் அழகை ரசிப்பவராகத்தான்
இருப்பார். ஆயிரம் நபர்களுக்கிடையில் தனியாகத் தெரிகிற தன் முகம்,
பிரியமான இந்த எழுத்தாளரைக் கவராமல் போய்விடாது.

அந்த நம்பிக்கையில் தன் பொன் நிறத்தை இன்னமும் தூக்கலாகக் காட்ட
நல்ல சிவப்பில் பாவாடை, தாவணி அணிந்து கொண்டு வந்திருந்தாள்.
அதில் இப்போது மழைத் தண்ணீரும் சேரும் விசிறியடிக்கப்பட்டுத் தெப்பலாக
நனைந்து போயிருந்தது. அதற்குக் காரணமாக இருந்த அந்த வெள்ளை
பியட்டைக் கோபமும் அழுகையுமாக நிமிர்ந்து பார்த்தபோது, அந்த கார்
பின்னாலேயே வந்து அவளருகில் நின்றது. அவள் ஆத்திரத்துடன் ஏதோ கேட்க
வாயெடுத்தபோது, "ஐயம் ஸாரி, ஸோ ஸாரி மிஸ்" சொல்லிக் கொண்டே காரை
விட்டுக் கீழே இறங்கி வந்த அந்த இளைஞனை மௌனமாகப் பார்த்தாள்.

நீல நிற டெரின் பேண்ட், மேலே கோடு கோடாகப் போட்ட வெளிநாட்டு
பனியன். அமிதாப்பச்சன் கிராப். ஜிதேந்திரா முகம். துறுதுறுவென்று அலைகிற
பிரகாசமான கண்கள். கழுத்துச் சங்கிலி தங்க எழுத்துக்களில் 'ஐ லவ் யூ'
சொல்ல..

இவள் மீண்டும் தன் கோபத்தை ஞாபகப்படுத்திக் கொண்டு கேட்டாள்.

"என் மிஸ்டர்.. கார் வச்சுக்கிட்டிருக்கிற திமிரில் இப்படித்தான்
ரோடில் நடக்கிறவங்க மேலெல்லாம் சகதியையும், தண்ணீரையும் வாரி
இறைப்பாங்களா?"

கௌரிஷங்கர் நிஜமாய் வருத்தப்படுகிற தொனியில் பேச ஆரம்பித்தான்..

"ஐயம் எக்ஸ்ட்ரீம்லி ஸாரி மிஸ். நான் ஓட்டியிருந்தால் நிதானமாக
வந்திருப்பேன். அவன் என் ஃபிரண்ட். புதுசா கார் ஓட்டக் கத்துக்கிட்ட
ஆர்வத்துல இப்படிப் பண்ணிட்டான். அதுக்காக நான் உங்ககிட்ட மன்னிப்புக்
கேட்டுக்கிறேன்".

ராதிகா அதில் சமாதானமடையாமல் இன்னும் கோபமாகவே கேட்டாள்..

"ஆமாம், மன்னிப்புக் கேட்டால் மட்டும் சரியாகப் போயிடுமா? இப்போ
இந்தச் சேறு வாரியிறைச்ச டிரஸ்ஸோட நான் எப்படி காலேஜுக்குப் போக
முடியும்?"

வேண்டுமென்றே குரல் இன்னமும் தழைய குழைவாகப் பேசினான் கௌரிஷங்கர்..

''திரும்பத் திரும்ப மன்னிப்புக் கேட்பதைத் தவிர என்னால வேற என்ன செய்ய முடியும் சொல்லுங்கள்? வேணும்னால் ஒன்று செய்யலாம்''.

"என்ன?"

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லைன்னால் எங்களோடு காரில் வாருங்கள். உங்களை வீட்டில் டிராப் பண்றோம். வேற டிரஸ் மாற்றிக்கிட்டதும் நாங்களே திரும்ப இங்கே கொண்டு வந்து விட்டு விடுகிறோம்."

அத்தனை பணிவான பேச்சிற்குப் பின்னரும் தான் கோபப்படுவது நியாயமில்லை என்பதால், ராதிகா மேலும் எதுவும் பேசாமல் இருந்தாள். அவன் துறுதுறுக்கிற கண்களால் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தாள். உள்ளுக்குள் மிக ரகசியமாகச் சந்தோஷப்பட்டாள். அதிகப் பெருமையாக உணர்ந்தாள்.

அவன் தோற்றத்தை நிதானமாக எடை போட்டாள்.

வசீகரமானவன். அழகாய் உடை அணியத் தெரிந்தவன். மென்மையாகப் பேசக் கூடியவன். முகத்தையும் அதில் தெரிகிற பாவனையையும் பார்க்கிறபோது மிகவும் நல்லவனாக இருப்பான்போலிருக்கிறது. இந்த கார், அவனின் தோற்றம், எல்லாம் பெரிய பணக்காரன் என்பதைத் தெளிவாக்குகின்றன. அப்படிப்பட்டவன், தன் அழகில் ஈர்க்கப்பட்டு விட்டது புரிந்ததும், சொல்ல முடியாத ஒரு சந்தோஷம் ஏற்பட, 'அவனோடு போய் உடை மாற்றிக் கொண்டு திரும்பி வந்தால் என்ன' என்று யோசித்தாள்.

எப்படியும் தன் அபிமான எழுத்தாளரின் முன் இப்படியே எழுந்து நின்று கேள்வி கேட்க முடியாது, நடந்து போய் உடை மாற்றிக் கொண்டு வரவும் சோம்பேறித்தனம் குறுக்கிட்டது. காந்தி சிலை கடற்கரை எங்கே, மயிலாப்பூர் சித்திரக்குளம் எங்கே? அத்தனை தூரம் நடப்பதை விட இவர்களுடன் காரில் போய், பத்தே நிமிடத்தில் திரும்பலாம். கறுப்புக் கண்ணாடியும், ஏர்கண்டிஷன் காருமாக அட்டகாசமாக இருக்கிறான்.

யாராக இருப்பான் இவன்? ஏதோ பெரிய இடத்துப் பையன்தான். ஒரு மீட்டர் தூரம் தள்ளி நிற்கிறபோதே, செண்ட் வாசனை இதமாய் நாசியைத் தாக்குகிறது. என்ன செண்ட்டாக இருக்கும்.. ஏதாவது வெளிநாட்டு செண்ட்டாகத்தான் இருக்க வேண்டும்.. கூடவே ரகுராமன் வாங்கிக் கொண்டு வருகிற சின்ன பாட்டில் தாழம்பூ செண்ட்டின் நெடி ஞாபகத்திற்கு வந்து முகம் லேசாய்ச் சிணுங்கிற்று.





அழிப்பான் கதைகள் 6

பூமியிலே பிறக்கும். புகையாய்ப் போகும். அது என்ன?

விடை 96ம் பக்கம்

அந்த முகச் சுளிப்பைக் கவனித்த கௌரிஷங்கர், ''ஐயம் ஸாரி. எங்களுடன் காரில் வருவதில் உங்களுக்கு இஷ்டமில்லைன்னால் வேண்டாம். அதற்கு ஏன் இப்படி முகத்தைச் சுளிக்கறீங்க?'' என்றதும், சட்டென்று சிரித்து விட்டாள் ராதிகா.

முகம், சொல்ல முடியாத ஒரு சந்தோஷத்தில் மலர்ந்து கிடக்கக் கேட்டாள். ''முகத்தை சுளிக்கிறேனா? நானா? ஏதோ யோசனையில் இருந்தால் அதற்கு முகம் சுளிக்கிறதாக அர்த்தமா?''

"அவ்வளவு தூரம் யோசிக்கும்படி நான் என்ன கேட்டேன்? கார்ல உங்க வீடு வரை போய் டிரெஸ் மாத்திக்கிட்டு வரலாம்னுதானே கேட்டேன்! இந்தச் சின்ன விஷயத்துக்கு இவ்வளவு யோசனை தேவையா?''

"தேவையில்லைதான். ஆனால் அது எங்கம்மாவுக்குப் புரியாதே?"

"ஓஹோ, அம்மாவுக்குப் பயந்த குழந்தையா?"

"பயமெல்லாம் ஒன்றுமில்லை" – சடாரென்று குறுக்கிட்டு மறுத்தாள் ராதிகா.

அம்மாவிற்குப் பயப்படுவதை அவமானகரமான விஷயமாக நினைத்தாள். தன் சுயகௌரவத்திற்கு இழுக்கு என்று கருதினாள். அதனால் மீண்டும், ''பயமெல்லாம் இல்லை. அம்மா கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்ல நின்றால் இன்றைக்கெல்லாம் நின்னுக்கிட்டே இருக்கணுமேன்னு யோசிச்சேன்'' என்றாள்.

''அப்படின்னா ஒன்று செய்யலாமா?'' திடீரென்று ஞாபகத்திற்கு வந்த தோரணையில் கேட்க, ராதிகா 'என்ன' என்று ஏறிட்டுப் பார்த்தாள்.

"நாங்கள் உங்க வீடு வரை வரவில்லை. தெருக் கோடியிலேயே உங்களை இறக்கி விட்டுக் காத்துக்கிட்டிருக்கோம். நீங்க டிரெஸ் மாற்றிக்கிட்டு வந்ததும் கிளம்பி வந்து விடலாம்.. என்ன?"

அதற்கும் அவள் தயங்கி யோசிக்கவே, மீண்டும் கௌரிஷங்கரே பேசினான்.. "இன்னும் என்ன யோசனை..?"

"இல்லை, அனாவசியமாய் உங்களை ஏன் தொந்தரவுபடுத்தணும்னு பார்க்கிறேன்."

"நல்லாயிருக்கு நீங்க சொல்றது. இதுல தொந்தரவு என்ன இருக்கு? உங்க மேல மழைத் தண்ணீர் வாரியிறைக்கும்படி காரோட்டினது எங்க தப்பு. அதனால்

அந்தத் தப்பைச் சரிபண்ண வேண்டிய பொறுப்பும் எங்களுடையதுதான்."

அதைக் கேட்டுப் புன்சிரிப்பாகச் சிரித்தாள் அவள்.

"கார் ஓட்டினது அவர். ஆனால் இதுவரை அவர் வாயே திறக்கலை. நீங்க என்னடான்னா அவருக்கும் சேர்த்து வருத்தப்படறீங்க."

"நீங்க ஒண்ணு! அவன் ரொம்பப் பயந்துபோய் கிடக்கறாங்க. அழகான ஒரு பெரிய தாமரைப்பூ, கை, கால் முளைத்துத் தெருவுக்கு வந்த மாதிரி வந்துக்கிட்டிருந்த உங்க மீது சேற்றை வாரியிறைச்ச வருத்தத்தில் பேச்சு வராமல் தவிக்கிறான்."

"ஓ.. அப்படியா?" என்று அவள் மீண்டும் புன்னகை செய்ய, கௌரிஷங்கர், "போகலாமா?" என்று கேட்டான்.

கார் கிளம்பி, காந்தி சிலைக்கு எதிரில் அரை வட்டமடித்து வந்த வழியில் செல்ல, ஒருக்களித்து அவளைச் சுலபமாய்ப் பார்த்துப் பேசுகிற வசதியுடன் உட்கார்ந்து ஒன்றும் தெரியாத மாதிரி கேட்டான்.

"உங்க வீடு எங்கே இருக்கு?"

"சித்திரக்குளம் பக்கம் போகணும்"

"மயிலாப்பூரா?"

"ஆமாம்.."

"எங்கம்மா இந்த காரை என் பர்த்டேக்கு பிரஸன்ட் பண்ணி ஒரு வருஷமாகிறது. இந்த ஒரு வருஷத்தில் இன்னிக்குத்தான் இதன் ஜன்மம் சாபல்யம் அடைஞ்சிருக்கு."

"எப்படி?"

"இவ்வளவு அழகான ஒரு பெண் ஏறக் கொடுத்து வச்சிருக்கிறதில்லையா?"

"ஓ.." என்று முகம் சிவக்க சிணுங்கலாய்த் தலையைக் குனிந்த கொண்டாள் ராதிகா.

"நீங்க ரொம்பவும் புகழறீங்க."

"புகழ்ச்சியில்லை இது. 100 சதவீதம் நிஜம். 'Thing of beauty is joy for ever' (திங் ஆஃப் ப்யூட்டி இஸ் ஜாய் ஃபார் எவர்). படிச்சிருக்கீங்க இல்லையா மிஸ்.."

அவளின் பெயருக்குத் தடுமாற.. "ராதிகா" என்றாள் அவள்.



"என்ன படிக்கிறீங்க?"

"பி.ஏ.,"

"எந்த இயர்?"

"ஸெகண்ட். நீங்க?"

"அதே பி.ஏ.,தான். ஆனால் மூணாவது வருஷம்"

"எந்தக் காலேஜ்..?"

"நியூ.."

"பேரு..?"

"ஸாரி.. இன்னும் நாங்க எங்களை அறிமுகப்படுத்திக்கலை இல்லையா..? என் பேரு கௌரிஷங்கர். கூப்பிடறது கௌரிஷ். இவன் விக்ரம்."

அவள் ஏதோ கேட்க வாயெடுத்தபோது விக்ரம் முதல் முறையாகப் பேசினான். "சித்திரக்குளம் வந்தாச்சு கௌரீஷ். வீடு எங்கேன்னு கேளு?" அவளுக்குத் தெரியாமல் கௌரிஷங்கரைப் பார்த்துக் கண்ணடித்தான்.

அதைக் கவனிக்காத ராதிகா சொன்னாள்.. "அடுத்த தெரு திரும்பினால் மூணாவது வீடு. நீங்க ரெண்டு பேரும் இங்கேயே இருங்க. இதோ ஒரு நிமிஷத்துல வந்துடறேன்".

ராதிகா கீழே இறங்கினதும் கௌரிஷ் சொன்னான்.

"அவசரமில்லை.. நிதானமாகவே வாங்க.."

அவள் நகர்ந்ததும் சிகரெட் பாக்கெட்டை எடுத்து விக்ரமிடம் நீட்டி தானும் பற்ற வைத்துக் கொண்டான்.

'தெருவில் தன்னை யாரும் கவனிக்கிறார்களா?' என்று பார்த்தபின் ராதிகா வேகமாக நடக்கத் துவங்கினதும், அதுவரை சற்றுத் தள்ளி, பெட்டிக் கடை வாசலில் சைக்கிளோடு நின்றிருந்த ரகுராமன், அவளையும் அந்த வெள்ளை பியட்டையும் மாறி மாறிப் பார்த்து, மனசு பதறித் துடிக்க அவளைப் பின் தொடர்ந்து சைக்கிளை மிதித்தான்.

6

சைக்கிளில் ஏறி உட்காருவதற்கு முன்பு இருந்த வேகமும், துடிப்பும் அப்புறம் ரகுராமனிடம் இல்லை. அடுத்த நிமிடமே சட்டென்று நிதானத்திற்கு

வந்து சைக்கிளை விட்டுக் கீழே இறங்கினான். பக்கத்திலிருந்த லாட்டரிச் சீட்டுக் கடை ஓரமாக சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி விட்டுச் சுவரோரம் போய் நின்று கொண்டான். தூரத்தில் வெள்ளை பியட்டும், அதிலிருந்தவர்களும் கண்ணில் பட்டபோது, அவனுக்குள் மீண்டும் ஒரு வலியும், வேதனையும் ஏற்பட்டன. மனத்திற்குள் சொல்ல முடியாத ஹிம்ஸை ஒன்று எட்டிப் பார்த்தது.

ரகுராமனிடம் ஒரு தீர்க்கதரிசனப் பார்வை உண்டு. பார்க்கிறபோதே இவர்கள் நல்லவர்கள், இவர்கள் கெட்டவர்கள் என்று தரம் பிரிக்கிற, அனுமானிக்கிற தன்மை உண்டு. இதுவரை அவனது அனுமானத்தில் தப்பு ஏற்பட்டதே கிடையாது. கடைக்கு வருகிறவர்களை இந்த உள் மனத்தின் குரலை வைத்தே கண்டுபிடித்து விடுவான்.

“டேய் முத்துசாமி. இதோ வந்துட்டுப் போனாரே.. வெள்ளை சட்டை போட்டுக்கிட்டு ஒருத்தர், அவர்கிட்டே ஜாக்கிரதையாக இரு. மனுஷன் பார்வையே சரியில்லை..” என்று கடையில் தன் கீழே இருக்கிற பையனிடம் எச்சரிப்பான்.

அதேமாதிரி, ஒரு நாள் நடுப்பகல் இவன் சாப்பாட்டிற்குப் போன நேரத்தில் அந்த ஆசாமி. கத்தியைக் காட்டிப் பையனை மிரட்டி, சாமான்களைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டிருக்கிறான்.

“பாலு.. யார்டா இவன்? உன் கூடப் படிக்கிறவனா?”

வீட்டிற்கு வந்த பையன்களில் ஒருவனை மட்டும் அடையாளம் காட்டி விசாரித்தான்..

“ஆமாம் அத்தான். அவன்தான் எங்க டீம் காப்டன். பணக்காரப் பையன். கிரிக்கெட் பாட், ஸ்டம்ப் எல்லாம் அவனே வாங்கித் தந்திட்டான்..”

“அப்படியா? எனக்கென்னவோ அந்தப் பையனுடைய மூஞ்சி சரியாகப் படலை. நீ வேற டீமுக்கு மாறி விளையாடேன் பாலு..”

“போங்க அத்தான். உங்களுக்கு எல்லார் மேலேயும் சந்தேகம்தான். இவன் ரொம்ப நல்ல பையன்.”

அந்த நல்ல பையனைப் பற்றிப் பின்னால் தெரிய வந்தது. ஒழுங்காகப் பள்ளிக்கூடத்திற்குப் போவதில்லை. பள்ளிக்குப் போவதாக வீட்டில் சொல்லிவிட்டு டிரைவ் – இன், சினிமா என்று அலைகிறவன். அப்பா அம்மாவிற்குத் தெரியாமல் பீரோவிலிருந்து பணம் எடுக்கிறவன். அந்த வயதிலேயே சிகரெட் பிடிக்கிறவன்..



அன்று எதேச்சையாக, காலை பதினொரு மணியளவில் கடைக்கு வருகிற வாடிக்கையாளருடன் ‘டிரைவ் இன்’னில் கோபாலுடன் அந்தப் பையன் உட்கார்ந்து சிகரெட் பிடிப்பதைப் பார்த்தான். அந்தப் பையன் பாலகோபாலிடம் தான் பிடித்த சிகரெட்டைக் கொடுத்துப் புகைக்கும்படி வற்புறுத்த, இவன், ‘‘வேண்டாண்டா.. எனக்கு பயமா இருக்குடா..’’ என்று தயங்கிக் கொண்டே கை நீட்டின நேரத்தில், அது ஓட்டல், பொது இடம் என்பதை மறந்து, தன்னுடன் வந்தவரை மறந்து, அடி வயிறு பற்றி எரியப் பாய்ந்து, பாலகோபாலின் சட்டை காலரைப் பற்றித் தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்து ஆட்டோவில் தள்ளித் தானும் ஏறிக் கொண்டான்.

வீட்டிற்கு வந்ததும் தன் ஆத்திரமும், வெறியும் அடங்குகிறவரை அடித்துத் தீர்த்தான். ‘‘வேண்டாம் அத்தான், இனிமேல் பண்ண மாட்டேன் அத்தான்’’ என்ற பாலகோபாலைக் கதறக் கதற அடித்தவன், அதன்பின் அவனைக் கட்டிக் கொண்டு தானும் அழுதான்.

“இப்படிப் பண்ணலாமா பாலு. அந்தப் பையன் சரியில்லே, பழகாதேன்னு நான் அப்பவே சொல்லலையா? அவனெல்லாம் பணக்கார இடத்துப் பையன். கவலையும் கஷ்டமும் தெரியாமல் வளர்ந்தவன். எப்படியும் போவான். நீ அப்படியில்லே பாலு. உழைச்சு சம்பாதிச்சு குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியவன். உன்னை நம்பித்தான் அத்தை இருக்காங்க. அவங்களுக்காகவாவது நீ படிச்சு முன்னேற வேண்டாம்? மளிகைக் கடையைப் பெரிய டிபார்ட்மென்ட்டல் ஸ்டோராக்கிப் பார்க்க வேண்டாம்? அத்தையை சோபாவில் சுகப்பட உட்கார்த்தி வைக்க வேண்டாம்? இந்த ஆசையெல்லாம் இல்லாமல் கெட்ட சகவாசம் வச்சிட்டிருந்தால் திசை தெரியாமல் கெட்டுப் போயிட மாட்டாயா? அப்படிப் போகலாமா சொல்லு..?’’

“இல்லேத்தான். இனிமேல் சத்தியமாக நான் அப்படிப் பண்ண மாட்டேன். அந்தப் பையனோட சேர மாட்டேன் அத்தான்..”

பாலகோபாலே தன் தவறை உணரும்படி செய்து, மனசை மாற்றினவன், அதன்பின் எப்போதும் பாலகோபால் மீது ஒரு கவனம் வைத்துக் கொண்டே இருப்பவன்..

மனிதர்களுக்கு மட்டுமில்லை. இந்த செய்கைக்கு அடுத்த செய்கை என்னவாக இருக்கும் என்பதை ஊகிக்கிற தூரப் பார்வையும் உண்டு. அதனால் நாகம்மாள் அவனைக் கேட்காமல் எதையும் செய்ய மாட்டாள். வீட்டின் ஒவ்வொரு இயக்கத்திற்கும் அவளுக்கு ரகுராமன் வேண்டும்.

‘‘தம்பி, இன்னிக்கு என்ன சாம்பார் வைக்கட்டும்பா?’’

''கோடி வீட்டு அம்மா இந்தச் சங்கிலியை வித்துடறாங்களாம். வாங்கிக்கலாமா பாரு, ரகு.''

''ஏன் தம்பி, புரட்டாசி பிறந்துடுச்சே.. எந்த சனிக்கிழமை பூஜை போடலாம்னு சொல்லு..?''

''தீபாவளி வருதே.. என்ன துணி எடுக்கணுமோ போய் எடுத்திட்டு வந்துடுப்பா..''

இப்படி எதற்கும் ரகுராமனின் அபிப்பிராயமும், முடிவும் கேட்டு நடப்பதற்குக் காரணம், அவன் எது செய்தாலும் சரியாக இருக்கும் என்கிற நம்பிக்கை.. பின்னால் வரப்போவதை முன் கூட்டியே உணருகிற தீர்க்கதரிசனம். நாளை இது நடக்கும் என்று பார்க்க முடிகிற தொலை நோக்குப் பார்வை..

அந்தப் பார்வை அப்போது அந்த ஃபியட் காரில் உட்கார்ந்திருக்கிற இரண்டு இளைஞர்களும் நல்லவர்கள் இல்லை என்று உணர்த்திற்று. இவர்களின் பார்வையில் தெளிவில்லை. முகத்தில் அமைதியில்லை. எல்லாவற்றிற்கும் மேல் வயதிற்கு மீறின ஒரு முதுமை தென்படுகிறது. அலட்சியம் தெரிகிறது, பணத்தின் திமிர் புலப்படுகிறது. அதிலும் டிரைவர் ஸீட்டிற்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற அந்தப் பையன் ராதிகாவைப் பார்த்த பார்வை.. உதட்டில் தவழ்ந்த சிரிப்பு..

சத்தியமாய் இவன் நல்லவிதமாய்ப் பழகவில்லை. இவனது எண்ணத்தில் நன்மையில்லை. இது புரியாமல் ராதிகா ஏன் இவர்களோடு காரில் வந்து இறங்குகிறாள்? அதிலும் தெருக் கோடியில் இறங்கி அவர்களைக் காத்திருக்கச் சொல்லி வீட்டிற்கு நடந்து ஓடுகிறாள்? மனத்தில் களங்கமில்லாத பட்சத்தில் வீட்டு வாசலிலேயே போய் இறங்கி இருக்கலாமே..

காரை விட்டு இறங்கின ராதிகாவின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி, கண்களின் பளிச்சிடல், உதட்டுச் சுழிப்பில் மின்னின மின்னல், கன்னங்களின் செழுமை.. எதுவும் பொய்யில்லை. பிரமையில்லை, கற்பனை இல்லை. அப்படி ஒரு சந்தோஷத்தில் இதுவரை அவளைப் பார்த்த நினைவில்லை.

'இந்தச் சந்தோஷமும் சிரிப்பும் இவர்களின் பழக்கமும் நல்லதற்கில்லை' என்று தன் உள்ளுணர்வு சொல்வதை அவளிடம் சொன்னால் கேட்பாளா? எடுத்துக் கொள்வாளா? டிரைவ் இன்னிலிருந்து இழுத்துக் கொண்டு வந்த பாலகோபாலை அறைந்த மாதிரி இவளை ஏன் அறைய முடியவில்லை?

பாலகோபால் பையன். வயதில் சின்னவன். எல்லாவற்றிலும் மேலாக பயந்த சுபாவமுள்ளவன். அகங்காரமும், திமிரும், தான் என்ற கர்வமும் அற்றவன். எது சொன்னாலும் கேட்டு அடங்கி நடக்கக் கூடியவன்.



ஆனால் ராதிகா அப்படியில்லை. தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்கிற அசட்டுத்தனமான துணிச்சலும், அழகின் மீது நம்பிக்கையும் வைத்திருப்பவள். இந்த அழகிற்கு யாராக இருந்தாலும் காலடியில் வந்து விழுவார்கள் என்று நினைப்பவள். எதுவோ பெரிசாகத் தனக்காகக் காத்துக் கொண்டிருக்கிற மாதிரியும், அந்த அரண்மனைக் கதவு திறக்கிறவரை, இந்த வீடு தற்காலிகத் தங்குமிடம் மாதிரியும் ஒரு பிரமையையும் வளர்த்துக் கொண்டிருப்பவள்.

### அழிப்பான் கதைகள் 7



மூன்று கண்களிருக்கும். பார்க்க முடியாது. அது என்ன?

விடை 96ம் பக்கம்

அது வெறும் பிரமைதான் என்று அவளிடம் யாரும் எடுத்துச் சொல்லி விட முடியாது. ஒருவேளை அது நிஜமாவதானாலும், நிச்சயம் இப்போது காரில் கொண்டு வந்து இறக்கி விட்ட இந்தத் தலை கலைந்த இளைஞர்கள் அதற்குக் காரணகர்த்தாக்களாக இருக்க மாட்டார்கள் என்று தன் உள் மனத்திற்குள் மிக ஆழமாகவும் அழுத்தமாகவும் படுகிற அபிப்பிராயத்தை எடுத்துச் சொன்னால் அவள் கேட்க மாட்டாள். கேட்காததோடு தன்னை அலட்சியப்படுத்தியும் பேசி விடுவாள்.

இப்படிப்பட்டவளிடம் இன்னும் கூடத் தன் மனசு விடாப்பிடியாக லயித்துக் கிடப்பதை நினைத்து வேதனைப்பட்டான்.

''அத்தை, ராதிகாவுக்கு ஒரு நல்ல இடமாகப் பார்த்து முடிச்சுடணும்..'' என்று சொல்லி இரண்டு மூன்று வரன்களைப் பார்த்துக் கொண்டு வந்தாலும் உன் மனசின் உள்ளே.. எங்கோ ஒரு மூலையில், 'என்றாவது ஒருநாள், இவள் தனக்கு எஸ் சொல்லக் கூடும்' என்கிற நம்பிக்கை அப்போது மீதமிருந்தது. ஆனாலும் அவன் அதை வெளிக் காட்டாமலே வரன் தேடிக் கொண்டு வந்தான். பார்த்த மூன்று இடங்களும் ஓரளவு வசதியானவை. ஒரு பையன் பி.காம். முடித்து பாங்க் ஒன்றில் வேலையாக இருந்தான்.

"அடே, நானே பி.ஏ படிக்கிறேன். எனக்கு வெறும் பி.காம் பையன்தானா?" என்று அந்த இடத்தை ஒதுக்கினாள் ராதிகா.

அடுத்து ஒரு வக்கீல்.

"ஆமாம், இடறி விழுந்தால் மூலைக்கு மூலை கேஸ் எதுவும் வராதான்னு காத்துக்கிட்டு ஓராயிரம் வக்கீல்கள். இந்த லட்சணத்திலே கல்யாணத்துக்கு ரெண்டு தங்கைகள் வேற நிக்கறாங்க.. நான் பண்ணிக்க மாட்டேன்."

மூன்றாவதாக கல்லூரி லெக்சரர். அதையும் மறுத்து விட்டாள் அவள். புகைப்படத்தை நீட்டின உடனே, ''இந்த மூஞ்சிக்குக் கல்யாணம் ஒண்ணுதான் பாக்கி'' என்று சண்டைக்கு வந்தாள்.

"ஆமாம், தெரியாமல்தான் கேட்கிறேன் ரகுராமன்.."

பாலகோபால் மாதிரி இவள் அத்தான் போட்டுக் கூப்பிடுவதில்லை. ஆரம்பத்திலிருந்தே ரகுராமன்தான். நாகம்மாள் கூட அதற்காக இவளை ரகசியமாகக் கண்டித்திருக்கிறாள்.

"எனக்கு நிஜமாகவா நீங்க கல்யாணத்திற்கு வரன் பார்க்கறீங்க?"

இவன் அடிபட்ட மாதிரி அவளை நிமிர்ந்து பார்த்துக் கேட்டான்.. ''ஏன் அப்படிக் கேட்கிறே ராதி?''

உடனே அவள் முகம் சிவந்து வார்த்தைகள் காந்தும்.

"இதோ பாருங்க. ராதி, கீதின்ற கொஞ்சல் பேரெல்லாம் எனக்கு வேணாம். நான் உங்களை முழுசாக ரகுராமன்னு கூப்பிடற மாதிரி நீங்களும் என்னை முழுசா ராதிகான்னு கூப்பிடுங்க.. என்ன?"

"சரி.." இவன் கீழ் உதட்டை இறுக்கிக் கொள்வான்.

அவள் தொடருவாள். "எனக்கென்னவோ நீங்க வேணும்னே இப்படிப்பட்ட வரன்களாகப் பார்த்துக்கிட்டு வர்ற மாதிரி தோணுது. அப்போதுதான் ஒவ்வொரு இடமாகத் தட்டிப்போய், கடைசியில் மனசு சலிச்சு நான் உங்களையே கல்யாணம் பண்ணிப்பேன்னு நினைக்கிறீங்க போலிருக்கு."

சுறுசுறுவென்று அவன் முகம் சிவந்தது. விருட்டென்று கோபமும், அவமானமும் தலைதூக்க, ஒரு ஆக்ரோஷத்தோடு பேசினான்..

"இதோ பாரு ராதிகா. இதுவரை எனக்குள் அந்த மாதிரி ஒரு ஆசை இருந்தது நிஜம்தான். ஆனால் இந்த நிமிஷத்திலிருந்து அந்த ஆசை செத்துப் போச்சு. சத்தியமாகச் சொல்றேன். இனிமேல் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிற நினைப்பு என்னுள் எட்டிப் பார்க்காது. நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு இப்பவே சத்தியம் வேணும்னாலும் பண்ணித் தரேன்.."

"எங்கே பண்ணித் தாங்க.."

அவள் கை நீண்டதும் சரேலென்று அந்தக் கையைத் தட்டி மகளின் கன்னத்தில் ஓர் அறை வைத்தாள் நாகம்மாள்.

"உள்ளே போடி. ஒரு அடக்கம், அமரிக்கை எதுவுமில்லாமல் என்ன பேச்சு பேசறே?"



ஜிவுஜிவுத்த கன்னத்தைத் தடவியபடி ஆக்ரோஷமாக அவனையும், அம்மாவையும் பார்த்தாள் அவள்.

"இப்போ திருப்தியா? மனசுக்கு சந்தோஷமாயிருக்கா? ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! சத்தியம் பண்ணித் தருவதில் இருந்து தப்பித்ததோடு, அம்மாகிட்டே அடி வாங்கியும் கொடுத்தாச்சு!'' அவள் ரகுராமனைப் பார்த்துப் பொரும..

"ஏய்.." என்று மகளை முறைத்த நாகம்மாளை அடக்கினான் அவன்.

''ப்ளீஸ்! நீங்க கொஞ்சம் சும்மா இருங்க அத்தை. இதோ பாரு ராதிகா. கையடிச்சு கொடுத்தால்தான் சத்தியம்னு இல்லே. வாயால் சொல்லி மனசால் நினைச்சால்கூட சத்தியம்தான். ஆனாலும், நான் இதோ அத்தை தலை மேல் அடிச்சு சத்தியம் பண்றேன். எந்தச் சந்தர்ப்பத்திலும், எக்காரணம் கொண்டும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். போதுமா?''

"போதும்.." என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட ராதிகா எதிலிருந்தோ விடுபட்ட சுதந்திர உணர்வுடன் உள்ளே போக.. அந்த அதிர்ச்சியைத் தாங்க இயலாத நாகம்மாள் கண்ணீரோடு கேட்டாள்..

''அவளுக்குத்தான் புத்தியில்லேனா, உனக்குக் கூடவா ரகு புத்தியில்லாமல் போயிடுச்சு?"

அவன் பதில் சொல்லாமல் வருத்தம் தோய்ந்த புன்னகையுடன் நகர்ந்து வந்தான். அவள் தனக்கில்லை, தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதில்லை. ஆனாலும் அவன் சங்கடப்பட்டான். அந்த குடும்பப் பெயர், கௌரவம் எல்லாம் காப்பாற்றப்பட வேண்டும். அற்புதமான அழகும், புத்திசாலித்தனமும் நிறைந்த ஓர் இளம் பெண்ணின் வாழ்க்கை பாழாகி விடக் கூடாது. அதுவும் தான் இருக்கிறபோது அப்படி நடக்கக் கூடாது. இதோ.. இந்த இளைஞர்களிடமிருந்து அவளைக் காப்பாற்றியாக வேண்டும்!

அவர்கள் ராதிகாவை வீடு வரை கொண்டு வந்து விட்டிருந்தால் பாதி சந்தேகம் குறைந்திருக்கும். இவர்களும் வீட்டு வாசலில் விடவில்லை. அவளும் கீழே இறங்கி ஒரு பயத்துடனும் பதட்டத்துடனும் தன்னை யாராவது கவனிக்கிறார்களா? என்பதைக் கவனித்த பின்னரே நடக்கிறாள். சாதாரணமாக காரில் வந்து இறங்கினால் இந்த பயத்திற்கும் பதட்டத்திற்கும் அவசியமில்லையே..

அதுவுமில்லாமல் இந்த நேரத்தில் காலேஜில் இருக்க வேண்டியவள் எதற்காக வீடு வந்திருக்கிறாள்? இவர்கள் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் அவள் திரும்பி வர..

அவன் நினைத்து முடிப்பதற்குள், வேறு பாவாடை தாவணியுடன் தலை குனிந்து பரபரவென்று நடந்து வந்த ராதிகா மீண்டும் அந்த காரில் ஏறிக் கொள்ள, கார் கிளம்பியது.

கார் கிளம்பியதும் ரகுராமன் அவசரமாக ஓடி, சைக்கிளின் ஸ்டாண்டை அகற்றி ஏறி மிதித்தான். ஆனாலும் காரின் வேகத்திற்குப் பின்தொடருவது சாத்தியமில்லாது போயிற்று. அவர்கள் அவளின் கல்லூரிக்குப் போயிருக்கக் கூடும் என்ற அனுமானத்தில் அவன் கல்லூரி வாசலில் சைக்கிளிலிருந்து இறங்கிப் பூட்டினபோது, சட்டை வியர்வையில் முதுகோடு முதுகாக ஒட்டிக் கொண்டிருந்தது. வெய்யிலில் கறுப்பு முகம் வார்னிஷ் அடித்த நூக்கு மரமாகப் பளபளத்தது.

கல்லூரி காம்பவுண்டினுள் அந்த வெள்ளை ஃபியட்டோ, இளைஞர்களோ காணப்படாததைக் கவனித்த ரகுராமன் ஒரு வினாடி தயங்கி யோசித்தான். பின் விசாரித்துக் கொண்டு ராதிகாவின் வகுப்பிற்குப் போய்க் கேட்டபோது..

''அவள் இன்னைக்கு காலேஜுக்கு வரவில்லை'' என்று தகவல் கிடைக்க..

ரகுராமன் அப்படியே நின்றான்.

7

"அட.. போகும்போது சிவப்பில் போய், வரும்போது பச்சையில் வருகிறீர்களே, அப்படின்னா சிக்னல் ஓகேன்னு அர்த்தமா?"

திரும்பவும் வந்து காரில் ஏறிக்கொண்ட ராதிகாவைக் குறுகுறுவென்று பார்த்தபடி கேட்டான் கௌரிஷங்கர். அந்தப் பார்வையின் ஈர்ப்புச் சக்தியைத் தாங்க இயலாமல் தலையைக் குனிந்தபடி கேட்டாள் அவள்.


"அப்படின்னா?'' – ஒன்றும் புரியாத மாதிரி கேள்வி திரும்பி வந்ததும் குறும்புச் சிரிப்பாய்ச் சிரித்தான்.

"அட, இவ்வளவுதானா நீங்க..? நான் என்னவோ ரொம்பப் புத்திசாலின்னு இல்ல நினைச்சுட்டிருந்தேன்." கண்களைச் சிமிட்டிக் கேலியான குரலில் கேட்டதும் அவளும் அதே வேகத்துடன் தலையை நிமிர்த்தினாள்.

"ஒரு பெரிய கோட்டைக் கை வைக்காமல் எப்படிச் சின்னக் கோடாக்குவது. சொல்லுங்கள் பார்க்கலாம்.."

"இது ரொம்பப் ரொம்பப் பழைய புதிர். ஆனாலும் சொல்கிறேன். அந்தக்





கோட்டிற்குப் பக்கத்தில் இன்னொரு கோட்டைப் பெரிசா இழுத்திங்கன்னா இது சின்னக் கோடாகி விடுகிறது."

"ரொம்ப கரெக்ட். அதே மாதிரி நான் புத்திசாலிதான். என் பக்கத்தில் இன்னொரு பெரிய புத்திசாலி வந்து உட்காருகிறதுபோது என்னுடைய புத்திசாலித்தனம் குறைச்சலாகத் தெரிகிறது."

"ஆகா!" என்று நிஜமாகவே சந்தோஷப்பட்டுச் சிரித்தான் கௌரிஷங்கர்.

"எமன். இது சாதாரண வாயாகத் தெரியலை. இன்னும் கொஞ்சம் இந்த வாயைக் கிண்டிப் பார்க்கணும்போல இருக்கு. இன்னிக்கு முழுசும் பேசிட்டே இருக்கணும்போல இருக்கு."

"ஏண்டா விக்ரம்.. இன்னிக்கு காலேஜுக்கு மட்டம் போட்டுட்டால் என்ன?"

விக்ரம் உடனே மிகத் தீவிரமாக மறுப்பவனாகச் சொன்னான்..

"நோ நோ! என்ன பேசற கௌரிஷ். இதுவரை என்னிக்காவது நாம் இப்படித் தேவையில்லாமல் மட்டம் போட்டிருக்கோமா..? அனாவசியமாக இன்னிக்கு எதுக்குப் போடணும்?"

"இல்லேடா, அடக்கம், அழகு, புத்திசாலித்தனம் எல்லாம் நிறைந்த ஒரு பெண்ணைச் சந்திச்சிருக்கோமே.. அதைத் கொண்டாடலாமென்று நினைச்சுக் கேட்டேன்."

"கொண்டாடறதுன்னா எப்படி?"

"மிஸ் ராதிகா எப்படிச் சொல்றாங்களோ, அப்படி?"

"நானா?" என்று இழுத்தாள் அவள்.. "இன்னிக்கு நான் அவசியம் காலேஜுக்குப் போகணுமே."

"அப்படி என்ன விஷயம்னு தெரிஞ்சுக்கலாமா?" வேண்டுமென்றே பணிவாகக் கேட்டான் கௌரிஷங்கர்.

"இல்லை, இன்னிக்கு மத்தியானம் ரெண்டு மணிக்கு என்னோட அபிமான எழுத்தாளரின் நேருக்கு நேர் எங்க காலேஜ் ஆடிட்டோரியத்திலேயே இருக்கு.."

"அது யார் உங்க அபிமான எழுத்தாளர்?"

"சுஜாதா."



"ஓஹோ. கணேஷ், வசந்த்னு ரெண்டு பேரை வச்சு எழுதுவாரே அவரா?"

"அவரேதான்.."

அதைக் கேட்டு கௌரிஷங்கரின் முகம் வாடிற்று. மேலே ஒரு பேச்சுப் பேசாமல் தொங்கப் போட்டுக் கொண்டு மௌனமாக வர, அவளே மீண்டும் கேட்டாள்.



அழிப்பான் கதைகள் 8

**மணி அடித்தால் மலைப்பாம்பு நிற்கும். அது என்ன?**

**விடை 96ம் பக்கம்**

"என்ன திடீர்னு பேசாமல் இருக்கீங்க?"

"பின்ன என்னங்க?" என்று திரும்பி அவளை சோகமாகப் பார்த்தான். குரலிலும் ஒரு ஏக்கம் இழையோடிற்று.

"நாங்க உங்ககிட்டே பேசணும்.. பழகணும்னு ஆசையாக இருக்கோம். காலேஜைக் கூட கட் பண்ணிட்டு வரத் தயாராகக் காத்துக்கிட்டிருக்கோம். இதுவரை ஒரு நாள் கூட இப்படி கட் பண்ணினதில்லை. உங்களுக்காக எல்லாம் செய்யத் துடிச்சிட்டிருக்கிறபோது, நீங்க 'சுஜாதா ஃபேஸ் டு ஃபேஸ்'னு பதில் சொல்றீங்க. கேட்கிறபோது எத்தனை கஷ்டமாக இருக்கு? எங்களை விட உங்களுக்கு அந்த சுஜாதாதானே பெரிசாப் போயிட்டார்? இருக்கட்டுங்க. பரவாயில்லை. டேய் விக்கி.. இப்படி காலேஜ் ஓரமா வாசலிலேயே காரை நிறுத்துடா! அவங்க சுஜாதாவோட கேள்வி பதிலுக்குப் போகட்டும்.."

விக்ரம் கல்லூரி வாசலில் நடைபாதை ஓரமாகக் காரை நிறுத்த, ராதிகா கீழே இறங்காமல் உட்கார்ந்திருந்தாள். அரை நிமிடத்திற்குப் பின் திரும்பிப் பார்த்த கௌரிஷங்கர், "எங்க.. இறங்கலிங்களா? வேணும்னால் உள்ளே போகச் சொல்லட்டுமா? இறங்கிக்கறீங்களா?"

"வேணாம். நான் போகலை" ராதிகாவிடமிருந்து முணுமுணுப்பாகப் பதில் வந்ததும் அவன் இன்னமும் தணிந்த குரலில் விசனம் இழையோடச் சொன்னான்..

"வேணாம். இப்படி அரைகுறை மனசோட எங்ககூட வர வேணாம். முடிந்தால், மீண்டும் சந்தித்தால் இன்னொரு முறை பார்த்துக்கலாம்."

"இல்லை, இன்னிக்கே போகலாம்."

"வேணாங்க. அப்புறம் சுஜாதாவோட கேள்வி பதிலில் கலந்துக்க முடியலையே. அவரைப் பார்க்க முடியலையேனு ரகசியமா வருத்தப்படுவீங்க. எங்களை உள்ளுக்குள் திட்டுவீங்க."

"சீ! சீ!" என்று வேகமாய்க் கண்கள் அகலக் குழந்தை மாதிரி தலையாட்டினாள்.

''இந்த ரகசியமா அழறது, உள்ளுக்குள் திட்டறதெல்லாம் என்கிட்டே கிடையாது. எதுவானாலும் முகத்துக்கு எதிரிலே பேசிடுவேன். வெட்டு ஒன்று துண்டு ரெண்டுன்னு பதில் சொல்வேன். ஐயம் வெரி ஃப்ராங்க். அதனால் வரேன்னு சொன்னால் வரேன்தான். சுஜாதாவோட நேருக்கு நேர் இல்லைன்னால் என்ன? அவரை விட எனக்கு நீங்கதான் முக்கியம். அதனால் உங்க கூடவே வரேன்.''

"ஓ.. தாங்க்யூ ராதிகா. தாங்க்யூ ஸோ மச்" உணர்ச்சிவசப்பட்டவனைப் போல் சடாரென்று அவள் கையைப் பற்றி 'நன்றி' சொன்னபோது, அவளுக்குள் 140 வோல்ட் மின்சாரம் கிறுகிறுவென்று பாய்ந்து உடம்பு சிலிர்த்தது. நெஞ்சிற்குள் குபீரென்று எதோ பொங்கி எழ, ஒரு வினாடி சுய நினைவற்றவளானாள். அவன் கைக்குள்ளிருந்த தன் கையை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் கூட இல்லாமல் தலை குனிந்து உட்கார்ந்திருக்க..

கௌரிஷங்கர் விக்ரமைப் பார்த்து வெற்றிப் புன்னகையோடு கண்ணடித்தான்..

'நாம் நினைத்ததை விடச் சுலபமாக இது விழுந்து விட்டது, பார்த்தாயா?'

'நான்தான் அப்போதே சொன்னேனே.. இந்த மிடில் கிளாஸ் அழகெல்லாம் ரொம்பச் சுலபமாகக் காதல் என்கிற அஸ்திரத்துக்குக் கீழே விழுந்து விடும்னு. என் கணக்கு எப்போதும் தப்பாது வாத்யாரே. ம் ப்ரொஸிட் ஃபர்தர்..'

கண் பார்வையால் விக்ரம் காட்டின பச்சைக் கொடி புரிய, தன் செஸ் விளையாட்டில் அடுத்த ராணியை நகர்த்த ஆரம்பித்து, ராஜாவை எப்படி 'மேட்' செய்யலாமென்று யோசித்தான்.

"எங்கே போகலாம்னு நீங்களே சொல்லுங்க. நீங்கதான் இன்னிக்கு சீஃப் கெஸ்ட். அதனால் இன்னைக்கு முழுக்க உங்க விருப்பப்படிதான் நடக்கணும்."

"ஐயையோ, எனக்கு அதெல்லாம் தெரியாது. நீங்க என்ன சொல்றீங்களோ அதன்படி செய்யலாம். முதல்ல காலேஜ் வாசலை விட்டுக் காரை கிளப்புங்க. யார் கண்ணிலாவது பட்டால் கஷ்டம்."

விக்ரம் காரைக் கிளப்பி பீச் ரோடிலேயே நேராக, ஆனால் மெதுவாகப் போய்க் கொண்டே கேட்டான்..

"என்ன கௌரிஷ். வண்டியை எங்கே விட்டும்?"



"ம். எங்கே போறது? நீதான் சொல்லேண்டா?"

"ஸெலிப்ரேஷன்னா என்ன அர்த்தம்? எங்கேயாவது டிபன், காப்பி சாப்பிட்டு விட்டு, சினிமா எதற்காவது போகலாம். திரும்பச் சாயந்திரம் ஒரு கப் காஃபி. இவங்களை இப்போ இறக்கின அதே இடத்தில் இறக்கிவிட்ட பின்பு நாம் போகலாம். என்ன?"

"என்ன மிஸ் ராதிகா?"

"ஓ.கே.. ஆனால் சாயந்திரம் ரொம்ப நேரமாகாதே?"

"புரியறது. நேரமானால் உங்கம்மா கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது. அவ்வளவுதானே? இப்போ மணி பதினொன்றாகப் போகிறது. நேராக ஏதாவது நல்ல ரெஸ்டாரன்ட்டிற்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு, ஒன் டு ஃபோர் எதிலாவது சினிமா. டிரைவ் இன்னில் ஒரு கப் காஃபி. நாலரை, ஐந்து மணிக்கெல்லாம் வீடு. ஓ.கே..?"

"ஓ.. கே.." அவள் தலையாட்ட..

"தட்ஸ் குட்" என்று சிரித்தான் கௌரிஷங்கர். "ம்! வண்டியைத் திருப்பி நேராக தாஜ்கோரமாண்டலுக்குப் போ விக்ரம்."

"எஸ் பாஸ்" என்று அவன் தலைகுனிந்து வினயமாகச் சொல்ல ராதிகா சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறீர்கள்..?" என்று கார் ஓட்டிக் கொண்டே திரும்பிப் பார்த்தான் விக்ரம். முதல் முறையாக அவளுடன் பேச ஆரம்பித்தான்..

"நிஜமாகவே இவன் எங்களுக்கு பாஸ்தான். யு நோ ஹூ ஹி ஈஸ்? எ மில்லியனேர்'ஸ் ஸன். ஒரு பெரிய லட்சாதிபதியின் ஒரே பையன்."

"ஏய்!" என்று கௌரிஷங்கர் அதட்ட.. அவன், "இல்லேப்பா, சொல்லலேப்பா," என்றான்.

"இப்படித்தாங்க, ஒரு வார்த்தை பெருமையாகப் பேச விடமாட்டான். பெருமை வேணாங்க. நிஜத்தைக் கூடவா சொல்லக் கூடாது? சொல்ல விட மாட்டானே. அவனவன் இல்லாததைக் கூட இருக்கிறதாகக் காட்டிக்கறான். இவன் என்னடான்னால் 'நிறை குடம் தளும்பாது'ன்னு சொல்றதற்கேற்ப நடந்துக்கறான்.

நிஜமாச் சொல்றேங்க.. இவனைப்போல் ஒரு பிறவியைப் பார்க்கிறது ரொம்பக் கஷ்டங்க. இந்த மாதிரியெல்லாம் வரவே மாட்டாங்க. ஒரு பொண்ணுகிட்டே தலை நிமிர்ந்து பேச மாட்டான். யாரையும் தன் வண்டியில் ஏற்ற மாட்டான்.

அனாவசியமாக காலேஜுக்கு மட்டம் போட மாட்டான், சினிமா, டிராமான்னு சுற்ற மாட்டான், இன்னிக்கு என்னவோ தெரியலீங்க.. நீங்க இவனை ரொம்ப மாற்றிட்டீங்க."

"நானா?"

சந்தோஷம் கலந்த லேசான அதிர்ச்சியுடன் அவள் பார்த்ததும் விக்ரம் ஒரு புன்சிரிப்புடன் மீண்டும் அதை ஊர்ஜிதப் படுத்தினான்.

"நீங்களேதான்!"

தாஜ்கோரமாண்டலில் சாப்பிட்டு வெளியில் வந்ததும், "இப்போ என்ன சினிமா போகலாம்?" என்று ராதிகாவைப் பார்க்க, அவள் "எது வேணும்னாலும்" என்றாள்.

உள்ளுக்குள் ஒரு குற்ற உணர்ச்சியோ, பயமோ நெருடவில்லை. மாறாக நிச்சயமாய்த் தன்னைச் சேர்ந்த யாரும் இந்த இடத்திற்கெல்லாம் வர மாட்டார்கள். வருகிற தகுதிகூட அவர்களில் யாருக்கும் இல்லை. அதனால்தான் கல்லூரிக்குப் போகாததோ, இப்போது இவர்களுடன் சாப்பிட்டதோ யாருக்கும் தெரியப் போவதில்லை என்கிற நிம்மதியும் பயமற்றதனமும் ஏற்பட, அவள் சந்தோஷமாக இருந்தாள். உற்சாகமாக உணர்ந்தாள். பரபரப்பும் துடிதுடிப்புமாக அவர்களைப் பார்த்தாள்.

"ம், என்ன விக்ரம். என்ன சினிமா போகலாம்?" என்று விக்ரமைப் பார்க்க, அவன்..

"சினிமாவா முக்கியம்.. ? இவங்களோட பார்க்கறோம்ங்கிறதுதானே முக்கியம். அதனால் சினிமா எதுவானால் என்ன?" என்று பதிலளிக்க..

"ஏதாவது கூட்டமில்லாத ஒரு மணி ஷோ நடக்கிற தியேட்டராகப் பார்த்துப் போ விக்ரம். அப்போதுதான் இவங்ககிட்ட தாராளமாகப் பேச முடியும்" என்றான்.

தியேட்டர் வாசலில் வண்டியை நிறுத்திப் பூட்டிவிட்டு விக்ரம் போய் டிக்கெட் வாங்கிக் கொண்டு வர உள்ளே போய் உட்கார்ந்தார்கள்.

விக்ரம், அடுத்து கௌரிஷங்கர், பக்கத்தில் ராதிகா என்று உட்கார.. திரையில் படம் ஆரம்பித்தது. கால் மணி நேரத்திற்கு மேல் படத்தில் கவனமாக இருந்த கௌரிஷங்கர் சட்டென்று திரும்பி ராதிகாவைப் பார்க்க, அவள் படத்தை விட்டுத் தன்னைக் கவனிப்பதை உணர்ந்து சிரித்துக் கொண்டே அவளருகில் சரிந்து மெதுவாய்ச் சொன்னான்..

"திடீர்னு ரெண்டு கூரான வேல்கள் பாய்கிற உணர்ச்சி ஏற்பட்டதா, என்னடா



அதுன்னு பயந்து திரும்பினால் நீங்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்."

"ம்!" என்று கொஞ்சலாய் அவள் அவன் முகத்தில்.. கண்களுக்குள் ஆழமாய்த் தன் பார்வையைப் பதிக்க..

உணர்ச்சிவசப்பட்டு அவளின் கையைப் பற்றி அழுத்தின கௌரிஷங்கர். "ராதி, ஐ லவ் யூ.." சொல்ல 'செக் அண்ட் மேட்' ஆகிப் போன ராஜா தலை குனிந்து உடம்பு சிலிர்க்க, கன்னங்களுக்கும் முகத்திற்கும் குபீரென்று ரத்தம் பாய மெதுவாய் மிக மெதுவாய், "நானும்தான்!" சொல்லிற்று.

**அழிப்பான் கதைகள் 9**



**மதில் இல்லாத கோட்டை. மக்கள் இல்லாத நாடு. அது என்ன?**

**விடை 96ம் பக்கம்**

8

திரைப்படம் முடிந்து மீண்டும் ராதிகாவைத் தெருக் கோடியில் இறக்கி விட்டுத் திரும்பியபோது, அதிகம் களைத்துப் போயிருந்தான் கௌரிஷங்கர். எல்லாம் வெறுத்து சூனியமான உணர்வுடன் இருந்தான். உள்ளுக்குள் ஏற்பட்ட வெற்றிடத்தில் மூழ்கி மூச்சுத் திணறுவதாகத் தோன்றியது.

'நீ எதைச் செய்தாலும் என்னிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது' என்று எதுவோ அடி மனத்திலிருந்து சிரித்து, எக்காளமிட்டுத் தன்னைத் துரத்திக் கொண்டு வருகிறாற்போல் இருந்தது. அம்மாவின் ரூபத்தில்.. எண்ணங்களின் ரூபத்தில்.. பார்த்தால்.. இன்னும் உற்றுப் பார்த்தால், ரூபமேகூட அவனைத் துரத்துகிறது.

'எங்கே என்னை விட்டு விரட்டு பார்ப்போம்..' சவாலாகச் சொல்லி, ஓஹோஹோ என்று கோரமாய்ச் சிரித்து, குதித்து கும்மாளமிட்டு..

"ஓ.. ஸ்டாப் இட்.."

அவன் வாய் விட்டுப் பெரிதாய்க் கத்தியதில் பயந்து போய்ச் சடாரென்று பிரேக் போட்டு நிறுத்தினான் விக்ரம். திரும்பிப் பார்த்தபோது கௌரிஷ் அதிகம் வியர்த்திருந்தான். முகம் முழுவதும் சிவப்பாகித் தணலாக ஜொலித்தது. பார்வை கத்தியின் ஓரமாக மின்னலிட்டது. எங்கோ வெறித்துக் கொண்டிருந்தவனைத் தொட்டு உலுக்கக் கையை உயர்த்தி, பின்னர் தழைத்துக் கொண்டு கேட்டான் விக்ரம்.. "என்ன ஆச்சு கௌரிஷ்?"

அப்போதுதான் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட மாதிரி அவனைக்

கண்கலங்கப் பார்த்த கௌரி ஷங்கர், ''என்ன..?'' என்றான்.

"எதற்கு இப்போ இப்படிக் கத்தினே?"

"கத்தினேனா? நானா..? நான் எங்கே கத்தினேன்?"

இன்னமும் பயந்துபோன விக்ரம் அவனைப் பரிதாபமாகப் பார்த்தான். ''வாட்ஸ் ராங் வித் யு கௌரிஷ்..?

"நத்திங்.."

"ஆர் யு ஆல்ரைட்..?"

"ஆஃப்கோர்ஸ் ஐம் ஆல்ரைட்"

''சரி'' என்று நம்பிக்கையில்லாதவனாகத் தலையாட்டினான் விக்ரம். பின் ஒரு தயக்கத்துடன் கேட்டான்.. "இப்போ நேரா வீட்டுக்குப் போகட்டுமா?"

"வீட்டுக்கா?" என்றபோது மீண்டும் அவனது நரம்புகள் இறுகின. பார்வையில் பளபளப்பு ஏறிற்று. பற்களைக் கடித்தான். அவனது மாற்றங்களைக் கவனித்த விக்ரம், "ஈஸி.. ஈஸி மேன்.." என்று தொடையில் கை வைத்துச் சாந்தப்படுத்துகிறவனாகப் பேசினான்.

"வீட்டுக்குப் போய் உன் பெட்ரூம் பால்கனியில் உட்கார்ந்து ரெண்டு பெக் விஸ்கி அடிக்கலாமேனு பார்த்தேன்."

"ம்ஹூம். இப்போ எனக்கு இருக்கிற மனநிலையில் ரெண்டு பெக் எல்லாம் போதாது."

"அப்படி என்னடா மனநிலை உனக்கு?"

"சொன்னால் உன்னால புரிஞ்சுக்க முடியாது விக்ரம்!"

விக்ரம் கால் வினாடி யோசித்து, பின் நிதானமாகப் பேச ஆரம்பித்தான்..

"நிஜமாகவே எனக்கு உன்னைப் புரிஞ்சுக்கறது கஷ்டமாகத்தான் இருக்கு கௌரிஷ். ஒரு நிமிடம் இருக்கிற மாதிரி இன்னொரு நிமிஷம் இருக்க மாட்டேங்கற. முகத்துல எல்லையில்லாத ஒரு வெறி தெரிகிறது. அதைப் பார்க்கிறபோது எனக்கே பயமாக இருக்கு. கொஞ்சம் முன்னால் கூட உன் முகமெல்லாம் ஜிவுஜிவுன்னு சிவப்பாகி, சிலீர்னு ஒரு பயம் ஏற்படறது. நீ ஏன் அப்படி ஆயிடற கௌரிஷ்? காரணம் தெரியாதா உனக்கு?"

"நான் எப்படியும் ஆகலை. சாதாரணமாகத்தான் இருக்கேன். நீயாக எது எதையோ கற்பனை பண்ணிக்கிட்டுக் காரணம் கேட்டால் எப்படிச் சொல்ல முடியும்?"



அதற்கு மேல் விக்ரம் ஒன்றும் கேட்கவில்லை. கேட்டால் அவனிடமிருந்து ஒழுங்காகப் பதில் வராது. சிடுசிடுவென்று விழுவான். கோபப்படுவான். அல்லது வெறி பிடித்த மாதிரி கத்துவான். சில நாட்களாகவே கௌரிஷங்கர் ஒரு நிலையில் இல்லை. வித்தியாசமாக நடந்து கொள்கிறான். திடீர் திடீரென்று மனநிலை பாதிக்கப்பட்டவனாகக் காணப்படுகிறான். ஏற்பாடு பண்ணி அழைத்துக் கொண்டு வருகிற நிறையப் பெண்களை கௌரிஷங்கர் தொட்டது கூட இல்லை. சில சமயங்களில் மூர்க்கமாய்க் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளியிருக்கிறான். சில பெண்களிடம் அவர்களின் குடும்ப நிலை பற்றி விசாரித்திருக்கிறான்..

"உனக்குக் கல்யாணமாயிடுச்சா..?"

அந்தப் பெண் பேசாமல் நிற்கும்.

"அப்போ ஏன் இந்தத் தொழிலுக்கு வந்ததே..?"

"............"

"உன் வீட்டுக்காரன் என்ன பண்றான்?"

"இல்லீங்க. எங்கேயோ ஓடிப் போயிட்டாரு."

"அதான் இந்தத் தொழிலுக்கு வந்தியா?"

"............"

"ஏன் வேற வேலை எதுவும் கிடைக்கலியா?"

"..............."

"சரி. உனக்குக் குழந்தை இருக்கா?"

"இருக்குங்க."

"எத்தனை?"

"ஒரே பையன்."

"அடிப் பாவி. பையனுக்கு என்ன வயசு?"

"பத்து.."

"அந்தப் பையனுக்கு நீ என்ன தொழில் பண்றேனு தெரியுமா?"

"தெரியாதுங்க."

"நிஜமாகவே தெரியாதே?"

"தெரியாதுங்க. வீட்ல நான் எதையும் வச்சுக்கறதில்லை. யாரையும் வீட்டுப் பக்கம் வர விடறதில்லை."

"எங்கம்மாவை விட நீ தேவலை."

அவன் முணுமுணுப்பு காதில் விழாதவளாக அவள்," என்னங்க..? என்றால், "ஒன்றுமில்லை. இந்தா பணம். உன் ரேட்டுக்கு மேல் இரண்டு மடங்காகத் தந்திருக்கேன். வச்சுக்க. இனி இந்தத் தொழில் பண்ணாதே. அதுவும் உன் மகனுக்குத் தெரியும்படி ஒருபோதும் பண்ணாதே. போ, இனிமேல் இந்த வீட்டுப் பக்கம் தலை வச்சுப் படுக்காதே!" என்பான்.

அவன் போன பின் விக்ரம் கேட்பான்.. "ஏண்டா டேய், அவள் இன்னியோட இதை விட்டுடுவாள் என்ற நினைப்பா?"

"விடறாளோ இல்லையோ, அவளைத் தொட்ட பாவம் எனக்கு வேண்டாம்."

"இதுல பாவம் எங்கேயிருந்து வந்தது?"

"நீ பேசுவடா. அந்த மாதிரி ஒரு அம்மாவுக்குப் பிள்ளையாக இருந்தால் புரியும். இனி இப்படிப்பட்ட ஆளையெல்லாம் கூட்டிட்டு வராதே. அந்தப் பிள்ளைக்கு அம்மாவுடைய நடவடிக்கைகள் தெரிய வர்றபோது மனசு ரொம்பச் சங்கடப்படும். ஹிம்சைப்படும். அப்படி ஒரு பையனை ஹிம்சைப்படுத்த நான் காரணமாக இருக்க விரும்பலை."

சில சமயம் தாயாக இல்லாத, இருபது வயதைத் தாண்டாத இளம் பெண்ணையும் விரல் நுனி கூடப் படாமல் பணத்தைக் கொடுத்துத் திருப்பி அனுப்பியிருக்கிறான். "என்னடா.." என்றால் பதில் வராது.

அதன் பின் இவனும் கேட்பதை நிறுத்திக் கொண்டான். கௌரிஷங்கர் இதுபோல் பெண்களைக் கூட்டிக் கொண்டு வரச் சொல்வதற்கெல்லாம் தன்னைப் போல் சபலம் அடித்தளமில்லை என்பதை அப்போதுதான் விக்ரம் புரிந்து கொண்டான். வேறு எதற்காகவோதான் அவன் இப்படி நடந்து கொள்கிறான். எதையோ நாடிப் போகிறான். நிச்சயமாய் இது பெண்ணாசை இல்லை. அனுபவிக்கத் துடிக்கிற துடிப்பில்லை. சபலமில்லை, வெறியில்லை. இவைகளின் பின்னணியில் ஆழமாய், அழுத்தமாய் ஒரு காரணமிருக்கிறது.

அந்தக் காரணம் என்ன என்பதையோ, இதன் பின்னணியையோ தெரிந்து கொள்ள விக்ரம் நினைக்கவில்லை. அவனது உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளவில்லை. இதன் மூலம் தன் ஆதாயத்தை மட்டும் பார்த்துக் கொண்டு போனதால், அதிகம் கேள்விகள் கேட்பதைத் தவிர்த்து அவனை அவன்



போக்கிலேயே விட்டான்.



**அழிப்பான் கதைகள் 10**

**பிடி இல்லாத குடையைத் தொட முடியவில்லை. அது என்ன?**

**விடை 96ம் பக்கம்**

இப்போதும் அவன் விருப்பப்படி நடக்கிற எண்ணத்தில், "எங்கே போகட்டும்? வீட்டுக்கே போயிடட்டுமா?" என்று மீண்டும் கேட்டு மௌனத்தைக் கலைத்தான்.

கௌரிஷங்கர் அசிரத்தையாய், 'சரி' என்று தலையாட்ட, அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் வீட்டு போர்டிகோவில் கார் நின்றது. கௌரிஷங்கர் கீழே இறங்கினான். போர்டிகோ விளக்கைத் தவிர மற்ற இடம் இருட்டில் அமிழ்ந்திருப்பதைக் கவனித்தான். இவன் வந்து ஐந்து நிமிடமான பின்பும் கதவு பக்கம் குழுமி அரட்டை அடித்துக் கொண்டிருப்பார்கள். இவன் வந்த கார் சத்தம் காதில் விழாமல், விளக்குகளைப் போடாமல், கதவைக் கூடத் திறக்காமல்..

இவனுக்குள் குபீரென்று தீ பற்றிக் கொண்டது. அழைப்பு மணியைப் பலம் கொண்ட மட்டும் அழுத்தி அலற அடித்தான். வேலைக்காரன் ஓடி வந்து கதவைத் திறப்பதற்குள் கதவை எட்டி உதைத்தான். உள்ளே நுழைந்ததும் டீப்பாய் மீதிருந்த பூச்சாடியைப் போட்டு உடைத்தான். அதற்கு மேலே அங்கு நிற்க விருப்பப்படாமல் பரபரவென்று படியேறித் தன் அறைக்குப் போனான். விக்ரம் உள்ளே வந்ததும் அறைக் கதவைப் படீரென்று அறைந்து மூடி விட்டு உடை மாற்றிக் கொண்டபோது, விக்ரம் மெதுவாகக் கேட்டான்.

"உனக்கு ஏன் இப்படிக் கோவம் வருது?"

"வரும். வீடு எப்படி இருக்கு பாத்தியா? விளக்குப் போட ஆளில்லை. கதவை திறப்பதற்கு ஆளில்லை. சாப்பிடறியான்னு கேட்க, கூட இருந்து சாப்பாடு போட, உடம்பு சரியில்லேன்னால் கவனிக்க.. எதற்கும் ஆளில்லை. வீடா இது..? இதுக்குள்ள நுழையறபோது கோவம் வராமல் வேற என்ன வரும்?"

"சரி விடு. என்ன கலக்கட்டும்? பியர் சாப்பிடறியா இல்லே விஸ்கியா?"

"வழக்கப்படி விஸ்கியே கல.."

முதல் இரண்டு பெக் உள்ளே போய் மூன்றாவது பெக்கின் முடிவில் கேட்டான் கௌரிஷங்கர்..

"ஏண்டா விக்கி, இதுவரை நீ கூட்டிட்டு வந்த பொண்ணுங்கள்லாம் ப்ரொஃபஷனல்ஸ்தானே?"

அதற்குள் அதிக போதையில் இருந்த விக்ரம், "என்னடா கேழட்ட?"

என்று குமுறினான்.

''இதுவரை நீ கூட்டிட்டு வந்த அத்தனை பொண்ணுங்களும் இதைத் தொழிலாகக் கொண்டவங்கதானேன்னு கேட்டேன்''.

''ஆமாண்டா.''

''யாரையும் நாம் வற்புறுத்தலையே''

''இல்லைடா. ம்ஹூம்''

''ஒருத்தரைக் கூட ஏமாற்றலையே?''

''இல்லவே இல்லை''

''இப்போ இந்தப் பொண்ணை ஏமாற்றப் போறதை நினைச்சால் கஷ்டமாக இருக்குடா.''

''எந்தப் பொண்ணைடா?''

''அதான், அந்த ராதிகாவை''

''சீ.. இதுக்கெல்லாம் கஷ்டப்பட்டா முடியுமாடா?''

''போடா.. உனக்கு எதுக்குமே கஷ்டமில்லை. அந்தப் பொண்ணை ஏமாற்றி நாம் செய்யப் போற காரியம் ரேப்பிங்கிற்குச் சமானம்டா.''

''எதுக்குச் சமானமோ, நாம் செய்யறோம்.''

''வேணாம்டா.. எனக்கென்னவோ அந்தப் பெண்ணை விட்டுடலாம்னு தோணுது?''

''போடா பயந்தாங்கொள்ளி, நீ வேணும்னால் விடு. நான் விடறதாக இல்லே. ஐ வான்ட் டு என்ஜாய் ஹெர்''

சொல்லிக் கொண்டே அவன் இன்னொரு பெக் விஸ்கி கலந்தபோது, கௌரிஷங்கர் நெற்றியில் சுருக்கம் விழ தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான்.

9

**கா**லை ஏழு மணிக்கு உட்கார்ந்து இரண்டே இட்லிகளுடன் இலையைச் சுருட்டி எடுத்துக் கொண்டு எழுந்திருந்தான் ரகுராமன். அதைப் பார்த்த நாகம்மாள், ''என்ன ரகு, ஏன் எழுந்திட்டே?'' என்று பதறினாள்.



''போதும் அத்தை. பசியில்லை..'' அவன் இலையை விசிறிக் கையலம்பிக் கொண்டு வர நாகம்மாள் விடாமல் கேட்டாள்..

''என்ன பசியில்லேங்கற? கிட்டத்தட்ட ஒரு மாசமாச்சு நீ நல்லாச் சாப்பிட்டு. ராத்திரி தூக்கமும் அப்படித்தான். விருட்விருட்னு எழுந்து உட்கார்ந்து வெறிச்சுப் பார்த்துட்டிருக்கே. ஏம்ப்பா..? அப்படி என்ன கஷ்டம்? எது உன்னை வாட்டுதுன்னு என்கிட்டேதான் சொல்லேன். முடிந்த உதவியைச் செய்யறேன்.''

''ஐயோ, நீங்க ஒண்ணு. எனக்கென்ன கஷ்டம் அத்தை?'' அவன் சிரித்துக் கொண்டே சொல்லத்தான் நினைத்தான். ஆனால் சிரிப்பு வரவில்லை. உதடு கோணி அழுகையை விட மோசமாக, நாகம்மாள் அருகில் வந்து அவன் தோளில் கை வைத்து இன்னமும் தீவிரமாகக் கேட்டாள்.. ''என்னப்பா ஆச்சு? கடையில் ரொம்ப நஷ்டமாயிடுச்சா?''

''நஷ்டம் கடையில் இல்லே அத்தை. இருந்தால் சமாளித்துக் கொள்ளலாம்!'' என்று சொல்ல வந்தவன் சட்டென்று நிறுத்திக் கொண்டான். அதற்கு மேலும் தன் மனக் கொந்தளிப்பை முகத்தில் காட்டக் கூடாது என்கிற பிடிவாதத்தில் நாகம்மாளை நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தான். ''ஒன்றுமில்லை அத்தை. தலைவலி. அதான் சாப்பிடப் பிடிக்கலே.''

''ஏம்ப்பா, ஒரு மாசமாகவா தலைவலி இருக்கு? ம்.. என்னதான் ஒண்ணும் தெரியாதவள் என்றாலும் ஒரு மனுஷாளோட மாற்றம் கூடவா தெரியாமல் போகும்?''

ஆற்றாமையுடன் நாகம்மாள் குறைபட, உள்ளுக்குள் பொருமினான் அவன். 'நிஜமாகவே உங்களுக்கு ஒன்றும் தெரியத்தான் இல்லை அத்தை. மனிதர்களுடைய மாற்றம் கூடவா தெரியாமல் போகும் என்று சொல்கிறீர்களே தவிர உண்மையில் தெரிவதில்லை. அப்படி தெரிந்து கொள்கிறவர்களானால், ராதிகாவின் மாறுதல்களை எப்படித் தவற விட்டீர்கள். இந்த ஒரு மாதமாக அவள் முகத்தில் தெரிகிற சிரிப்பு.. கண்களின் மின்னல்.. பண்ணிக் கொள்கிற அலங்காரம்.. காலை ஒன்பதானால் ஏற்படுகிற படபடப்பு! ''சீக்கிரமா.. காலேஜுக்கு நேரமாச்சு,'' என்று விரட்டுகிற விரட்டல்..

''இதோ ஒரு அஞ்சு நிமிஷம் இருடி. சாம்பார் கொதிக்கிறது. தாளிச்சு இறக்கிடறேன்.''

''ஐயோ, அஞ்சு நிமிஷமா? முடியாதும்மா. ஸ்பெஷல் கிளாஸ் சரியா ஒன்பதரைக்கு ஆரம்பமாயிடும். இப்போது கிளம்பினால்தான் நடந்து போக சரியாக இருக்கும்.''

'சரி, ஒரே நிமிஷம் இரு. தாளிக்காமல் உனக்கு விட்டுடறேன்.'

"வேணாம். கொதிக்கக் கொதிக்க யார் சாப்பிடறது? செய்யறதை ஒரு அரை மணி நேரம் முன்னால் எழுந்து செய்தால்தான் என்ன? பூனைக்குப் பால் வச்ச கதையாக யாருக்கு வேணும் இந்தச் சாப்பாடு? நீயே சாப்பிடு. இல்லைன்னால் உன் தம்பி பையன் வருவான். அவனுக்குப் போடு. நான் கிளம்பறேன்."

சாப்பிடாமல் அவள் கிளம்புவதைப் பார்த்து நாகம்மாவின் மனசு கேட்கவில்லை.

"கொஞ்சம் தயிர் சாதமாவது சாப்பிட்டுப் போடி. சொல்றதைக் கேளு. வெறும் வயிற்றோடு போனால் படிப்பு ஏறாது."

"வேணாம், வேணாம்.. என்னை விடு போதும்."

விடுவிடுவென்று நடந்து போகிற மகளை வருத்தத்தோடு பார்த்துக் கொண்டு நிற்பாள். பகல் சாப்பிட வருகிற ரகுராமனிடம் சொல்வாள்..

"காலையிலே அவள் சாப்பிடாமல் போயிட்டா ரகு."

அவன் நிமிர்ந்து வெற்றுப் பார்வையாய்ப் பார்ப்பான்.. "ஏன் அத்தை?"

'நேரமாகி விட்டதா? எதற்கு நேரமாகி விட்டது என்று கேட்கக் கூடாதா அத்தை? உன்னிடம் கத்தி விட்டு லஸ் கார்னரில் பத்து நிமிடங்களுக்கு மேல் காத்துக் கொண்டு அவன் காரில் ஏறிப் போயிருக்கிறாள். எங்கே தெரியுமா அத்தை? கன்னிமராவில் டிஃபன் சாப்பிட. பகல் சாப்பாடு தாஜில். சாயந்திரம் டிரைவ் இன் மரத்தடி. அப்புறம் சந்தடியற்ற எலியட்ஸ் பீச்.. திரும்பி வருகிறபோது மணி ஏழாகிறதே.. ஏன் என்று கேட்க முடிகிறதா அத்தை? என்னால் முடியவில்லை. நான் கேட்டால் கத்துவாள். கேட்டு ஒரு நாள் வாங்கிக் கட்டிக் கொண்டதுதான் தெரியுமே.' மனம் ஓலமிட்டது.

"ஏன் ராதிகா இவ்வளவு நேரம்?"

"ப்சூ! ஏதோ மீட்டிங் இருந்தது. நேரமாகி விட்டது''. அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் சுவரின் அலமாரியில் புத்தகங்களைத் திணித்து விட்டுத் திரும்பியதும் மீண்டும், "நிஜமாகவே மீட்டிங்தான் இருந்ததா ராதிகா?" என்றான்.

இடுப்பில் கைகளை ஊன்றிச் சடாரென்று திரும்பினாள் அவள். முகத்தில் கோபமும் ஆத்திரமும் ஏராளமாய்த் தேங்கி நிற்க வார்த்தைகள் நெருப்பாக வந்தன.

"இதோ பாருங்க. நிஜமா மீட்டிங் இருந்ததா, இல்லையாங்கிற கேள்வியை நீங்க கேக்க வேண்டிய அவசியமில்லை. நான் உங்களுக்குப் பதில் சொல்லத் தேவையும் இல்லை. தட் இஸ் நன் அஃப் யுவர் பிஸினெஸ்.



ஒழுங்கா உங்க வேலையை பார்த்திட்டுப் போங்க. அனாவசியமா என் விஷயத்திலே தலையிட்டீங்கன்னா வீணாக மரியாதை கெடும்."

## அழிப்பான் கதைகள் 11



**காட்டிலே இருக்கும் குடை. வீட்டிலே இருக்காது. அது என்ன?**

**விடை 96ம் பக்கம்**

சொல்லி விட்டுக் காலால் தரையை ஓங்கி உதைத்துக் கொண்டு போகிறாள். தனக்குப் பதிலாக அவள் தரையை உதைப்பதாகத் தோன்றியது. ஆனால் அவன் விடவில்லை. முதன்முதலாக அவளை அந்த வெள்ளை பியட்டில் பார்த்துக் கல்லூரி வரை தேடிக் கொண்டு போய் அவள் அன்று கல்லூரிக்கே வரவில்லை என்கிற செய்தியைச் சேகரித்ததிலிருந்து அவன் சும்மா இல்லை.

அன்று முழுவதும் அடி வயிற்றில் கணகணவென்று அவள் பற்ற வைத்த நெருப்பு எரிய, தூக்கமற்றுப் போனான். சாப்பாடு பிடிக்காதவனானான். அந்த வெள்ளை வண்டியின் நம்பர் மனத்தில் உறுத்தலாக நிற்க, தன் நண்பன் ஒருவனின் உதவியோடு அது யார் வண்டி என்பதைக் கண்டுபிடித்தான்.

"அது ஆக்ட்ரஸ் சித்ரலேகா வீட்டு வண்டிடா. அவளுக்கு ஒரு உருப்படாத பிள்ளை இருக்கு. வயசு இன்னும் இருபதாகலை. அதுக்குள்ளே எல்லாக் கெட்ட பழக்கமும் உண்டு. தினத்துக்கு ஒரு பாட்டிலும், ஒரு பொண்ணும் வேணும். ரொம்ப மோசமான பையன். ஆமாம், ஏன் கேட்கிறே?"

"இல்லைப்பா. அந்த வண்டியிலிருந்து இரண்டு பேர் என்னைக் கலாட்டா பண்ணிட்டுப் போனாங்க."

"ஓ.. அதுக்காக நீ பதிலுக்குச் சண்டை போடப் போறியா? வேணாம்ப்பா, எதுக்கும் துணிந்த பசங்க. பெரிய இடம் வேற. பேசாமல் விட்டுடுப்பா."

விசாரித்த ஒவ்வொருவரும் அதே மாதிரி சொல்ல, அன்றிரவு ராதிகாவிடம் மெதுவாக எச்சரித்தான் அவன்..

"நீ அடிக்கடி ஏதோ வெள்ளை பியட்டில் போகிறாயாமே ராதி?"

அவன் முடிக்கக்கூட இல்லை. முகமெல்லாம் சிவக்கச் சடாரென்று திரும்பினாள் அவள்.

"ஓகே! மனசுக்குள்ளே பெரிய ஜேம்ஸ்பாண்ட் என்கிற நினைப்போ! துப்பறிஞ்சு கண்டுபிடிச்சாச்சு இல்லே. ஆமாம்! போறேன். அதுக்கு என்ன இப்போ?"

"கத்தாதே ராதி. அத்தை காதிலே விழப் போகுது."

"விழட்டுமே! நல்லா விழட்டும். என்னிக்காவது விழுந்துதானே ஆகணும். அந்த நாள் இன்னிக்காவே இருக்கட்டும்."

"ஓ.. வேணாம் ராதிகா! அவங்களால் இதையெல்லாம் தாங்கிக்க முடியாது."

"தாங்கிக்க முடியாத அளவுக்கு நான் இப்பப் பெரிசா எந்தத் தப்பு பண்ணிட்டேன்? காரிலே போறது ஒரு தப்பா?"

"காரிலே போறது தப்பில்லை ராதிகா. ஆனா காலேஜை கட் பண்ணிட்டு தாஜ், கன்னிமாரா, சினிமா, பீச்சுன்னு சுத்தறது தப்புதானே? அத்தைகிட்டே ஸ்பெஷல் கிளாஸ்னு பொய் சொல்றது தப்புதானே?"

"ஓஹோ, நான் எங்கெங்கே போறேன்ங்கிறதையெல்லாம் கூடப் பின்னாலே வந்து பார்த்தாகிறதா? ஓகே.. இவ்வளவு தெரிஞ்சப்புறம் எல்லாமும் தெரியறதிலே தப்பில்லை. யு நோ, ஹி லவ்ஸ் மி. அண்ட் ஐ'ம் கோயிங் டு மேரி ஹிம்."

அவன் ஒரு வினாடி அமைதியாக அவள் முகத்தைப் பார்த்தான். 'ஐயோ பைத்தியக்காரப் பெண்ணே!' என்று பரிதாபப்பட்டான். பின் நிதானமாக..

"அந்த ஹிம் என்பது யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"ஏன்..? இவ்வளவு தெரிஞ்சுக்கிட்ட நீங்க அதைத் தெரிஞ்சுகலியா?"

"இல்லை, கார்லே ரெண்டு பேர் வராங்களேனு கேட்டேன். நீ சொல்றவன் ஓட்டுகிறவனா, இல்லே பக்கத்தில் உக்காந்துக்கிட்டு வரவனான்னு தெரியலை."

"இதோ பாருங்க, அவன், இவன்னு மரியாதை கெட்டுப் பேச வேண்டாம். அவங்க உங்களை மாதிரி ஒண்ணுமில்லாதவங்க இல்லை. மளிகைக் கடையில் மாரடிக்கிறவங்க இல்லை. தெரியுமா?"

"அந்தப் பையனைப் பற்றி யாரும் நல்லபடியாகப் பேசலை ராதி. ஒரு நாளைக்கு ஒரு பாட்டில் விஸ்கி போடுவானாம். இன்னிக்கு வந்த பொண்ணு நாளைக்கு வரக் கூடாதாம்."

ஒரு வினாடி ரகுராமனை வெறுப்பும் கோபமும் குரோதமுமாக வெறித்தாள் ராதிகா..

"முடிச்சாச்சா? இன்னும் ஏதாவது பாக்கி இருக்கா?"

"இல்லே ராதி. நான் நிஜமாகத்தான் சொல்றேன். அந்தப் பசங்க மூஞ்சியே



சரியில்லை."



அழிப்பான் கதைகள் 12

நோயுமில்லை. நொடியுமில்லை. நாளெல்லாம் மெலிகிறேன். அது என்ன?

விடை 96ம் பக்கம்

"ஷட் அப்!" என்று பற்களைக் கடித்தாள். "அவங்க மூஞ்சி சரியில்லே. உங்க கரி மூஞ்சிதான் சரியா இருக்கோ..? மூஞ்சிதான் கறுப்பு கோரம்னு பார்த்தால் மனசு அதைவிடக் கோரமாக இருக்கே? நாக்கு இன்னும் கரி நாக்கா இருக்கு. இப்படியெல்லாம் சொல்லியாவது நான் கௌரீஷைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதைத் தடுக்கலாம்னு பார்க்கிறீங்களா? நெவர்! இந்த ஜென்மத்திலே, இந்த உடம்பில் உயிர் இருக்கிறவரை நான் அவரைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன். தெரிஞ்சுக்குங்க. அதனால் உங்களுடைய இந்தக் குள்ளநரித் தந்திரத்தையெல்லாம் விட்டுட்டு, ஒழுங்கா உங்க மளிகைக் கடை உண்டு, நீங்க உண்டுன்னு இருங்க".

அவள் விஷமாகக் கொட்ட அவன் அத்தனை வலி, வேதனையையும் பொறுத்துக் கொண்டான்.

"ஏன் ராதி.. அவனும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிற.."

"வில் யு ப்ளீஸ் ஷட் அப்? இன்னொரு தரம் அவன்னு சொன்னால் நானும் ஏண்டானு கேட்பேன். இனிமேல் என்னைப் பற்றி வேவு பார்க்கிறது, கவலைப்படுகிறது, உருகிற மாதிரி நடிக்கிறது எல்லாவற்றையும் விட்டுவிட்டு உங்க வேலையைக் கவனியுங்க, தெரியறதா?"

அன்றைய தினத்திலிருந்து ராதிகா அவனிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டாள். ஒரு துரும்பாக உதறித் தள்ளினாள். அவன் வீட்டினுள் நுழைந்தால் முன் அறைக்குப் போய் கதவை அறைந்து சாத்திக் கொண்டாள். அவன் காது கேட்கிற மாதிரி வேண்டுமென்றே முணுமுணுத்தாள்..

அடிக்கடி அவள் ரகுராமனிடம் இப்படி நடந்து கொள்வாள். நாட்கணக்கில் பேசாமல் இருப்பாள். அவனைப் பார்க்கிறபோதே முகத்தைத் திருப்புவாள். ஏதாவது சொல்லி அலட்சியப்படுத்துவாள். ஆகையால் அவளது நடத்தையை நாகம்மாள் பெரிதுபடுத்தவில்லை.

அதுபோல், ரகுராமனும் ராதிகா பற்றின விஷயத்தை நாகம்மாளிடம் தெரிவிக்கக் கூடாது என்றிருந்தான். தெரிந்தால் அவள் தாங்க மாட்டாள். அதிகம் உடைந்துபோவாள். மனசு வேதனைப்படும். அவளை வேதனைப்படுத்தக் கூடாது என்பதில் அவன் கவனமாக இருந்தான். விஷயம் அவள் காதில்

விழுமுன் எப்படியாவது சரிப்படுத்தி விட நினைத்தான்.

ஆனால் எப்படி என்கிற வழி தெரியவில்லை. தான் சொன்னால் ராதிகா கேட்பவளாக இல்லை. ஒருவேளை நிஜமாகவே அந்தப் பையன் இவள் மீது ஆசைப்படுகிறானா? கல்யாணம் பண்ணிக் கொள்ள முடிவு பண்ணியிருக்கிறானா? ஏன், இருக்கக் கூடாது? எத்தனை பணக்காரப் பையன்கள் அழகு ஒன்றை மட்டும் பார்த்து ஏழைப் பெண்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு போகவில்லை?

அப்படி இருக்கிற பட்சத்தில் இவனுக்கும் சந்தோஷம்தான். ராதிகா எங்கே இருந்தாலும், யாரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றுதான் நினைத்தான். ஆனால் ஒருவேளை அவன் பற்றிக் கேள்விப்பட்டதெல்லாம் நிஜமானதாக இருந்து, அவன் இவளை ஏமாற்றி விட்டால்?

அதற்கு முன், ஏதாவது செய்ய வேண்டும் என்கிற முடிவுடன் சைக்கிளைக் கீழே இறக்கி 'போயிட்டு வரேன் அத்தை' என்று சொல்லித் தெருக் கோடியை நெருங்கினபோது, எதிரில் பாலகோபால் வருவதைப் பார்த்தான். கையில் புத்தகங்கள் இருந்தன.

''என்னடா ஸ்கூல் இருக்கா?'' என்றான்.

அவன் ஒரு வினாடி தயங்கி முகம் வெளிறி பார்வை வெறிக்க, 'இருக்கு' என்று தலையாட்டினான். ரகுராமன் நெற்றியில் லேசாய்ச் சுருக்கம் விழ அவனைக் கூர்மையாகப் பார்த்து கேட்டான்..

"அப்போ ஏன் வந்துட்டே? உடம்பு ஏதாவது சரியில்லையா?"

"உடம்பு நல்லாத்தான் இருக்கு. மனசுதான் சரியில்லே" - அவன் விரக்தியாய்ச் சொல்ல ரகுராமனின் உதட்டோரம் புன்னகையாய் விரிந்தது.

"என்னடா, என்னவோ பெரிய மனுஷன் மாதிரி பதில் சொல்றே?"

"இல்லே அத்தான். நிஜமாகத்தான் சொல்றேன். நானும் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்."

அந்த முகத்தின் தீவிரத்தையும், பேச்சில் தொனித்த சங்கடத்தையும் உணர்ந்த ரகுராமன், சிறுவன்தானே என்று அவனை அலட்சியப்படுத்த நினைக்கவில்லை. எதனாலோ இவன் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு, ''வரியா.. கடைவரை நடந்து கொண்டே பேசலாம்'' என்றான்.

பாலகோபால் தலையாட்ட, அவனது புத்தகங்களை வாங்கி, காரியரில்





வைத்து அவனுடன் சைக்கிளைத் தள்ளிக் கொண்டே நடந்த ரகுராமன் சில நிமிட மௌனத்துக்குப் பின், "ம்.. சொல்லு," என்று அவனைத் திரும்பிப் பார்க்க, பாலகோபால் தயங்கி தடுமாறிப் பேச ஆரம்பித்தான்.

"ராதிகாவைப் பற்றி நான் என்னென்னவோ கேள்விப்படறேன் அத்தான். கேட்கத் கேட்க பயமா இருக்கு, கோபமும் அழுகையும் சேர்ந்து வர்றது" சொல்லி விட்டுக் கலங்கின கண்களை மறைக்க எதிர்ப் பக்கம் திரும்பி முகத்தைத் திருப்பிக் கொண்டாலும் உதடுகள் நடுங்கின. மூக்கின் நுனியும் காதோரங்களும் சிவந்து போயின. துக்கம் தொண்டையில் உருண்டையாய் இறங்கி மீண்டும் உள்ளே போவது தெரிய, அந்தச் சிறுவனின் மனப் போராட்டம் ரகுராமனைப் பிரமிக்க வைத்தது. இவனுக்கு இருக்கிற பாதுகாப்பு உணர்ச்சிகூட ராதிகாவிற்கு இல்லையே என்கிற வருத்தம் ஏற்பட்டது. ஆனாலும் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் கேட்டான்..

"ஆமாம், அப்படி நீ என்ன கேள்விப்பட்டே?"

"ம்.. வந்து.. வந்து.. எங்க ஸ்கூலில் டென்த் படிக்கிற பையன் ஒருத்தன் இருக்கான். அந்தப் பையன் கொஞ்சம் ஒரு மாதிரிதான் அத்தான். பெரிய ரௌடின்னு பெயர் எடுத்தவன். அவன்தான் என்னைக் கூப்பிட்டுச் சொன்னான். ராதிகா யாரோ கௌரிஷ் என்கிற பையன் கூடச் சுத்தறாளாம். காலேஜுக்குப் போறதே இல்லையாம். அந்தப் பையன் சித்ரலேகா என்கிற ஆக்ட்ரஸோட பையனாம். சொல்லிட்டு கேட்கிறான் அத்தான்.. 'உங்க அக்கா அவன்கூட மட்டும்தான் போவாளா? என்கூட வர மாட்டாளா? அவன் என்ன தர்றானோ அதையே நானும் தரேன்னு சொல்லு..'னு சொன்னான் அத்தான். கேட்டபோது உயிர் துடிச்சுப் போச்சு.

எனக்கே இப்படி இருந்தால் அம்மா காதிலே விழுந்தால் அவங்க எப்படி தவிச்சுப் போவாங்க? உங்ககிட்ட தனியா கூப்பிட்டுச் சொல்லணும்னு நினைச்சிட்டே வந்தேன். நீங்களே எதிர்ல வந்துட்டீங்க. எப்படியாவது இதை நீங்கதான் சரிப்படுத்தணும் அத்தான். ராதிகாவுக்கு நல்ல புத்திமதி சொல்லி, அவளைத் தடுத்து நிறுத்தணும். அவ காலேஜுக்குக் கூடப் போக வேண்டாம் அத்தான். சீக்கிரம் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணிடுங்க. இந்தப் பேர் இப்படியே பரவினால் அப்புறம் யாரும் அவளை கல்யாணம் பண்ணிக்க மாட்டாங்க அத்தான். அம்மாவை உயிரோட பார்க்கவும் முடியாது."

"*சீச்சீ!*" என்று வேண்டுமென்றே சிரிக்கிற பாவனையை ஏற்படுத்திக் கொண்டு பேசத் தொடங்கினான் ரகுராமன். "யாரோ ஏதோ சொல்லிட்டாங்கனு இப்படி உணர்ச்சிவசப்படக் கூடாது பாலு. முதல்ல இது நிஜமானு விசாரிக்கணும். எனக்குத் தெரிஞ்சவரை ராதிகா இப்படிச் செய்யக் கூடியவள் இல்லை. அவள்



திமிரா இருக்கலாம், கர்வமாக இருக்கலாம். அதெல்லாம் வேற விஷயம். ஆனால் இந்த அளவுக்குத் துணிய மாட்டாள்."

"இல்லே அத்தான். தன் அழகினால் எதையும் சாதிச்சுக்க முடியும் என்கிற அசட்டுத் தைரியமும், பிரமையும் அவகிட்டே நிறைய இருக்கு. ஒரு பணக்கார இடத்துப் பையனைக் கல்யாணம் பண்ணிட்டு வாழணும் என்கிற ஆசையும் அதிகம் இருக்கு. அதனால் இதையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் எங்க ஸ்கூல் பையன் சொன்னது சரியா இருக்குமோனு தோணுது."

அதன் பின்னர் கடை வரும்வரை இரண்டு பேரும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. கனமான மனத்துடன் மௌனமாகவே நடந்து வந்தனர். கடையின் ஓரமாக சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திப் பூட்டி விட்டு, பாலகோபாலின் தோளில் கை போட்டு ஆதரவாகப் பேசினான் ரகுராமன்..

"இதோ பார் பாலு. இந்த நிமிஷத்திலிருந்து இந்தக் கவலையை என்கிட்டே விடு. என்ன செய்யணுமோ அதை நான் கவனிச்சுக்கறேன். ஒருவேளை ராதிகா அப்படிச் செய்திருந்தால் அதை நிறுத்த வேண்டிய பொறுப்பு என்னுடையது. அதனால் அனாவசியமாக இதையெல்லாம் மனசுல போட்டுக்கிட்டு நீ வேதனைப்படாதே. நீ கேள்விப்பட்ட விஷயத்தை அத்தைகிட்டவோ, வேறு யார்கிட்டேவோ சொல்லாதே. இந்த இடத்தோட, இந்த நிமிஷத்தோட இதை நீ மறந்துடணும்.. என்ன?"

அவன் சரி என்று தலையாட்ட, "இப்போ எனக்கு ஒண்ணு செய்யணும் நீ. நான் கொஞ்சம் வெளியில் போறேன். திரும்பி வர்றவரைக்கும் கடையைப் பார்த்துக்க, என்ன?"

"பார்த்துக்கறேன் அத்தான்."

மீண்டும் பூட்டின சைக்கிளைத் திறந்து, ஏறி உட்கார்ந்து, கௌரிஷங்கரின் வீட்டை நோக்கி மிதித்தான் ரகுராமன். சாட்சிக்காரனை விட, சண்டைக்காரனின் காலிலேயே விழ முடிவு செய்து கௌரிஷங்கரிடம் பேச வேண்டியதை யோசிக்கத் துவங்கினான்.

## 10

"எப்போடா ஓபனிங் ஸெரிமெனி?"

விக்ரமின் கேள்வி புரியாமல் லேசான முகச் சுளிப்புடன் நிமிர்ந்து பார்த்தான் கௌரிஷங்கர்.

"ஓபனிங் ஸெரிமெனியா? என்னடா சொல்றே?"

"பின்னே என்னடா..? இன்னும் எத்தனை நாளைக்கு இப்படிக் காதலிக்கிற மாதிரி நடிச்சுக்கிட்டே இருப்பே? போரடிக்கலை? அவளோடு பழக ஆரம்பிச்சுக் கிட்டத்தட்ட இன்னியோட ஐம்பது நாளாகப் போறது. இன்னும் பத்து நாள் போனால் இரண்டாவது மாசமும் ஆரம்பிச்சிடும். நாள் தவறாமல் ஃபைவ் ஸ்டார் ஓட்டலில் டிபனும், காஃபியும், ஐஸ்க்ரீமும் சாப்பிட்டதில் ஐந்து கிலோ வெய்ட் ஏறினதுதான் லாபம். வேற ஒண்ணையும் காணோம். இனிமேலயும் இப்படி நாளைக் கடத்திட்டுப் போகக் கூடாது. போதும்டா காதலிக்கிற நடிப்பு. டக்குனு விஷயத்துக்கு வாடா.."

கௌரிஷங்கர் யோசித்தான். இன்னமும் அவனது அடிமனது அவனுக்கே பிடிபடவில்லை. எது வேண்டுமென்பது தெரியவில்லை. எதற்காகக் காத்திருக்கிறோம் என்பது புரியவில்லை. ராதிகாவை அடைந்தே தீர வேண்டுமென்பதில் விக்ரமிற்கு இருக்கிற தீவிரமும் வெறியும் இவனிடம் இல்லை.

ஆரம்பத்தில் கண்ணாம்பூச்சி விளையாடுகிற மாதிரி சிறிது சுவாரசியம் இருந்தது நிஜம். அவளின் அழகில் ஓரளவு பிரமிப்பு ஏற்பட்டதும் நிஜம்.

ஆனால் அப்புறம் அதிலும் நாட்டமில்லாமல் போயிற்று. ஏதோ பழகினான், ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டான், சினிமா பார்த்தானே தவிர அவளின் பெண்மை வேறெந்த விதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இன்னும் சொல்லப் போனால் ஒருவிதக் களைப்பையும் அயர்ச்சியையுமே உண்டாக்கியிருந்தது.

இந்த அழகிற்கும் வெள்ளைத் தோலுக்கும் அப்புறம் என்ன இருக்கிறது என்று தோன்றியது. ஒவ்வொரு பெண்ணிடமும், தான் பார்த்தது என்ன என்கிற கேள்விக்குறி எழும்பி அவனை இன்னமும் வெறுப்படையச் செய்தது.

ச்சீ, என்ன ஜென்மங்கள்! ரொட்டித் துண்டு நாய் மாதிரி பணக் சுற்றைக்கு வீடு தேடி ஓடி வந்து, தன்னை இழக்கத் தயாராக நின்று..

அம்மா மட்டும் என்ன செய்கிறாள்..? இதையே சற்று வித்தியாசமாகச் செய்கிறாள். தான் போவதற்கு பதிலாக மற்றவர்களை வீடு தேடி வரவழைக்கிறாள்.

நினைத்தபோதே அவனது கன்னத் தசைகள் இறுகின. கண்களில் லேசாய்ச் சிவப்பு ஓடத் தொடங்க, அவன் கீழ் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டான்.

ராதிகாவைப் பற்றி நினைத்தபோது அவள் பணத்திற்காக வரவில்லை என்பதை உணர்ந்து சற்று நிம்மதி ஏற்பட்டது. தன் அன்பிற்காக, காதலுக்காக,



ஓடி வந்திருக்கிறாள். நிச்சயம் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற நினைப்பில் இருக்கிறாள். மற்றவர்களைப் போல் இல்லை இவள். கரன்சி நோட்டிற்குத் துகிலுரிக்கிறவள் இல்லை.




சிறகில்லாப் பறவை தேசமெல்லாம் சுற்றும். அது என்ன?
விடை 96ம் பக்கம்

திடீரென்று அந்த நினைப்பிற்கு மாற்று நினைப்பாக, தான் பணக்காரனாக இல்லாமல், கார், பங்களா வசதிகளற்ற ஏழையாக இருந்திருந்தால் இந்த ராதிகா தன்னைக் காதலிக்கத் துணிந்திருப்பாளா என்ற கேள்வி நெருடியபோது, அவன் இன்னமும் வெறுத்துப் போனான். அதிகம் களைப்படைந்தவனான்.

இதற்குத்தான் என்றில்லாமல் எல்லாவற்றின்மீதும் ஒரு கோபம் வந்தது. வெறி ஏற்பட்டது. வரிசையாக ஒவ்வொருவராக நிற்கவைத்துச் சுட்டுத் தள்ள வேண்டுமென்று தோன்றிற்று. முதலில் அம்மாவை, அப்புறம் அவளோடு வீட்டிற்கு வந்தவர்களை, அதன்பின் தன்னுடன் வந்த பெண்களை, ராதிகாவை, விக்ரமை, கடைசியாகத் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு நிம்மதியாக..

"என்னடா அப்படி வெறிச்சுப் பார்த்துட்டிருக்கே..?" மீண்டும் விக்ரமின் கேள்வி இவனைக் கலைக்க இவன் தலையை உசுப்பிக் கொண்டு, "ஒன்றுமில்லை.." என்றான்.

"அப்படின்னா நாளைக்கே வச்சுக்கலாமா?"

"நாளைக்கா..?"

"ஏண்டா, ஏதாவது தடங்கலா?"

"ம்ஹூம், அதெல்லாம் ஒன்றுமில்லை.."

"ஒன்றுமில்லைன்னா நாளைக்கே முடிச்சுடலாம்."

"ச..ரி.."

"என்ன சரின்னு இழுக்கறே..? என்ன யோசனை?

"இல்லை, இந்தப் பலாத்காரம் அவசியமா, தேவைதானான்னு யோசிக்கறேன்."

"இந்த மயில் இறகு போடுன்னு கெஞ்சினால் போடாதுடா.."

ஒரு வினாடி மௌனமாய்த் தூரப் பார்வை பார்த்த கௌரிஷங்கர் விரக்தி

தொனிக்கக் கேட்டான்..

"ஏண்டா, எதுக்காகடா நாம் இப்படி ஒவ்வொரு பெண்ணாக அனுபவிச்சுட்டு வர்றோம்..? இதில் என்ன காண்கிறோம்..?"

"என்னடா இது..?" என்று பதறினான் விக்ரம். "திடீர்னு ஏண்டா இப்படி வேதாந்தம் பேச ஆரம்பிச்சுட்ட..?"

"இல்லை விக்ரம். எனக்கு வர வர ஒன்றும் பிடிக்கலை. எல்லாம் வெறுத்துப் போச்சு. யாரைப் பார்க்கவும் பிடிக்கலை. எதையும் பிடிக்கலை."

"பெண்களைக் கூடவா பிடிக்கலை?"

"அவங்களைத்தான் முதல்ல பிடிக்கலை."

"போடா. நீ ஏதோ டிப்ரெஷனில் பேசறே?"

"டிப்ரெஷன் எனக்குள் எப்போதும் இருக்குடா."

"எதுக்காக இந்த டிப்ரெஷன்னு யோசிச்சுப் பார்த்தியா..?"

"அதான் தெரியலை. வெறும் டிப்ரெஷன் மட்டுமில்லை. மனசுக்குள் ஒரு வெறியும் ஆக்ரோஷமும் ஏற்படுது. உள்ளுக்குள் இருந்து எதுவோ என்னை ஆட்டிப் படைக்குது. இம்சைப்படுத்துது. வரவர அந்த இம்சை அதிகமாகுது. தாங்க முடியலை. இந்த இம்சை பொறுக்காமல் ஏதாவது ஏடாகூடமாகச் செய்து விடப் போகிறேனோ என்று பயமாக இருக்கு.."

"ஒன்றும் செய்ய மாட்டேடா. மனசை இப்படியெல்லாம் கண்டபடி அலைய விடாதே. அப்புறம் ஸைக்கோ பேஷண்ட்டாக ஆகி விடுவாய். நான் சொல்கிறபடி கேளு. நாளைக்கு அந்த ராதிகாவை அழைச்சிட்டு வந்து"..

சடாரென்று இடையில் குறுக்கிட்டுக் கேட்டான் கௌரிஷங்கர்.

"எங்கே?"

"வேற எங்கே..? இங்கேயேதான். இந்த வீட்டிலே, இந்த உன் ரூமில்தான்."

"நோ.. நோ.. இங்கே வேணாம்டா. இந்த இடத்துல நான் யாரையும் வற்புறுத்தி, ஏமாற்றி எதையும் சாதிச்சுக்க விரும்பலை."

"பின்னே எங்கே வச்சுக்கலாம்..?"

"அவசியம் வச்சுக்கணுமா..?"



"ரொம்ப அவசியமா வச்சுக்கணும்.."

"எனக்கு வேணாம்னால்?"

"எனக்கு வேணும். நான் விடப் போறதில்லை.."

விக்ரமின் குரலில் இருந்த தீவிரம் கௌரிஷங்கரை ஒரு வினாடி அதிர்ச்சியடைய வைத்தது. தான் தடுத்தாலும் அவன் விட மாட்டான் என்று தோன்ற, சிறிது நேரம் யோசித்துச் சொன்னான்.

"ஓ.கே. எங்கேயாவது ரூம் புக் பண்ணு.."

"எங்கேயாவதுன்னால், ஓட்டல்லியா..?"

கௌரிஷங்கர் பதில் சொல்ல வாயெடுக்கும் முன், கூர்க்கா கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்தான்.

"ஜி, உங்களப் பார்க்க யாரோ ஒருத்தர் சைக்கிளில் வந்திருக்கிறார். அவசியம் பார்த்தே ஆகணும் என்கிறார்."

"பெயர் கேட்டியா..?"

"ரகுராமன்னு சொன்னார்.."

ரகுராமனைத் தன் நினைவில் தேட முயன்று தோற்றுப் போன கௌரிஷங்கர், "யாருடா? உனக்குத் தெரியுதா?" என்று விக்ரமைக் கேட்க, அவனும் உதட்டைப் பிதுக்கினான். யார் என்று தெரிந்து கொள்கிற ஆர்வத்தில் ரகுராமனை வரச் சொல்ல, அவன் புல்வெளி வழியாக நடந்து வருவதைப் பார்த்த விக்ரம் மெதுவான குரலில் சொன்னான்.

"கௌரிஷ், வர்றது யார் தெரியுமா..? ராதிகாவிற்கு அத்தை பையனோ, மாமா பையனோ ஒருத்தன் இருக்கான்னு சொன்னேனே, அவன்டா!"

அவன் எதற்காக இப்போது வீடு தேடி வருகிறான் என்று கௌரிஷங்கர் யோசித்துக் கொண்டிருந்தபோதே, ரகுராமன் ஒரு தயக்கத்துடன் ஹாலில் நுழைந்தான். சிறிதுகூடத் தகுதியற்ற ஒரு இடத்திலும் சூழ்நிலையிலும் நிற்கிற கூச்ச உணர்வுடன் மெதுவாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"என் பெயர் ரகுராமன். ராதிகாவின் உறவினன்."

கௌரிஷங்கர் பேசாமல் ரகுராமனையே பார்த்துக் கொண்டிருக்க, விக்ரம் அலட்சியமாகக் கேட்டான்.

"உறவினன்னு மொட்டையாச் சொன்னால், என்ன உறவுன்னு தெரிஞ்

சுக்கலாமா..?''

"நான் யாராக இருந்தால் உனக்கென்ன..? என்னைப் பற்றி நீ தெரிஞ்சுக்க வேண்டியது அனாவஸ்யம்."

சட்டென்று குறுக்கிட்டு அவனைக் கையமர்த்தி, "நீ கொஞ்சம் பேசாமல் இரு விக்ரம்" என்றான் கௌரிஷங்கர். பின் ரகுராமனைப் பார்த்து, ''உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்றான்.

சோபாவின் விளிம்பில் லேசாய் உட்கார்ந்த ரகுராமன், சொல்ல வந்த விஷயத்தை எங்கே, எப்படி ஆரம்பிப்பது என்பது புரியாமல் ஒரு வினாடி தவித்தான். யோசித்துக் கொண்டு வந்ததெல்லாம் மறந்துபோன மாதிரி தோன்ற, மெதுவாய் கௌரிஷங்கரை நிமிர்ந்து பார்த்தான். அந்த மற்றொருவனை விட இவன் தேவலை என்கிற உணர்வுடன், 'இவனைத்தான் ராதிகா காதலிப்பதாகச் சொல்லியிருக்கிறாள்' என்கிற ஒரு மெல்லிய திருப்தியுடன் தயங்கித் தயங்கிச் சொன்னான்..

"உங்ககிட்டே நான் கொஞ்சம் தனியாகப் பேசணும்.."

"பேசுங்கள்.."

அவன் தயக்கத்துடன் விக்ரமைப் பார்க்க, அந்தப் பார்வையைப் புரிந்து கொண்ட கௌரிஷங்கர் "அவன் என் நண்பன்தான். அவனுக்குத் தெரியாத ரகசியம் ஒன்றுமில்லை. அதனால் நீங்கள் தாராளமாகப் பேசலாம்.."

அதற்கப்புறமும் தயங்கி, சங்கடப்பட்டு ஆரம்பித்தான் ரகுராமன்.

"நான் ராதிகாவினுடைய மாமா பையன். அவளுடைய அப்பா செத்துப் போனதிலிருந்து அந்தக் குடும்பத்திற்கு கார்டியன் மாதிரி இருந்து காப்பாற்றிக் கொண்டு வருகிறேன். மளிகைக் கடையையும் கவனித்துக் கொள்கிறேன். ஏதோ சுமாரான வருமானம் வருகிறது. அதில் மானமும் மரியாதையுமாக இதுவரை வாழ்க்கை ஓடிட்டிருக்கு.

இனிமேலும் அதே மாதிரி ஓடணும் என்கிறதுக்காகவும் அந்தக் குடும்பத்தின் நலனில் அக்கறை கொண்டவன்.. கஷ்ட நஷ்டங்களில் பங்கேற்கிறவன்.. என்கிற முறையிலும்தான் இங்கே வந்திருக்கிறேன்.."

அவன் சற்று நிறுத்தினதும் 'உன் பேச்சிற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்..?' என்கிறாற்போல அவனை ஏறிட்டுப் பார்த்தான் கௌரிஷங்கர். அந்தப் பார்வை ஏற்படுத்தின வேகத்தில் தொடர்ந்தான் ரகுராமன்.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க..? உங்களுக்குத் தெரியாத எதையும் நான் பேச வரவில்லை. சம்மந்தமில்லா விஷயத்தையும் பேச வரவில்லை.





அழிப்பான் கதைகள் 14

**வெடித்து சிதறியவன் உடுத்த வேண்டியதைத் தருவான். அவன் யார்?**

**விடை 96ம் பக்கம்**

நான் என்ன பேசப் போகிறேன் என்பது ஓரளவுக்கு உங்களுக்கும் தெரிந்துதான் இருக்கும். கிட்டத்தட்ட இரண்டு மாதமாக ராதிகா சரியாக காலேஜுக்குப் போகலை. சரியாகப் போகலை என்ன.. போகவே இல்லை. இந்த இரண்டு மாதங்களும் உங்ககூடத்தான் சுற்றிக் கொண்டிருக்கிறாள்.

சோழா, தாஜ், கன்னிமாரா என்று ஒரு பெரிய ஓட்டல் தப்பலை. சினிமா, பீச் ஒரு இடம் பாக்கி இல்லை. அக்கம் பக்கத்தில் இருக்கிறவர்கள் பேசுகிற அளவிற்கு இது வளர்ந்து போயிருக்கிறது.

எல்லோரும் சிரிக்கிற நிலைமைக்கு வந்திருக்கிறது. ராதிகாவின் தம்பி, பதிமூன்று வயசுப் பையன் நேற்று என்னிடம் தனியாகப் பேசுகிறான். கண்ணில் ஜலம் விட்டு அழுகிறான்.

இதை எப்படியாவது நிறுத்துங்க அத்தான் என்று கெஞ்சுகிறான். அம்மாவின் காதில் விழுந்தால் தற்கொலை பண்ணிக் கொள்வாள் என்று சொல்கிறான். இது அத்தைக்குத் தெரிந்தால் நிஜமாகவே உயிரை விட்டுடுவாங்க.."

நிறுத்தி, காய்ந்து போன உதட்டை நாக்கால் தடவி ஈரப்படுத்திக் கொண்டபோது, இடையில் குறுக்கிட்டுக் கோபமும், ஆத்திரமுமாகக் கத்தினான் விக்ரம்..

"ஆமாம், இந்தக் கதையெல்லாம் சொல்றதுக்காகவா அங்கேயிருந்து எங்களைத் தேடி ஓடி வந்திருக்க..?"

சடாரென்று திரும்பி அவனைப் பார்த்த ரகுராமனின் கண்கள் பளிரிட்டன. வார்த்தைகள் வேகமாக வந்தன..

"இதெல்லாம் உங்களுக்குக் கதையாகத்தான் இருக்கும். பொழுதுபோக்காகத் தான் தெரியும். ஆனால் எங்களுக்கு அப்படி இல்லை. இது எங்களின் வாழ்க்கைப் பிரச்சனை. கௌரவப் பிரச்சனை. மானப் பிரச்சனை. வாழ்விற்கும் சாவிற்கும் இடையில் ஏதாவதொன்று நடந்தால் அந்தக் குடும்பமே சிதறிச் சீரழிந்து போய்விடும்..."

"அதற்கு நாங்க என்ன செய்ய முடியும்னு நினைக்கறீங்க? உங்க பொண்ணைக் கண்டியுங்க. எங்ககூடச் சுற்றக் கூடாதுனு தடுத்து வையுங்க.."

"அது முடியும்னால் நான் ஏன் இங்கே வரேன்? அவள் சொன்ன பேச்சைக்

கேட்கிறவளாக இருந்தால் ஏன் இத்தனை கஷ்டம்..? சாட்சிக்காரனை விட, சண்டைக்காரனின் காலில் விழுவதே மேல் என்றுதான் உங்களிடம் வந்திருக்கிறேன்.."

"அதற்கு எங்களிடம் வந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்?"

ரகுராமன் விக்ரமைத் தவிர்த்து, திரும்பி கௌரிஷங்கரைப் பார்த்தான். "இல்லை, இவ்வளவு ஆன பின் கல்யாணத்தைத் தள்ளிப் போடுவது நல்லதில்லை என்று சொல்லாமென்றுதான் வந்திருக்கிறேன்.."

"கல்யாணமா?" என்று அதிர்ச்சியாகப் பார்த்தான் கௌரிஷங்கர்.. "யாருக்குக் கல்யாணம்?"

"உங்களுக்கும் ராதிகாவிற்கும்தான்.."

"ரப்பிஷ்!" என்று அதீதமான ஒரு கோபத்தில் கத்தினான் கௌரிஷங்கர்.

"வாட் நான்சென்ஸ்! எப்போதாவது நான் கல்யாணப் பேச்சை எடுத்திருக்கேனா என்று உங்கள் வீட்டுப் பெண்ணையே கேளுங்கள்.."

"அவள்தான் நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் மனசாரக் காதலிக்கிறோம். கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறோம் என்று சொன்னாள்."

"வீணான கனவுகளையும் கற்பனைகளையும் அவளாக வளர்த்துக் கொண்டால் அதற்கு நானா பொறுப்பு?"

"அப்படியானால் என்ன சொல்கிறீர்கள்? கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதில்லை என்கிறீர்களா?"

"நெவர்! இவளை மட்டுமில்லை. வேறு எந்தப் பெண்ணையுமே என்னால் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாது. பெண்களை நான் வெறுக்கிறேன்."

"பெண்களை வெறுக்கிறவரானால் எதற்காக எங்கள் வீட்டுப் பெண்ணோடு பழகினீர்கள்?"

"அது.. அது வந்து.." கௌரிஷங்கர் தடுமாற விக்ரம் அவனது உதவிக்கு வந்தான்.

"நீ சும்மா இரு கௌரிஷ். நான் கவனிச்சுக்கறேன் இவனை. இதோ பாருப்பா, பெண்களோடு சுத்தறது எங்க ஹாபி. எங்களுடைய பொழுதுபோக்கு. இன்ஃபாக்ட் ஒரு விளையாட்டும்கூட. எல்லாப் பெண்களையும் கூட்டிட்டுப்



போன மாதிரி உங்க வீட்டுப் பெண்ணையும் கூப்பிட்டோம். வந்தாள், கூட்டிட்டுப் போனோம். அவ்வளவுதான். இத்தனை நாள்வரை அவள் மேல் விரல் நகம் படற மாதிரி கூட நாங்க நடக்கலை.

ஆனால், இனிமேல் அப்படி நடக்கறதாக இல்லை. நாளைக்கே அவளைக் கூட்டிட்டுப் போய்.. ஐ மீன், மற்ற பெண்ணைப் பயன்படுத்திட்ட மாதிரி இவளையும் பயன்படுத்திக் கொள்ளப் போகிறோம். அதற்கப்புறம் மற்றப் பெண்களுக்குத் தந்த மாதிரியே இவளுக்குப் பணம் தருவோம். வேணும்னா ஏதோ சொன்னாயே, குடும்பம் கௌரவம்னு.. அதைக் கருதி, கூடவே கொஞ்சம் பணம் தருகிறோம். வாங்கிட்டுப் போகச் சொல்லு. இப்போதே உன்னிடமே தருவதனால் கூட எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை."

ரகுராமனின் உடம்பு நடுங்கி, ரத்தம் குபீரென்று மண்டைக்குள் பாய்ந்தது.

"டேய்.. என்னடா சொன்னே?" என்று அவன் ஒருமையில் ஆரம்பிக்க..

"அட போடா.." என்று விக்ரமும் பதிலுக்குக் கத்தினான். "பெரிய நியாயஸ்தன் மாதிரி பேச வந்துட்டான். நீ ரொம்ப ஒழுங்கானவன் மாதிரியும், உங்க வீட்டுப் பொண்ணு கன்னிப் பொண்ணு மாதிரியும் பேசறே.."

"என்ன.. என்ன.. சொன்னே?"

"நிஜத்தைச் சொன்னால் கோபம் பொத்துக்கிட்டு வருதோ? அத்தனை அழகான பொண்ணு வீட்டில் இருக்கு. முறைப் பையன், குடும்ப கார்டியன்னு வேற சொல்லிக்கிற, இத்தனை நாள் சும்மாவா விட்டு வச்சிருப்ப?"

முடிப்பதற்குள் அவனே எதிர்பார்க்காத வகையில் ரகுராமன் அவன் மீது பாய்ந்து கீழே தள்ளி முகம், கன்னம், மார்பு என்று மாறி மாறி அறைய, பதிலுக்கு விக்ரம் தன் தாக்குதலைத் தொடங்க. இருவரையும் பிரிக்க முயன்று தோற்றுப் போன கௌரிஷங்கர் கூர்க்காவையும் தோட்டக்காரனையும் உதவிக்குக் கூப்பிட்டு ரகுராமனை அப்புறப்படுத்தச் சொன்னான்.

அடுத்த நிமிடம் வீட்டு வாசலில் புல் தரையில் விசிறி எறியப்பட்ட ரகுராமன் எழுந்து, வேட்டியைச் சரிப்படுத்திக் கொண்டே ஆத்திரமும், அழுகையும், இயலாமையும் சேர..

"உருப்பட மாட்டீங்கடா பாவிகளா..! அழிஞ்சு போயிடுவீங்க.." என்று சாபமிட்ட அதே நேரத்தில்..

வீட்டிற்குள்ளிருந்து உறுமினான் விக்ரம்.

"இத்தனை நடந்ததற்கப்புறம் அந்தப் பெண்ணை விடக் கூடாது கௌரிஷ்.

இப்பவே போய் ரூம் புக் பண்றேன். நாளைக் காலை முதல் வேலையாக அவளைக் கூட்டிட்டுப் போயிடுவோம்.."

## 11

திடீரென்று அதிகம் களைத்துப் போனான் கௌரிஷங்கர். சற்று முன் நிகழ்ந்த சம்பவங்களால் மிகுந்த ஆயாசமாக உணர்ந்தான். வேறு வழியின்றி ரகுராமனை வலுக்கட்டாயமாக வெளியேற்றச் சொன்னானே தவிர, அவனது முகமும் பேச்சும் கண்களில் தெரிந்த துயரமும் மனத்தில் ஒட்டிக் கொண்டு அகல மாட்டோம் என்று பிடிவாதம் பிடித்தன. திரும்பத் திரும்ப ராதிகாவிற்காக அவன் கெஞ்சினது சங்கடத்தை ஏற்படுத்தியது. ஒரு பரிதாப உணர்ச்சியைத் தோற்றுவித்தது. ஆரம்பத்திலிருந்தே மதிப்பும், மரியாதையும் கண்ணியமுமாகத்தான் பேசினான் அவன். ஒரு வார்த்தை தவறாகப் பேசவில்லை. நிஜமான பொறுப்புணர்ச்சி மிகுந்த குடும்பத் தலைவனின் ஸ்தானத்தில் நின்று சுணக்கமும் பணிவுமாகத்தான் கேட்டான். 'சாட்சிக்காரனின் காலில் விழுவதைவிடச் சண்டைக்காரனின் காலில் விழலாமென்றுதான் வந்திருக்கிறேன்' என்றான்.

அப்படிப்பட்டவனைக் கோபப்படுத்தியது விக்ரம்தான். தவறாகப் பேசினதும் இவன்தான். எத்தனை அசிங்கமாய், அவமானப்படத்தக்க விதத்தில் இவன் பேசியிருக்கிறான். ரகுராமனுக்குப் பதில் இவனைத்தான் வெளியேற்றி இருக்க வேண்டும். ஆனால் பழகின தோஷம் தடுத்து நிறுத்தியிருக்கிறது..

'இவனுடம் பழகாமல் இருந்திருந்தால் இத்தனை தப்புக்கள் செய்திருக்க மாட்டோமோ?' என்கிற எண்ணம் தோன்றியது கௌரிஷங்கருக்கு. இப்படி வெறி பிடித்து அலைந்திருக்க மாட்டோம்.. கீழ்த்தரமான காரியங்களில் இறங்கியிருக்க மாட்டோம்..

இத்தனைக்கும் மேல் இன்னமும் தப்பு செய்கிற எண்ணத்தில் அடிபட்ட புலி மாதிரி உறுமிக் கொண்டு நிற்கிற விக்ரமைப் பார்க்கப் பார்க்க அடிவயிற்றிலிருந்து வெறுப்பும் கோபமும் பற்றிக் கொண்டு வந்தது. சீ! என்ன மனுஷன் நீ? என்கிற பாவம் பார்வையில் வெளிப்பட, விக்ரம் சற்றுத் தடுமாறிப் போனவனாகக் கேட்டான்.

"என்னடா அப்படிப் பார்க்கறே?" தனக்குள் ஏற்பட்ட வெறுப்பையும் கோபத்தையும் அடக்கிக் கொண்டு நிதானமாகவே பேசினான் கௌரிஷங்கர். "எனக்கு இந்த ராதிகா வேணும்னு தோணலை விக்ரம். அதனால் அவளை விட்டுடலாம்.."

அவன் கெஞ்சுகிற குரலில் சொல்ல அதற்கு மாறாக விக்ரமின் பார்வையில்



மூர்க்கத்தனம் ஏறி, குரல் இறுகிற்று. "விடறதா? அவளையா? நெவர்! அந்தக் கறுப்பன் வந்து இத்தனை பேசிட்டுப் போறான். நீ நிதானமா விட்டுடலாம்னு சொல்றே. உனக்கு வேணாம்னால் விடு. ஆனால் நான் அவளை விடப் போறதில்லை."

அந்த வார்த்தைகளில் தொனித்த வெறியும், வேகமும் கௌரிஷங்கரையே அயர அடித்தது. சட்டென்று ஏதோ சொல்ல வாயெடுத்து நிறுத்திக் கொண்டு ஒரு வினாடி யோசித்தான். தற்போதைய நிலைமையில் இவனிடம் எதுவும் சொல்வதில்லை என்கிற முடிவுடன். "ஓ.கே. உனக்கு நான் தடை சொல்ல இஷ்டப்படலே. ஸோ நீ போய் அதுக்கு என்ன ஏற்பாடு பண்ணணுமோ பண்ணிக்க. நாளைக் காலையில் சரியா ஒன்பது மணிக்கு வந்து உன்னைச் சந்திக்கிறேன்."

அந்தப் பதிலில் திருப்தியடைந்தவனாகக் கேட்டான் விக்ரம். "நீயா வரேன்ற..? இல்லே, வழக்கப்படி நானே வந்துடட்டுமா?"

"வேணாம், நான் வர்றேன்."

"ராதிகாவைக் கூட்டிட்டு வரியா?"

"இல்லே, ரெண்டு பேரும் ஒண்ணாப் போய்க் கூட்டிக்கலாம்.."

'சரி' என்று புறப்பட்ட விக்ரம் கதவருகில் போய்த் தயங்கி நின்று திரும்பிப் பார்த்தான்.

"என்ன?"

"உனக்கு என் மேல கோவமா?"

"ம்ஹூம், அதெல்லாம் ஒண்ணுமில்லே.."

"நிஜமாகவே கோபமில்லையா?"

"இல்லை."

"அப்போ நாளைக் காலையில் பார்க்கலாமா?"

"பார்க்கலாம்."

வெளியில் விக்ரமின் மோட்டர் சைக்கிள் கிளம்பிப் போகிற சத்தம் கேட்டதும். அறைக் கதவை அறைந்து சாத்திக் கொண்டான் கௌரிஷங்கர். சட்டையைக் கழற்றி விசிறி, "பாஸ்டர்ட்!" என்று கட்டிலில் விழுந்தான்.

கண்களை மூடிக் கொண்டபோது ஏதோ பாரமாய் மனத்தை அழுத்தத் தொடங்கிற்று. விக்ரம் சொல்லி விட்டுப் போன வார்த்தை நெருடிற்று.

'உனக்கு வேணாம்னால் விடு. ஆனால் நான் அவளை விடப் போறதில்லை.'

எத்தனை அழுத்தமாகச் சொல்கிறான் பாஸ்டர்ட்! எவ்வளவு திடமாய், தீர்க்கமாய் முடிவு பண்ணியிருக்கிறான். இந்த முடிவிற்குக் காரணம் ரகுராமன் பேசி விட்டுப் போனது மட்டுமில்லை. இவனுக்கே அடி மனசில் ராதிகாவை அனுபவிக்கிற குரூர ஆசை இருக்கிறது. இதழ் இதழாகப் பிய்த்து ரசிக்கிற கொடூரம் இருக்கிறது..

சற்று முன், தன்னுடைய மன விகாரங்களுக்கு அவனே காரணம் என்று நினைத்ததற்கு மாறாக, இப்போது அவனுடைய இந்தக் குரூர ஆசைக்கும் கொடூர எண்ணத்திற்கும் தானே காரணம் என்று நினைத்தான். அன்று தன் அறையில் உட்கார்ந்து, 'எனக்கும் உன்னை மாதிரி எங்கப்பாவைப் பழி வாங்கணும்னு தோணுதுடா, ஆனால் தைரியம் வரலை' என்று அழுதவனைத் தைரியப்படுத்தியது யார்..?

நான்!

'படித்து முடிப்பதற்குள் நூறு பெண்களையாவது கலைக்கிறோம்..' என்கிற எண்ணத்தை வளர்த்தது..?

நானேதான்!

நியாயமாகப் பார்த்தால் அவனைக் கெடுத்ததும், புதைகுழியில் காலை அழுத்த வைத்ததும் தான் தானே தவிர வேறு யாருமில்லை. நாளை அவன் ராதிகாவை ஏதாவது செய்கிற பட்சத்தில் அதற்குக் காரணமும் தான்தான்..

மனத்திற்குள் குற்ற உணர்ச்சி அதிகமாய் நெருட சுய வெறுப்பும் சுய கோபமும் மேலோங்க எழுந்து உட்கார்ந்தான். இரண்டு கைகளாலும் தலையைத் தாங்கி யோசிக்க யோசிக்க, மெதுவாய் ஆவேசம் தோன்றிற்று. இவை அனைத்துக்கும் மூல காரணம் அம்மா என்கிற நினைப்பு வர, ஆக்ரோஷம் பொங்கிற்று. தவறு செய்து விட்ட உறுத்தல் அதிகமாயிற்று.

அந்த ரகுராமனைப் போல் தீர்மானமாகவும் பொறுப்பாகவும் செயல்படவில்லை என்கிற எண்ணத்தில் உடைந்து போனான். அவனைக் கேட்டோமே, உன் வீட்டுப் பெண்ணை அடக்கி வைப்பதற்கென்ன? என்று, அதைத் தான் ஏன் செய்யவில்லை? அம்மாவை நீ நடித்தது போதும் என்று ஏன் நிறுத்தவில்லை? வீட்டில் கண்டவர்களும் நுழையக் கூடாது என்று ஏன் உத்தரவு போடவில்லை?

மாறாக அம்மாவைப் பழி வாங்குவதாக நினைத்துப் பதிலுக்குக் கெட்டுப் போனது எவ்வளவு பைத்தியக் காரத்தனம்! அவள் சம்பாதித்த பணத்தில் சாப்பிட்டு, ஊர் சுற்றி, பெண்களுக்காக வாரியிறைத்து..



இப்படிப்பட்டவனுக்கு அம்மாவைக் கேட்கிற தகுதி என்ன இருக்கிறது?



**அழிப்பான் கதைகள் 15**

**ஆயிரம் பேர் வருவார்கள். ஆனால் வந்த சுவடு தெரியாது. அவர்கள் யார்?**

**விடை 96ம் பக்கம்**

இன்னமும் குறுகிப் போய் இருட்டில் உட்கார்ந்திருந்ததில் வெளி இருட்டு உள்ளேயும் பரவிற்று. உடம்பு லேசாய் நடுங்கத் தொடங்கியது. இனி என்ன செய்வது என்ற கேள்வி பூதாகரமாய் எழுந்து மருட்டிற்று.

ஒன்றும் புரியவில்லை அவனுக்கு. என்ன செய்வது, என்ன செய்வது - என்பதே திரும்பத் திரும்ப வந்து விடை தெரியாத குழப்பத்தில் அவனைச் சிக்க வைத்தது. எழுந்து மீண்டும் சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினான். கீழே வந்த கார் கதவைத் திறந்து ஏறி உட்காரப் போனபோது சட்டென்று ஞானோதயம் வந்தது. காரை விட்டு இறங்கி நடந்தே போனான்.

நடந்து போகிற எஜமானனை கூர்க்கா ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் பார்க்க.. அவன் எங்கெங்கோ சுற்றினான்.

பஸ் பிடித்து, கபாலீசுவரர் கோயிலில் இறங்கி உள்ளே நுழைந்தான். அங்கிருந்து நடந்தே காந்தி சிலை கடற்கரைக்கு வந்தான். மனசு தரிக்காமல் பிளாட்பாரம் ஓரமாக மெல்லக் காலை எட்டிப் போட்டு சென்ட்ரல் ஸ்டேஷன், பாரீஸ் கார்னர் என்று மவுண்ட் ரோடு வந்து சினிமா தியேட்டரில் நுழைந்தான்.

விளக்குகள் அணைந்து படம் ஆரம்பித்திருக்க டார்ச் அடித்து இருக்கை காட்டப்பட்டது. உட்கார்ந்ததும் சித்ரலேகா முன்னணிக் கதாநாயகன் ஒருவனைக் கட்டி அணைத்துத் தழுவிக் கொண்டு காதல் வசனம் பேச, இவன் சரேலென்று எழுந்து வெளியில் வந்தான். உடம்பும் மனசும் மீண்டும் கொதித்துப் போயிற்று. 'சீ! என்ன அம்மா இவள்! வயது வந்த பையன் இருக்க, இப்படிக்கூட விவஸ்தை கெட்டு நடிக்க முடியுமா? நடிக்கத் தோன்றுமா? இதைப் பார்த்தால் நம் பையன் என்ன நினைத்துக் கொள்வானோ என்று தோன்றாதோ? பயம் வராதா? அவமானமாக இருக்காதா? எதுவுமே இல்லாத அம்மா என்ன அம்மா?'

வீட்டிற்கு வந்தபோது போர்ட்டிகோவில் நின்ற வெளிநாட்டு கார் அம்மா இருப்பதைத் தெரியப்படுத்தியது. இவன் நேராக மாடிக்குப் போய் அம்மாவின் அறைக் கதவைத் தட்டக் கையெடுத்துப் பின் தயங்கினான். அம்மா யாருடனாவது இருந்தால் என்ன செய்வது என்று தோன்ற, கால் வினாடி யோசித்தான். பின் யார் இருந்தாலும் இன்று அம்மாவிடம் பேசி ஒரு முடிவிற்கு வருவது என்ற எண்ணத்தில் நிதானமாகவே தட்டினான்.

ஒரு வினாடிக்கெல்லாம் கதவைத் திறந்த சித்ரலேகா அவன் நிற்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். ''என்ன கௌரிஷ்?'' என்று கேட்க வாயெடுத்துச் சட்டென்று நிறுத்திக் கொண்டாள். சமீபகாலமாக அவனது போக்கும் செய்கைகளும் சரியில்லாதது நினைவிற்கு வந்து முகம் சுருங்கிற்று. அவனுடன் பேசப் பிடிக்காத கடினமான தொனியில், ''என்ன..?'' என்றாள்.

இவன் அந்தத் தொனியினாலும், முகத்தின் பாவத்தினாலும் சிறிதும் பாதிக்கப்படாதவனாகச் சொன்னான்.. ''உன்கிட்டே கொஞ்சம் பேசணும்''

''என்ன பேசணும்?''

"அதை இப்படி அறை வாசலில் நின்னுக்கிட்டு சொல்ல முடியாது.."

"எல்லாம் சொல்லலாம், சொல்லு."

"இல்லை, உன் அறைக்குள்ள வந்து சொல்றேன்."

''வேணாம். இங்கேயே சொல்கிறதானால் சொல்லு. இல்லை என்றால் நான் உள்ளே போகிறேன்.''

அந்த மறுப்பில், அவனது உதடும், முகச் சதைகளும் இழுத்துக் கொண்டன. கன்னமும் கண்ணும் கோபத்தில் பளபளக்க, மார்பு படபடவென்று ஏறி இறங்கிற்று. குரல் உயர்ந்து ஆக்ரோஷமாக வெளிப்பட்டது.

''ஏன்.. உள்ளே எவனாவது உட்கார்ந்திட்டிருக்கானோ...?''

அந்தக் கேள்வி மின்சாரமாகத் தாக்குதலை ஏற்படுத்த, ''என்னடா சொன்னே? அயோக்கிய ராஸ்கல்" என்று அவன்மீது பாய்ந்தாள் சித்ரலேகா. தலைமயிரைப் பிடித்திழுத்து முகத்திலும் மார்பிலும் அறையத் தொடங்கினதும் ''ஹூம்..'' என்று பெரிதாய் ஓர் உறுமல் உறுமி அவள் கைகளை மூர்க்கத்தனமாய் விலக்கி ஒதுங்கி நின்றான் கௌரிஷங்கர். பார்வை அசாத்தியமான வெறுப்பில் அவள் முகத்தை ஈட்டியாய்த் தாக்க, அழுத்தமான தொனியில் பயமுறுத்தினான். "இதற்கு மேல் ஒரு அடி என் உடம்புல விழுந்தால்கூட நடக்கிறதே வேறு விதமாக இருக்கும், ஜாக்கிரதை.."

அந்த பயமுறுத்தலில் அதிர்ந்து ஓர் அடி பின்வாங்கினாள் சித்ரலேகா. திடீரென்று மனதிற்குள் சுய பரிதாபம் மேலோங்கியது. கண்களில் துளிர்த்து நின்ற நீர் கன்னங்களில் வழிய, குரல் நடுங்கப் பேச ஆரம்பித்தாள்..

"என்னப் பண்ணப் போறே? திருப்பி அடிக்கப் போறியா? அடி. நல்லா மனசு திருப்தியாகிற வரை அடி. கொஞ்ச முன்னால் வாயால் அடித்த அடியை விட இது ஒன்றும் பெரிசாய் வலியை ஏற்படுத்தப் போறதில்லை. மூன்று மாசக் குழந்தையாக நீ இருந்தபோது, உங்கப்பா வேறு ஒருத்திகூட ஓடிப் போன பின், தனியாய் எந்தத் துணையும் இல்லாமல், யார் உதவியும் கிடைக்காமல்



படாதபாடுபட்டு உன்னை வளர்த்து, ஆளாக்கி இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தால் நீ ஏண்டா பேச மாட்டே..?

ஆமாம். இத்தனை கேட்கிற நீ என்ன ஒழுங்கா நடந்துக்கிட்ட? வயசுக்கு வந்த பிள்ளையாய் லட்சணமாய் என்ன செய்தே? காலேஜுக்குப் பணம் கட்டறேன். ஒழுங்காப் போறியா? ஒரு பாடப் தவறாமல் டியூஷன் வச்சிருக் கேன். ஒன்னுலயாவது பாஸ் பண்ணினாயா? கூடத் தடிமாடு மாதிரி இன்னொரு பையனையும் சேர்த்துக்கிட்டு ஊரைச் சுற்றி வரே.. எந்தப் பொண்ணு கிடைப்பானு அலையா அலையறே. நீ எங்கே போறே, என்ன செய்யறேன்ற எல்லா விஷயமும் எனக்குத் தெரியும். வயசு இருபத்தி ஒன்றாகிறதே, இதுவரை சுயமாக ஒரு பைசா சம்பாதிச்சிருக்கியா? நான் சம்பாதிச்சதை செலவு செய்யக் கற்றுக்கிட்ட. ஊர் சுற்றத் தெரிஞ்சுக்கிட்ட. ஃபைவ் ஸ்டார் ஓட்டலாகவே பார்த்துச் சாப்பிடப் பழகிக்கிட்ட.."

அவள் ஒரு வினாடி நிறுத்தி, பேய் அறைந்த மாதிரியிருந்த அவன் முகத்தைப் பார்த்து விட்டு இன்னும் நிதானமாக நெஞ்சைத் தொடுகிற விதமாகக் கேட்டாள்..

"ஏண்டா.. டேய்.. இத்தனை வருஷமா நானும் உழைக்கிறேன். ஒரு தரமாவது நீ, 'ஏம்மா இன்னும் உழைக்கிறே? இனிமேல் நீ நடிக்க வேணாம்மா. நடிச்சது போதும்'னு சொல்லியிருக்கியா? ஒரே ஒரு நாள், 'அம்மா, நீ சாப்பிட்டாயா?'னு கேட்டிருக்கியா? 'எந்த ஊருக்குப் போறே?'ன்னு தெரிஞ் சுக்கிட்டிருக்கியா? என்ன சம்பாதிக்கிறேன், எவ்வளவு செலவாகிறதுன்னு கணக்குப் பார்த்திருக்கியா? சீக்கிரம் படிப்பை முடிச்சிட்டுக் குடும்ப பாரத்தைத் தாங்கிக்கணும்னு தோன்றியிருக்கா? 'இனி நான் சம்பாதிக்கிறேன். நீ வீட்டுல நிம்மதியா இரு'னு சொல்லியிருக்கியா? அட, சொல்லக் கூட வேணாம்ப்பா. மனசுலயாவது நினைச்சிருக்கியா? சரி. அதெல்லாம் போகட்டும்.. வீட்டுக்கு எவன் எவனோ வரானே.. அவன்களை 'வெளியே போடா பாவி!'னு கழுத்தைப் பிடிச்சுத் தள்ளியிருக்கியா? வயசு வந்த ஆம்பிளைப் பையன் அதைத்தானே செய்திருக்கணும்?

ஆனால் நீ இது ஒன்றையும் செய்யலை. இந்த மாதிரி பொறுப்பும் கடமையும் பெற்றவளுக்கு மட்டுமில்லை, பெறப்பட்டவனுக்கும் உண்டுன்னு நினைச்சுக்கூடப் பார்க்கலை. காரணம்? பணம்ப்பா. அது கொடுக்கிற பாதுகாப்பு உணர்ச்சி! சுதந்திர உணர்ச்சி! அம்மாவை அதட்டி எதுவாகவது கேட்கப் போய் அவள் நம்மை வீட்டை விட்டுப் போகச் சொல்லி விட்டால் என்ன செய்வது என்கிற பயம். உன் சுயநலத்திற்காகவும், சொகுசான ஆடம்பர வாழ்க்கைக்காகவும் பேசாமல் இருந்து விட்டு, இன்று வந்து என்னை எது கேட்கவும் உனக்கு என்ன தகுதியிருக்குன்னு யோசிச்சுப் பேசு. தனியா, அமைதியா உட்கார்ந்து தெளிவான மனசோட யோசி. அப்புறம் ஏதாவது தகுதி இருக்கிறதாகப் பட்டால்

தொடர்ச்சி 83ம் பக்கம்..

ஜி.எஸ்.எஸ்.

## பொது அறிவுப் போட்டி – 7

ஒவ்வொரு கேள்விக்குமான சரியான விடையைத் தேர்ந்தெடுங்கள்.

1. சிலப்பதிகாரத்தில் யாருடைய சிலம்பில் முத்துக்கள் இருந்தன?
(அ) கண்ணகி (ஆ) மாதவி (இ) பாண்டிமாதேவி

2. மு.க. முத்துவின் முதல் திரைப்படம் எது?
(அ) பூக்காரி (ஆ) பிள்ளையோ பிள்ளை (இ) கலங்கரை விளக்கம்

3. எந்த நாடு முத்துடைத்து என்பார்கள்?
(அ) சேரநாடு (ஆ) சோழநாடு (இ) பாண்டியநாடு

4. 'பேர்ல் சிட்டி எக்ஸ்பிரஸ்' (Pearl city Express) சென்னை எழும்பூரிலிருந்து எங்கு செல்கிறது?
(அ) தூத்துக்குடி (ஆ) திருநெல்வேலி (இ) சிவகங்கை

5. 'பவளக்கொடியில் முத்துக்கள் பூத்தால் புன்னகை என்றே பேராகும்' என்ற பாடலை எழுதியவர் யார்?
(அ) கண்ணதாசன் (ஆ) வாலி (இ) பா.விஜய்

6. யாருடைய இனிஷியலை விரிவுபடுத்தினால் அதில் 'முத்து' இருக்கும்?
(அ) வைகோ (ஆ) ஜெயலலிதா (இ) கருணாநிதி

7. அமெரிக்காவில் உள்ள பெர்ல் துறைமுகத்தை (parl harbour) தாக்கியது யார்?
(அ) ஜப்பானியர் (ஆ) ஆங்கிலேயர் (இ) சுவீடன் நாட்டினர்

8. முத்து திரைப்பட இயக்குனர் யார்?
(அ) சுரேஷ் கிருஷ்ணா (ஆ) பி.வாசு (இ) கே.எஸ்.ரவிக்குமார்

தமிழகத்தை மூழ்கடித்து வழந்திருக்கும் 'எந்திரன்' சுனாமி பற்றி பளிச் 'பன்ச்'!

## ரூபாய் 1000 பரிசு!

வாசக நெஞ்சங்களே! உங்கள் பொது அறிவை சோதிக்கும் இந்தக் கேள்விகளுக்கான சரியான விடையை டிக் செய்யுங்கள். சரியான விடைகளோடு சூப்பர் பன்ச்-ம் எழுதி எங்களுக்கு அனுப்புகிற டாப் 10 வாசகர்களுக்கு ரூபாய் **1000** பகிர்ந்து அளிக்கப்படும்!

விடைகள் எங்களை அடைய வேண்டிய கடைசித் தேதி: 20-11-10

அனுப்ப வேண்டிய முகவரி:

**தேவதையின் கொலுசு**
திரிசக்தி குழுமம், கிரிகுஜா என்க்ளேவ், 56/21,
முதல் அவென்யூ, சாஸ்திரி நகர், அடையாறு, சென்னை-20.



77ம் பக்கத் தொடர்ச்சி..

அப்போ வந்து கேள்வி கேளு. நானும் பதில் சொல்றேன். இப்போது ஒன்றும் கேட்காதே. கேட்டால் நான் பதில் சொல்லவும் மாட்டேன், புரிகிறதா?"

சொல்லி விட்டு, சித்ரலேகா அழுது கொண்டே போய்த் தன் அறைக் கதவைச் சாத்திக் கொள்ள, கௌரிஷங்கர் சில நிமிடங்கள் வரை அந்த இடத்திலேயே கால் ஒட்டிக் கொண்டு விட்ட மாதிரி நின்றான். புத்திகூடச் சிறிது நேரம் செயலற்றுப் போயிருந்தது. ஓங்கி ஓங்கி அம்மா செவிட்டில் அறைந்து விட்டுப் போனாற்போல் தோன்றியது.

'எப்படிக் கேட்டு விட்டுப் போய் விட்டாள்! ஈட்டியால் நெஞ்சில் குத்தின மாதிரி எத்தனை கேள்விகள்! ஆனால் ஒவ்வொரு வார்த்தையும் நிஜம். எல்லாமே உண்மை. உண்மையைத் தவிர வேறில்லை. அன்று காலை தான் நினைத்ததையேதான் கேட்டிருக்கிறாள். நமக்கு இருந்த அதே ஆதங்கமும் ஏமாற்றமும் அவளுக்குள்ளும் இருந்திருக்கின்றன. அதே எதிர்பார்ப்பு இருந்திருக்கிறது. கோபம் இருந்திருக்கிறது. அவை எல்லாவற்றிலும் கூடவே ஒரு நியாயமும் இருக்கிறது.

அப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்று அம்மா எதிர்பார்த்திருக்கிறாள். தட்டிக் கேட்க வேண்டுமென்று ஆசைப்பட்டிருக்கிறாள். அப்படிக் கேட்டிருக்கிற பட்சத்தில் அம்மா சாதாரணமானவளாக, வெறும் அம்மாவாக மட்டும் மாறியிருக்கக் கூடும். பழைய விஷயங்கள் எப்படிப் போனாலும் பொறுப்பான குடும்பத் தலைவியாக நின்றிருக்கக் கூடும்.

கடமைகளை நிறைவேற்றத் தவறினது என் தப்புத்தான். அதனால் அவள் சொன்ன மாதிரி எது கேட்கிற தகுதியும் எனக்கில்லை. அம்மா அம்மாவாக இல்லை என்று சொல்லிச் சொல்லி ஒரு சுய பரிதாபத்தையும், கழிவிரக்கத்தையும் வளர்த்துக் கொண்டு, நானும் பிள்ளையாக இல்லை. அந்த ஸ்தானத்தில் நிற்கத் தவறி இடறி அதல பாதாளத்தில் விழுந்தாகி விட்டது. இனி, மேலே ஏறுவதோ, இழந்து விட்ட ஸ்தானத்தைப் பிடிப்பதோ அம்மா – பிள்ளை இரண்டு பேருக்குமே சாத்தியமில்லை. ஒருவரை ஒருவர் பார்க்கக் கூசிக் கொண்டு, வெறுத்துக் கொண்டு, வேறு வழியும் இல்லாமல் ஒரே வீட்டில் வளைய வந்து.. ஓ..! இது இனிமேலும் தொடர வேண்டுமா? இத்தனைக்குப் பின்னாலும் சாத்தியமாகுமா?'

வெறுப்பும், வேதனையும் படர்ந்து நெஞ்சை இறுக்க என்றும் இல்லாத அதீதமான களைப்பில் மெல்ல நடந்து தன் அறைக்கு வந்தான். இதற்கு மேலும் மௌனமாக இருக்க விருப்பப்படாதவனாக யோசித்தான். அப்படியே உட்கார்ந்து யோசிக்க யோசிக்க இந்தப் பிரச்சனைக்கு ஒரே முடிவுதான் தெரிந்தது. திரும்பத் திரும்ப அது ஒன்றுதான் வழி என்று பட, அதைச்

செயல்படுத்துகிற திடமான மனத்துடன் எழுந்து மேஜையடிக்குப் போய்க் கடிதம் எழுத உட்கார்ந்தான்.

## 12

இரவு முழுவதும் யோசித்ததில் மறுநாள் காலையில் ஒரு தீர்மானமான முடிவிற்கு வந்திருந்தான் கௌரிஷங்கர். அதை நிறைவேற்றி விடுகிற அவசரத்துடன் செயல்பட்டான். சீக்கிரமே எழுந்து. குளித்து உடை மாற்றி, காப்பி கொண்டு வந்த வேலைக்காரனிடம், ''அம்மா எழுந்து விட்டார்களா?'' என்று விசாரித்தான்.

அந்த வேலைக்காரன் 'இல்லை' என்று தலையாட்ட ஒரு வினாடி தயங்கி நின்று பின் பரபரவென்று இறங்கிக் கீழே வந்தான். ஷெட்டிலிருந்து காரை எடுத்துக் கொண்டு கிளம்பி விக்ரமின் வீட்டிற்குள் நுழைந்தபோது வாசல் கூர்க்கா வழக்கப்படி சல்யூட் அடித்தான். என்றுமே திருப்பி சல்யூட் அடிக்காமல், அலட்சியமாய் அந்தக் கூர்க்கா ஒரு மனிதனே இல்லை என்கிற பாவத்தில் திரும்பிக்கூடப் பார்க்காமல் உள்ளே நுழைகிற கௌரிஷங்கர் அன்று காரை நிதானப்படுத்தி, கூர்க்காவிற்குப் பதில் சல்யூட் அடித்து அவனை ஆச்சரியப்படுத்திவிட்டு உள்ளே வந்தான்.

போர்ட்டிகோவிற்குச் சற்று முன்னால் சிவப்புச் சிவப்பாய்ப் பெரிதாய்ப் பூத்திருந்த விருட்சிச் செடியின் பக்கத்தில் விக்ரமின் படுக்கையறைக்கு நேர் கீழே காரை நிறுத்தினான். காரை விட்டிறங்காமலே ஹாரனை மட்டும் அழுத்தி அடித்தான். இரண்டு மூன்று முறைகளுக்கு மேல் அடித்தும் விக்ரம் வெளியில் வராததால் சற்றே எரிச்சல் அடைந்து செடிகளுக்கு ரப்பர் குழாய் வழியாகத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டி ருந்த தோட்டக்காரனைக் கூப்பிட்டுக் கேட்டான்..

"எங்கேப்பா உங்க சின்னய்யா..?"

தோட்டக்காரன் மிகப் பவ்யமாகக் குழாயைக் கீழே போட்டு விட்டு ஓடிவந்து பதில் சொன்னான்.

''தூங்கறாருங்கய்யா!''

கௌரிஷங்கர் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஏழு நாற்பது. சற்றுச் சீக்கிரம்தான் வந்து விட்டிருக்கிறான். எட்டரை மணிக்கு முன்பு எழுந்திருக்கிறவனில்லை விக்ரம். இவனும் நேற்று மாலை ஒன்பது மணிக்கு மேல் வருவதாகத்தான் சொல்லி அனுப்பியிருந்தான். அதனால்தான் விக்ரம் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறான். அல்லது ராத்திரி நிறையக் குடித்திருப்பான்..

எதுவானாலும் இப்போது அவனை எழுப்பியே ஆக வேண்டும். தாமதிக்கக்



கூடாது. தாமதிக்கிற ஒவ்வொரு கணமும் முரண்டு பிடித்து மாறி விடக் கூடும். சட்டென்று தான் எடுத்திருந்த முடிவை மனத்திற்குள் ஒரு தரம் வலியுறுத்தி சொல்லிக் கொண்டு தோட்டக்காரனைச் சிடுசிடுத்த முகத்துடன் பார்த்தான்..

### அழிப்பான் கதைகள் 16



**தலையை வெட்ட வெட்ட கறுப்பு நாக்கை நீட்டுவான். அவன் யார்?**

**விடை 96ம் பக்கம்**

"போய் நான் வந்து கீழே காத்துக்கிட்டிருக்கிறதாகச் சொல்லி எழுப்புப்பா.."

"இதோ எழுப்பறேங்க"

தோட்டக்காரன் பதட்டத்தோடு ஓடி வந்து எழுப்பினதும் விக்ரம் ஒன்றும் புரியாமல் மிரள மிரள விழித்தான்.

"ஐயா, கௌரிஷங்கர் ஐயா வந்திருக்காங்க. உங்களை எழுப்பச் சொன்னாரு.."

"யாரு.. யாரு?"

"கௌரிஷங்கர் ஐயாங்க"

"கௌரி..?" அவன் பார்வை சுவர்க் கடிகாரத்திற்குப் போக, 'என்ன இப்பவே வந்துட்டான்..' என்று நின்று சற்றே தள்ளாடினான். தலை லேசாய்ப் பாரமாகத் தெரிய, செருப்பைத் தேடி மாட்டிக் கொண்டு இரண்டிரண்டு படிகளாக இறங்கி ஓடி வந்தான். கௌரிஷங்கரின் காரை நெருங்கி டிரைவிங் ஸீட் பக்கமாகக் குனிந்து ''குட்மார்னிங்'' சொன்னான்.

''என்னடா இவ்வளவு சீக்கிரமா வந்துட்டே..?''

"சீக்கிரம்தான்.." என்று உள்ளுக்குள் ஏற்பட்ட அமைதியற்ற படபடப்பையும், சிடுசிடுப்பையும் மறைத்துக் கொண்டு சிரிக்க முயற்சி பண்ணினவனாகச் சொன்னான் கௌரிஷங்கர்.

"என்னடா விசேஷம்..?" அவனது பரபரப்பைக் கவனிக்காமல் கேட்டான் இவன்.

"கிளம்பு. மகாபலிபுரம் வரை போயிட்டு வரலாம்.."

''மகாபலிபுரமா..? என்ன திடீர்னு?''

"திடீர்னு தோணிச்சு, கிளம்பிட்டேன்!"

"ஆமாம், நாம மட்டுமா போறோம்.."

"வேற யார் வரணும்னு நினைக்கறே?"

"ராதிகா !"

கௌரிஷங்கர் சட்டென்று தன் கீழ் உதட்டைக் கடித்து உள்ளுக்குள் ஏற்பட்ட கொந்தளிப்பை அடக்கி ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தவனாகச் சொன்னான். "அவள் இல்லாமலா..? போய் அவளையும் கூட்டிக்கிட்டே கிளம்பலாம்."

"ஐடியா பாஸ்!" விக்ரமின் முகம் பளிச்சிட்டது. உதட்டோரம் பெரிதாய்ச் சிரிப்பு ஒன்று எட்டிப் பார்த்தது. "அப்படியானால் அங்கேயே வச்சுக்கலாம்னு சொல்லு.."

"எதை..?" ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த அவன் கை இறுகிற்று. பார்வை உயராமல் ஆக்ஸலலேட்டரின் மீதே கிடந்தது.

"ஓபனிங் ஸெரிமெனியை.."

"ம்.."

"நேற்றே சொல்லியிருந்தால் நான் ஓட்டல்லே ரூம் புக் பண்ணியிருக்க மாட்டேன் இல்ல..?"

"கிடக்கட்டும்! ஆயிரம் வீணாகிறது. அதுல இதுவும் ஒன்று. நீ போய்ச் சீக்கிரம் கிளம்பு.."

"இதோ, பத்தே நிமிஷம். பல் தேய்த்துக் குளிச்சு டிரஸ் மாற்றிக்கிட்டுக் கிளம்பிடறேன்."

"குளிக்க வேணாம். அப்படியே டிரஸ் மட்டும் மாற்றி விட்டு வா. அங்கே தான் காட்டேஜ் எடுக்கப் போகிறோமே.. அங்கே போய்க் குளிக்கலாம். அப்டியே முகம் மட்டும் கழுவிக்கிட்டு வா! போதும்.."


"அதுவும் சரிதான். நீ உள்ளே வா. ஒரே நிமிஷத்துல நான் ரெடியாயிடறேன்."

"நான் கார்லேயே உட்கார்ந்திட்டிருக்கேன்."

"இல்லே. நீயும் வாடா. ஒரு கப் காபி குடிச்சிட்டுப் புறப்பட்டு விடலாம்."

கௌரிஷங்கர் மறுவார்த்தை பேசாமல் காரை விட்டிறங்கி அவனுடன் மாடி அறைக்குப் போனான். விக்ரம் டிரஸ் மாற்றுவதற்கு அறைக்குள் நுழைந்து கதவை தாழிட்டுக் கொண்டதும் இவன் சுறுசுறுப்பாக இயங்கினான். டெலிபோனில் அம்மாவின் தனிப்பட்ட எண்களைச் சுழற்றினான். அம்மா வீட்டில் இருக்க வேண்டுமென்றே வேண்டிக் கொண்டான். மறுமுனையில்





சித்ரலேகாவின் குரல் ''ஹலோ'' சொல்ல, சிறிது தயங்கி, ''நான் கௌரி பேசறேம்மா..'' என்றான்.

அவளிடமிருந்து அதற்குப் பதில் வராததால் அவன் உள்ளே இருக்கிற விக்ரமிற்குக் கேட்காத குரலில் உருக்கமாகக் கெஞ்சினான்..

''பேச மாட்டாயாம்மா? பரவாயில்லை. நானே மன்னிப்புக் கேட்டுக்கறேன். நான் செய்த அத்தனை தப்புக்குமாகச் சேர்ந்து ஒரே தரமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடறேன். என்னை மன்னிச்சுடும்மா. ஆனால் இது அத்தனைக்கும் எது அடிப்படைக் காரணம் என்பது உனக்குத் தெரியணும்மா..

உனக்கு மட்டுமில்லை, உன்னை மாதிரி அத்தனை அம்மாக்களுக்கும் விளங்கணும். இவை எல்லாவற்றிற்கும் நீதான் காரணம். உன் அன்பில்லாத, கவனிப்பில்லாத, அரவணைப்பில்லாத என்னுடைய சின்ன வயசு காரணம். அப்போது நான் பார்த்து என் மனசில் பதிந்து போன சில வேண்டாத காட்சிகள் காரணம். நீ வீட்டிற்குக் கூட்டி வந்த மனிதர்கள் காரணம்.. இவை எல்லாவற்றாலும்தான் எனக்குள் இப்படி ஒரு வக்கிரப் புத்தி ஏற்பட்டது. வெறி ஏற்பட்டது, நான் நிலைதடுமாறி நெறி தவறிப் போனேன்.

இப்போ இந்த நிலையில் நம் இரண்டு பேராலும் திருந்தவோ, ஒருத்தரை ஒருத்தர் திருத்தவோ முடியாத நிலையில்.. எனக்கு ஒரே ஒரு வழிதான் தோன்றியிருக்கு. அந்த ஒன்றுதான் இதற்கெல்லாம் முடிவா, தீர்வா தெரியுது. அதைத் தேடித்தான் நான் போயிட்டிருக்கேன். நான் மட்டுமில்லை, இவை எல்லாவற்றிற்கும் என்னுடன் துணையிருந்த விக்ரமையும் கூடக் கூட்டிட்டுத்தான் போறேன். போயிட்டு வரேன்னு சொல்லலேம்மா, வெறும் போறேன்தான், குட்பைம்மா.''

உணர்ச்சி மிகுதியில் உதடுகள் நடுங்கி, கன்னச் சதைகளில் ஒரு துடிப்பு ஏற்பட்டு, கண்களுக்குள் மஸ்லின் திரை விழுந்த மாதிரி மறைக்க, இவன் நடுங்குகிற கையால் ரிஸீவரை வைத்தபோது சித்ரலேகாவின் பதட்டமும், [illegible]மான குரல், ''கௌரிஷ் இரு கௌரிஷ். எங்கேயிருந்து பேசற.. கௌ..''

இவன் ரிஸீவரை வைத்து, டெலிபோனின் தொடர்பைத் துண்டிக்க, அது பொருத்தப்பட்டிருந்த பிளக்கைக் கழற்றி விக்ரமின் கண்களில் படாமல் மறைத்து வைத்தான். தான் இங்கேயிருந்துதான் பேசியிருக்கக் கூடும் என்பதைக் கண்டு பிடித்த அம்மா எந்த நிமிடமும் வந்து விடலாம் என்கிற பயத்தில் விக்ரமை அவசரப்படுத்தினான்.

நிதானமாய்த் தலைவாரி செண்ட் அடித்துக் கொள்ளப் போனவனிடமிருந்து செண்ட் பாட்டிலைப் பிடுங்கிப் படுக்கையில் எறிந்து.. ''ம்! கிளம்புடான்னா நிதானமா மாப்பிள்ளை மாதிரி சிங்காரிச்சுட்டிருக்கே.. என் அவசரம்



புரியாமல்!''

"அப்படி என்னடா அவசரம்..?" என்றவனை, ''வா சொல்றேன். கார்ல போயிட்டே பேசலாம்'' என்று தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்து காரில் தள்ளி, கதவைச் சாத்தி டிரைவிங் ஸீட்டில் உட்கார..

"டேய் காப்பிடா.. காப்பிகூடக் குடிக்கலைடா.." என்று கத்தின விக்ரமை, ''வழியில் குடிச்சுக்கலாம்'' என்று சமாதானப்படுத்தி, காரைக் கிளப்பி வெளியில் வந்து ஆக்ஸலரேட்டரை அழுத்தி எண்பதில் பறக்கத் துவங்க..



**அழிப்பான் கதைகள் 17**

**இரவல் கிடைக்காது. இரவில் கிடைப்பது. அது என்ன?**

**விடை 96ம் பக்கம்**

ராதிகாவின் வீட்டிற்கு நேர் எதிர் திசையில் கார் செல்வதைக் கவனித்த விக்ரம் பதறினான்..

"ஏண்டா இந்தப் பக்கம் போறே.. அவளை பிக்-அப் பண்ணலையாடா?'' என்று விக்ரம் கேட்க, அதற்குள் பீச் ரோட்டைத் தொட்டு விட்ட கௌரிஷங்கர் ஆக்ஸலரேட்டரை இன்னமும் அழுத்தியபடி, ''எவளை?" என்று நிதானமாகக் கேட்டான்.

"ராதிகாவை.."

உதட்டோரச் சிரிப்பில் அவனைத் திரும்பிப் பார்த்து அதற்கு மேல் அடக்கிக் கொள்கிற சக்தியற்றுப் பட்டென்று சொல்லி விட்டான் கௌரிஷங்கர்.

"அவளை நாம் பிக்-அப் பண்ணிக்கலை. அவள் நம்மகூட வரலை."

"நம்மகூட வரலையா? கொஞ்சம் முன்னால வீட்டுல, அவளும் வராள்னு சொன்னியே."

"பொய் சொன்னேன்."

கௌரிஷ் மிகச் சாமர்த்தியமாகத் தன்னை ஏமாற்றி விட்ட ஆத்திரம் தோன்ற, விக்ரம் அவனைப் பார்த்து ஆக்ரோஷமாகக் கேட்டான்..

"எதுக்குப் பொய் சொன்னே?"

"நீ அவள்கிட்டே அப்படி நடக்கிறதில் எனக்கு இஷ்டமில்லை."

"உன் இஷ்டப்படியெல்லாம் நான் நடக்கணும் என்கிற அவசியமில்லை."

"மீதி விஷயங்களில் இல்லாமல் போகலாம். ஆனால் இந்த விஷயத்தில் என் இஷ்டப்படி நடக்கிறதைத் தவிர வேறு வழியில்லை."

"என்ன பயமுறுத்தறியா.. முதல்ல வண்டியைத் திருப்பு. நேரா போய்

ராதிகாவைக் கூட்டிட்டு வா."

"நெவர். இனி நான் போய்க் கூப்பிட மாட்டேன். கூப்பிட்டாலும் அவள் வர மாட்டாள்."

"ஏன் வர மாட்டாள்?"

"அத்தனை உண்மையையும் சொல்லி அவளுக்குக் கடிதமாக எழுதிக் கொடுத்தனுப்பியிருக்கிறேன். இத்தனை நேரம் அந்த லெட்டர் அவ கையில் போய்ச் சேர்ந்திருக்கும். எத்தனை பெரிய ஆபத்திலேர்ந்து தப்பிச்சிருக்கோம்னு புரிஞ்சிட்டிருப்பா."

முகம் முழுவதும் ஜிவுஜிவுவென்று சிவக்க ஆத்திரத்தின் உச்சத்திலிருந்த விக்ரம், ''யூ பாஸ்டர்ட்! வண்டியைத் திருப்புடா ராஸ்கல்..'' என்று கௌரிஷங்கரின் மீது பாய்ந்து ஸ்டியரிங்கைத் திருப்ப..

கௌரிஷங்கர், ''என் உயிர் போனாலும் திருப்ப மாட்டேன்'' என்று பிடிவாதமாய் அவன் கையை உதறி, தான் ஸ்டியரிங்கைப் பற்றிக் கொள்ள முயல..

அந்தப் போராட்டத்தின் உச்சமாய் ஆக்ஸலரேட்டரில் கால் இன்னமும் அழுத்தப்பட, கோணல் மாணலாக அதிவேகமாக ஓடின அந்தச் சின்ன பியட், எதிரில் அதே ராட்சச வேகத்தில் சவுக்குக் கட்டைகளை ஏற்றிக் கொண்டு வந்த லாரியின் மீது மோதி உருத்தெரியாமல் நசுங்கி, லாரியுடனே சில கெஜங்கள் இழுத்துச் செல்லப்பட்டு, பின் தலைகீழாய்க் கவிழ்ந்த அதே நேரத்தில்.....

சித்ரலேகாவும், விக்ரமின் அப்பாவும் வீட்டிற்கு வந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் எப்படியாவது தங்கள் மகன்களை கண்டுபிடித்து, தடுத்து நிறுத்தி வீட்டிற்கு அழைத்து வந்து விடச் சொல்லி கெஞ்சிக் கொண்டிருந்தார்கள்.

13

என்றைக்கும் இல்லாத சீக்கிரமாக அன்று விடியற்காலையிலேயே விழிப்புக் கொடுத்து விட்டது ரகுராமனுக்கு. ஆனாலும் கண்களைத் திறக்காமல் கட்டை மாதிரி படுத்துக் கிடந்தான் அவன். அதுபோல் மனதைக் கட்டையாகக் கிடத்த முடியவில்லையே என்று நினைத்துக் கொண்டான். நினைவுகளைக் கொல்ல முடியவில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டான். திரும்பத் திரும்ப முந்தின நாள் நிகழ்ச்சி வந்து அலைக்கழித்தது. விக்ரம் பேசினது, தன்னையும் ராதிகாவையும் இணைத்து தவறாகச் சொன்னது, 'எப்படியும் அவளை அடையாமல் விடப் போறதில்லை' என்று சபதமிட்டது. பின்னர் கௌரிஷங்கர் அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளச் சொன்னது..



ஒவ்வொன்றாய் நினைத்து, நினைத்து அவன் பெருமூச்சு விட்டான். இனி எதுவும் அவன் கையில் இல்லை. விஷயங்கள் அவன் சக்திக்கும் முயற்சிக்கும் அப்பாற்பட்டதாகி விட்டன. அவன் தன்னால் இயன்றவரை தடுத்துப் பார்த்து விட்டான். இத்தனை நாள் பட்ட நன்றிக் கடன், கடமை இரண்டிற்காக மட்டுமின்றி, அடிமனதில் யாருக்கும் தெரியாமல் மிக மிக ஆழமாக.. அவனாலேயே கூட இனம் பிரிக்க முடியாத அளவில் ராதிகாவின் மீது கொண்டிருந்த அந்த ரகசியமான அன்பினாலும் சேர்ந்தே போராடிப் பார்த்துத் தோற்றுப் போய் விட்டான். இதற்கப்புறம் எது நடந்தாலும் அது கடவுளின் விருப்பம். அல்லது முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டு விட்ட விதி... அதிலிருந்து தப்ப யாராலும் முடியப் போவதில்லை.

ஆனாலும் ஒரே ஒரு ஆறுதலான விஷயம்.. செய்கிற பிரார்த்தனைக்குச் சிறிது வலிமை இருக்கும் என்கிற நம்பிக்கைதான். கொடூரமான விபத்தைக் குறைத்துச் சின்ன சாதாரண விபத்தாக மாற்றக் கூடிய சக்தி அதற்கு உண்டு என்பதுதான். இனி அந்தப் பிரார்த்தனையைத் தவிர வேறு வழியில்லை!

ரகுராமன் கண்களை மூடியபடியே காமாட்சியம்மனை நினைவில் கொண்டு வந்தான். நினைவிலேயே பாதங்களைத் தொட்டு ஒற்றிக் கொண்டான். சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து வேண்டிக் கொண்டான்..

'ராதிகா மாற வேண்டும், அவளுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படக் கூடாது. மானபங்கம் எதுவும் நேரிடக் கூடாது. திடீரென்று ஏற்பட்ட இந்தக் கெட்ட சிநேகிதங்கள் எல்லாம் ஒழிந்து அவள் நல்லபடியாக இருக்க வேண்டும். நன்றாகக் கல்யாணம் பண்ணிக் கொண்டு அமைதியாகக் குடும்பம் நடத்த வேண்டும்..'

இதையே திரும்பத் திரும்ப வேண்டிக் கொண்டான். ஒருமுறை இல்லை, இரண்டு முறை இல்லை, மூன்று, நான்கு, ஐந்து என்று பலமுறைகள்.. பின் சுமார் ஆறரை மணியளவில் கடைப் பையன் வந்து கடை சாவிக்காகக் கதவைத் தட்ட, எழுந்து போய் எடுத்துக் கொடுத்தான்.

"இன்னிக்கு எனக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை. நான் நேரம் கழித்துதான் வருவேன். அதுவரை கடையை ஜாக்கிரதையாகப் பார்த்துக்க..." என்று சொல்லி அனுப்பி விட்டு, பின்பக்கம் பல் துலக்கப் போனபோது, ராதிகா குளியல் அறையிலிருந்து பாட்டுப் பாடுவது கேட்டது. உற்சாகமாகக் குரல் வந்தது. பழைய தமிழ்த் திரைப்படம் ஒன்றின் காதல் பாட்டு. அதை உணர்ச்சிப் பூர்வமாகப் பாடிக் கொண்டிருந்தாள்.

கேட்டுக் கொண்டே பல் துலக்கிவிட்டு உள்ளே வந்த இவனிடமிருந்து ஆழமான பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. அத்தை கொடுத்த காப்பியைக் குடித்து விட்டு, செய்தித்தாள் படிக்க வாசல் பக்கம் போனபோது வராந்தா

கதவோரம் யாரோ ஒருவன் தயங்கியபடி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான்.

"யாரு..?" மிகவும் சலிப்பாகவும் அசிரத்தையாகவும் கேட்டான் இவன்.

"நான் சித்ரலேகா வீட்டுலேர்ந்து வரேன்..."

"எந்த சித்ரலேகா..?" இவன் மீண்டும் ஞாபக மறதியாய்க் கேட்க, வந்தவன் தயங்கித் தயங்கி பதில் சொன்னான்.

"ஆர்டிஸ்ட்டுங்க.. நடிகை சித்ரலேகாங்க.."

ரகுராமனின் முகம் சுணங்கிற்று. குரலில் வெறுப்பு எட்டிப் பார்த்தது.

"என்ன..?"

"இதுதானுங்களே ரகுராமன்றவர் வீடு...?"

"ஆமாம்.."

"கௌரிஷ் அய்யா லெட்டர் கொடுத்தனுப்பி இருக்காரு."

"யாருக்கு..?

"ரகுராமன்றவருக்கு.."

"என்ன..? என்ன?!" அவன் நம்ப முடியாமலும் சந்தேகமாகவும் கேட்டான்.

"ஆமாங்க. இந்த விலாசத்துல ரகுராமன்னு ஒருத்தர் இருப்பாரு. அவர்கிட்ட நான் கொடுத்ததாகச் சொல்லி இந்த லெட்டரைக் கொடுத்துட்டு வாடான்னு அய்யாதாங்க அனுப்பினாரு."

"கௌரிஷங்கரா..?"

"ஆமாங்க.."

ரகுராமன் கடித உரையை வாங்கிக் கொண்டான், ஒட்டப்பட்டிருந்தது, விலாசப் பகுதியில் அவன் பெயர் மட்டும் எழுதப்பட்டிருந்தது. தயக்கமும், திகைப்புமாக உரையைக் கிழித்தபோது, வந்தவன்,

"அப்போ நான் வரட்டுங்களா..?" என்று விடைபெற்றுக் கொள்ள, இவன் வெறுமனே தலையசைத்து அனுப்பி விட்டு, உரையிலிருந்த கடிதத்தை எடுத்துப் பிரித்தான்.

கிட்டத்தட்ட நாலைந்து பக்கக் கடிதம், ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. மிகவும் மரியாதையாகப் 'பெரும் மதிப்பிற்குரிய திரு. ரகுராமன் அவர்களுக்கு'



என்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இவன் தனக்குள் ஏற்பட்ட ஆர்வத்தையும், வேகத்தையும் அடக்கிக் கொண்டு நடை ஓரமாக இருந்த திண்ணையில் உட்கார்ந்து சுவரில் முதுகைச் சரித்துக் கொண்டு படிக்கத் தொடங்கினான்.

'பெரு மதிப்பிற்குரிய திரு. ரகுராமன் அவர்களுக்கு..

### அழிப்பான் கதைகள் 18



**மரத்துக்கு மேலே பழம். பழத்துக்கு மேலே மரம். அது என்ன?**

**விடை 96ம் பக்கம்**

இந்தக் கடிதத்தைப் படிக்கிற நேரத்தை வீண் என்று கருத மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். கோபத்தில் படிக்காமல் கசக்கிக் குப்பைத் தொட்டியில் எறிந்து விட மாட்டீர்கள் என்றும் நம்புகிறேன். நேற்று நீங்கள் என் வீட்டைத் தேடி வந்தபோது நடந்த சில சம்பவங்களுக்காக வருத்தப்படுகிறேன். 'அதற்காக மட்டும்தான் வருத்தப்படுகிறாயா?' என்று கேட்டு விடாதீர்கள். எல்லாவற்றிற்காகவும் வருத்தப்படுகிறேன். என்னுடைய செய்கைகள் ஒவ்வொன்றிற்காகவும் வேதனைப்படுகிறேன். நான் செய்திருக்கிற தவறுகள், ஒன்றா, இரண்டா...? தீண்டின பெண்கள் நாளுக்கு ஒருவராக, வரிசையாக, வீட்டிற்குள்ளேயே என் படுக்கை அறைக்கே வரவழைத்து..

இதையெல்லாம் நான் மட்டும் தனியாகப் பண்ணவில்லை. விக்ரமும் கூடச் சேர்ந்துதான் பண்ணினான். என்னோடு எல்லாவற்றிற்கும் துணை வந்தான். அவனுக்கு நான் துணையா..? எனக்கு அவன் துணையா என்பதுதான் இப்போது புரியவில்லை. யார், யாருக்குத் துணையானாலும் செய்த அத்தனையும் மன்னிக்க முடியாத தவறுகள்தான். எல்லாவற்றிற்கும் மேலாக ராதிகாவிற்குச் செய்ய நினைத்தது மிகப் பெரிய குற்றம். நல்ல காலமாக நினைப்பளவிலேயே அது நின்று போயிற்று... செய்கைக்குக் கொண்டு வராமல் தடுக்க வைத்தது, நேற்று நீங்கள் வீட்டைத் தேடி வந்து பேசின பேச்சுக்கள்தான். நீங்கள் என் மனத்தை முற்றிலும் மாற்றி யோசிக்க வைத்தீர்கள். அந்தத் தீவிர யோசனையின் பலனாகத்தான் நான் இந்த முடிவிற்கு வந்தேன்.

நிஜமாகச் சொல்வதானால் நீங்கள் வந்து நேற்று பேசியிராத பட்சத்தில் ராதிகாவிற்கு அந்தப் பயங்கர விபத்து நடந்திருக்கக் கூடும். எனக்கு அந்த எண்ணம் அவ்வளவு தீவிரமாக இல்லாது போனாலும் அதில் மிகத் தீவிரமாக இருந்தவன் விக்ரம்தான். நேற்று கூட உங்களிடம் சவால் விட்டவன். இன்று எப்படியும் அந்த விபத்தை நடத்தியே தீருவதென்று ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலில் அதற்காக அறை பதிவு பண்ணியிருப்பவன். என்னையே போய் அவளைக் கூட்டிக் கொண்டு வர ஏற்பாடு பண்ணியிருப்பவன்..

உங்கள் குடும்பத்தில் ஏற்பட்டிருக்கிற இத்தனைப் பிரச்சனைகளுக்கும்,

குழப்பங்களுக்கும் மூல காரணமே அவன்தான். முதல் முதலாக, கல்லூரிக்கு நடந்து போய்க் கொண்டிருந்த ராதிகாவைக் காட்டினது அவன். அவளை நெருங்கிப் பேசச் சொல்லி, காதலிக்கிற மாதிரி நடிக்கச் சொல்லி, 'இந்தக் காதல் என்கிற சாஸ்திரத்திற்குத்தான்டா இது போன்ற நடுத்தர வர்க்கங்கள் விழும்' என்று நடிக்க வைத்து, அவளை அழைத்துக் கொண்டு ஓட்டல், சினிமா, பீச் என்று சுற்ற வைத்து..

இதில் என் பங்கு ஒன்றுமில்லை என்று நான் சொல்லிக் கொள்ளவில்லை. எனக்கும் இவை அத்தனையிலும் பாதிப் பொறுப்பு உண்டுதான். நானும் கெட்டவன்தான். நிறைய பெண்களோடு இருந்தவன். குடிகாரன், ஆனால் இதுவரை எந்தப் பெண்ணையும் அவள் விருப்பப்படாமல் தொட்டதில்லை. பலாத்காரம் பண்ணினதில்லை. ஏமாற்றினதில்லை..

முதன் முதலாக நான் ஏமாற்ற முயன்றது உங்கள் ராதிகாவைத்தான். அதுகூட இப்போது ஏற்பட்ட இந்தத் தெளிவும் சிந்தனையும் அப்போது இருந்திருந்தால் நிச்சயம் இத்தனை கஷ்டங்களைத் தவிர்த்திருக்கலாம். ஆரம்பத்தில் ராதிகாவின் அழகு, என்னை ஈர்த்த காரணத்தினால் நான் அப்படி ஒரு பொய்யைச் சொல்லி விட்டேன். அதற்கப்புறம், நாளாக ஆக எல்லாவற்றின் மீதும் எனக்குள் ஒரு வெறுப்பு ஏற்படத் துவங்கிற்று. என் வீடு, அம்மா, பணம், பெண்கள், விக்ரம்.. கடைசியாக அந்த வெறுப்பு ராதிகாவரை வந்து விட்டது. வெறும் உடலால் அவளை அடைய நினைத்த அந்த நினைப்பே எனக்குள் வெறுப்பை ஏற்படுத்தியது. அதற்காகச் சொன்ன பொய்கள், நடித்த நடிப்புகள், போன இடங்கள்..

ராதிகா மட்டுமில்லை, வேறு எந்தப் பெண்ணையும் என்னால் நேசிக்க முடியாது. அன்பு காட்ட முடியாது. காதலிக்க முடியாது. கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாது. காரணம் அதற்கெல்லாம் நான் அருகதை அற்றவன் என்பதைத் தவிர, பெண்களையும் வெறுக்கிறேன். என் அம்மா உள்பட.. முக்கியமாக இந்த வெறுப்பும், பழிவாங்குகிற குணமும் என் அம்மாவினால்.. அம்மா மூலமே ஆரம்பித்தது.

ஆனால், அவளை மட்டும் காரணமாக்க நான் விருப்பப்படவில்லை. அப்படிச் சொன்னால் அது தப்பித்துக் கொள்ள நினைக்கிற ஒரு வழி. அம்மா, அப்பாவின் கண்காணிப்பில்லாத, அன்பு கிடைக்காத அத்தனைக் குழந்தைகளும் இப்படித்தான் மாறியிருக்கிறார்களா என்றால் இல்லை. நல்லபடியாக, பொறுப்புள்ளவனாக, தன் நிலை அறிந்தவனாக, கண்ணியமும், கௌரவமும் நிறைந்தவனாக எத்தனை பேர் வளரவில்லை? உதாரணத்திற்கு உங்களையே எடுத்துக் கொள்ளலாமே.

நீங்களும் பெற்றவர்களின் அன்பை அறியாதவர் என்று கேள்விப்பட்டேன். மாமாவின் மறைவிற்குப் பின்னர் பொறுப்பாகக் கடையையும், குடும்பத்தையும் நிர்வகிக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன்... இவை அத்தனையும் எனக்கு



இருந்திருக்கக் கூடாதா என்று இப்போது ஏக்கப்படுகிறேன். காலம் கடந்து ஏற்படுகிற இந்த ஏக்கத்தினால் யாருக்கு என்ன பிரயோஜனம் சொல்லுங்கள்...

எனக்காவது காலம் கடந்தாவது ஏற்பட்டிருக்கிறது. ஆனால் விக்ரமிற்கு எப்போதும் எந்த ஞானமும் ஏற்படாது என்றே தோன்றுகிறது. மிதித்த சேற்றையும், சகதியையும் விட்டு அவன் வெளி வர மாட்டான் என்றும் நம்ப வேண்டியிருக்கிறது. பேசிப் பார்த்ததில் மேலும், அந்தப் புதைகுழியில் அழுந்தத்தான் ஆசைப்படுகிறானே தவிர, வெளியில் வருகிற எண்ணமே இல்லை.

அதனால் அவனை விட்டு விட்டு நான் மட்டும் போவதில் எந்தவித அர்த்தமும் இல்லை. இத்தனை நாட்கள், இத்தனை விஷயங்களுக்குத் துணையாக நின்றவனை இப்போது இந்தக் கடைசி யாத்திரைக்கும் துணையாக அழைத்துப் போகிறேன். இனி திரும்புகிற உத்தேசம் இல்லை.

போகும் முன் ராதிகாவிடம் ஒன்று சொல்லிக் கொள்ள நினைக்கிறேன். கண் சிமிட்டுவதெல்லாம் வெறும் மின்மினிப் பூச்சிகள்தான். நட்சத்திரங்களில் சில என்பதைத் தெரியப்படுத்த நினைக்கிறேன். இந்தக் கடிதத்தை அவளிடம் காட்டுங்கள். படித்த பின்பு அவள் தானாகத் தெரிந்து கொள்வாள். வாழ்க்கைக்கு வேண்டியது நட்சத்திரமில்லை என்பதைப் புரிந்துகொள்வாள். நட்சத்திரங்களே தேவையில்லை என்கிறபோது மின்மினிப் பூச்சிகளின் பின்னால் போனது எத்தனை பெரிய தவறு என்பதை உணர்ந்து கொள்வாள். பாதுகாப்பும் வெளிச்சமும் மிகுந்த சூரியன்தான் அத்தியாவசியம் என்பதைத் தெரிந்து கொள்வாள்.

சூரியன் இருக்கிறபோது அனேகமாகத் தவறுகள் நடப்பதில்லை. இருட்டு ஏற்படுவதில்லை. பயம் வருவதில்லை. அந்த வெளிச்சத்திற்கும், உஷ்ணத்திற்கும் முன்பு வெறும் நட்சத்திரங்களும் சந்திரனுமே இருக்கிற இடம் தெரியாமல் மறைகிறபோது, இந்த மின்மினிப் பூச்சிகளால் எங்கிருந்து நிற்க முடியும்? சூரியனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு மின்மினிப் பூச்சியின் கண் சிமிட்டலுக்கு ஆசைப்பட்ட அறியாமையை என்ன சொல்வது...? அது வெறும் அறியாமைதான் என்பதை நீங்கள் புரிந்து கொண்டால் சரி. நீங்களே புரிந்து கொள்ளவில்லை என்றால் வேறு யார் புரிந்து கொள்வார்கள்...? நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால் வேறு யார் புரிந்து கொண்டுதான் என்ன...?

– கௌரிஷங்கர்

படித்து முடித்தவுடன் ரகுராமனை அதிர்ச்சிதான் முதலில் தாக்கியது. பின்னர் மனம் நெகிழ்ந்து போய் கண்ணோரம் நீர் கட்டியது. ஒரு வினாடி என்ன செய்வது என்று புரியாமல் நின்றிருந்தான். பின்னர் பரபரவென்று உள்ளே போய் சட்டையை மாட்டிக் கொண்டு, கடிதத்தை மடித்துச் சட்டைப் பையில் செருகிக் கொண்டு யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல், நடையை

வல்லமை தாராயோ இந்த
மா-நிலம் பயனுற வாழ்வதற்கே..

தேவதையின்
# கொலுசு

மணி: 1 இசை: 7

நிறுவனர்
**டாக்டர் திரிசக்தி சுந்தர்ராமன்**

திரிகுஜா பப்ளிகேஷன்ஸ் பி. லிமிடெட்டுக்காக, ராசி கிராஃபிக்ஸ் பி.லிட்., எண் 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 14-ல் அச்சிட்டு.

**வெளியிடுபவர்**
எஸ்.மதன்சந்தர்

**கௌரவ ஆசிரியர்**
நளினி சுந்தர்ராமன்

**ஆசிரியர்**
ஜயாமலர்

**பொறுப்பாசிரியர்**
ரா.கோகுலவாச நவநீதன்

**வடிவமைப்பு**
செ.இன்பராஜ்

**எல்லாத் தொடர்புகளுக்கும்:**
'தேவதையின் கொலுசு' மாத நாவல்,
திரிசக்தி குழுமம்,
எண்: 56/21, முதலாவது அவென்யூ,
சாஸ்திரி நகர், அடையாறு,
சென்னை-20.
தொ.பே. எண்: +91-44-4297 0800
**சந்தா விபரங்களுக்கு: 9566112266**
**இ-மெயில்:** kolusudesk@gmail.com
subscription.trisakti@gmail.com



- கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு 'கொலுசு' நிர்வாகம் பொறுப்பல்ல!
- தேர்வாகாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. எனவே, படைப்புகள் அனுப்புவோர் தங்கள் வசம் ஒரு பிரதி வைத்துக் கொள்ளவும்.


# அழிப்பான் கதைகள்

## விடைகள்

1. கடிகாரம்
2. தபால்
3. நிலா
4. கடல்
5. தீப்பெட்டி
6. பெட்ரோல்
7. தேங்காய்
8. ரயில்
9. மனம்
10. வானம்
11. காளான்
12. காலண்டர்
13. தபால்
14. பருத்தி
15. எறும்பு
16. பென்சில்
17. தூக்கம்
18. அன்னாசிப் பழம்

- கவிதாசிவமணி,
புன்செய்புளியம்பட்டி





விட்டு சைக்கிளை இறக்கி வேகமாக மிதித்து, சித்ரலேகாவின் வீட்டை நெருங்கினபோது கூட்டமாக இருந்தது.

இவன் வயிற்றுக்குள் பய உணர்வு தோன்ற வாசற்கதவை நெருங்கி கூட்டத்திலிருந்த ஒருவனைக் கேட்டான்.

"என்னப்பா..?"

"சித்ரலேகாவோட மகன் காலைல லாரி மோதி தூள் தூளாக நொறுங்கிப் போயிட்டானாம்.."

"யாரு சொன்னாங்க..?"

"கூர்க்கா.. உள்ளே ஒரே போலீசா இருக்குதுங்க.."

"அந்தப் பையனுடைய உடம்பை உள்ளே வச்சிருக்காங்களா..?"

"ம்ஹூம். ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போயிட்டதா சொல்றாங்க.."

"கூட இன்னொரு பையனும் இருந்தானாம். கார் அப்பளமாக நொறுங்கிடுச்சாம். ரெண்டு பாடியும் போஸ்ட்மார்ட்டத்திற்கு எடுத்துப் போயிருக்கிறதாச் சொல்லிக்கிறாங்க.."

ரகுராமன் ஒரு ஆழமான பெருமூச்சோடு உடம்பும் மனசும் தளர, சைக்கிளை மிதித்துக் கொண்டு திரும்பி வீட்டிற்கு வந்தபோது, கூடத்து சுவரில் கண்ணாடியை மாட்டி விட்டு ராதிகா அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்தாள். இவன் அருகில் போய் மௌனமாய்த் தலைகுனிந்து நின்றான். வேண்டுமென்றே கவனிக்காத மாதிரி பவுடர் பூசி முடித்து, பொட்டிட்டுக் கொள்கிற வரை காத்துக் கொண்டு நின்று, பின்னர் கடிதத்தை நீட்டினான்..

அவள் கள்ளென்று முகத்தை வைத்துக் கொண்டு "என்ன..?" என்றாள்.

"இதைப் படிச்சுப் பாரு.."

"என்னது..?"

"லெட்டர்.."

"யாருடையது..?"

"கௌரிஷங்கருடையது"

"கௌரிஷங்கருடையதா..?"

அவள் கடும் கோபத்தில் புருவங்கள் சுருங்க அவனைப் பார்த்தாள்.

"என் லெட்டரை நீங்க எப்படிப் படிக்கலாம்..?"

"லெட்டர் எனக்கு எழுதியிருக்கு."

"என்ன..?"– அவள் தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு கடிதத்தைப் படித்து முடிக்கிறவரை அவன் அமைதியாகவே நின்றான். அவள் ஒருதரம் படித்து முடித்து, பயமும், பதட்டமுமாக அவனை நிமிர்ந்து பார்த்து, பின் இன்னொரு முறை படிக்க ஆரம்பித்தாள். படிக்கிறபோது முகம் கோணிற்று.

"கடைசி.. யாத்திரைனால்.. எ..ன்ன அர்த்தம்?"

அவள் குரல் கரகரக்கக் கேட்டதும் அவன் மெலிசாய் சொன்னான்..

"அதைத் தெரிஞ்சுக்கத்தான் கொஞ்சம் முன்னால நான் கௌரிஷங்கர் வீடு வரைக்கும் போயிட்டு வந்தேன். வாசல் கொள்ளாத கூட்டம். விசாரித்ததில் எல்லாம் முடிஞ்சு போயிட்டதுன்னு தெரிய வந்தது. லாரி மோதி கார் நொறுங்கிப் போயிடுச்சாம். இரண்டு பேர் உடம்பையும் போஸ்ட்மார்ட்டத்திற்குக் கொண்டு போயிருக்கிறதாகச் சொல்றாங்க.."

அவள் ஒரு வினாடி மௌனமாய் நின்றிருக்க அவனே மீண்டும் கேட்டான்.. "உனக்குப் பார்க்கணுமா..? நான் கூட்டிட்டுப் போறேன்.."

"இல்லே, வேண்டாம்" என்று தீர்க்கமாகத் தலையசைத்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

மீண்டும் துண்டையும் மடித்துப் போடப்பட்டிருந்த பாவாடை, தாவணியையும் தள்ளி எடுத்துக் கொண்டபோது, ஒன்றும் புரியாதவனாகக் கேட்டான் அவன்.

"எங்கே போறே ராதிகா...?"

"தலை முழுகறதுக்கு"

ஒரு வார்த்தை பதிலாகச் சொல்லி விட்டு, பின்னிய தலையை அவிழ்த்து விட்டுக் கொண்டு அவள் கொல்லைப்புற குளியலறையை நோக்கிப் போக...

பலவித உணர்ச்சிகளால் தாக்கப்பட்டு அவள் போனதைப் பார்த்தவாறு அப்படியே நின்றிருந்தான் ரகுராமன்.

(முற்றும்)

Published & Printed by **S.MADANCHANDER**, on behalf of Giriguja Publications Pvt. Ltd., from 56/21, Giriguja Enclave, Sastri Nagar, First Avenue, Adyar, Chennai-20 and printed at RASI GRAPHICS PVT. LTD., # 40, Peters Road, Royapettah, Chennai -600 014.
Editor: **S.DAYAMALAR** Email: kolusudesk@gmail.com



